இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


விலை - 20
பக்கங்கள்: 28+2

சுடர் 32 | கதிர் 153 | வள்ளுவராண்டு 2048 | சித்திரை 15 வெள்ளிக்கிழமை 28.04.2017

## அமெ. கடற்படைக்கு திருமலையில் முகாம்

திஸ்ஸ விதாரண தகவல்

கொழும்பு, ஏப் 28
திருகோணமலையில் கடற்படை முகாம் ஒன்றை அமைப்பதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.
அமெரிக்காவும் இலங்கையும் இது தொடர்பான இணக்கப்பாட்டை எட்டியுள் ளன என்றும் அவர் கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: >> 23



# வடக்கு - கிழக்கு எங்கும் நேற்று முழு அடைப்பு

## போருக்குப் பின்னான வரலாற்றில் பெரும் எழுச்சி இயல்பு வாழ்க்கை முற்றாக முடக்கம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28
தமிழர் தாயகப் பகுதியான வடக்கு - கிழக்கு நேற்று நடந்த கடையடைப் போராட்டத்தால் முற்றாக முடங்கியது. நகர்ப் பகுதிகள் மாத்திரமன்றி கிராமப் புறங் களும் வெறிச்சோடின. கடையடைப்புக்கு முழு ஆதரவை வழங்கி மக்கள் வீடுகளுக்குள் முடங்கியதால் போராட்டம் முழு வெற்றியைக் கொடுத்தது.
முன்னைய காலங்களைவிடவும் நேற்றைய கடையடைப்பு உணர்வுபூர்வமானதாகவும், அரசின் கவனத்தை ஈர்ப்பதாகவும் அமைந் தது என அவதானிகள் தெரிவித்தனர்.
வர்த்தக நிலையங்கள், தனியார் நிலையங் கள் பல இழுத்து மூடப்பட்டன. போக்குவரத்து இடம்பெறாமையால் சாலைகள், நகர்கள், சந்தைகள் வெறிச்சோடின. பாடசாலைகள் திறக்கப்பட்டபோதும் மாணவர்கள் செல்ல வில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களை ஒப்படைக்கவேண்டும். அவர்கள் பற்றிய தக வல்களை வெளிப்படுத்தவேண்டும் என்று உறவினர்கள் கோரியுள்ளனர். அதேபோன்று தமது காணிகளைப் படையினர் விடுவிக்க வேண்டும் எனக் கோரி பல >> 21

## ஏ-9 வீதியை மூடினர் மக்கள்



யாழ்ப்பாணம், ஏப். 28
தமிழர் தாயகத்தில் நேற்று நடந்த கடையடைப் பின்போது கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் ஏ-9 வீதியை மூடி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் அந்த வீதியூடான போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டது. வீதிக்குக் குறுக்காக மக்கள் அமர்ந்திருந்து போக்குவரத்தைத் தடை செய்து போராட்டத்தில் ஈடுபட்டனர். சில மணி நேரத்தின் பின்னரே பலத்த சிரமத்தின் மத்தியில் ஏ-9 வீதியூடான போக்குவரத்து சீராக்கப்பட்டது. பொலிஸார் கோரியதையடுத்து அவர்கள் >> 23

## காணாமற்போனோரின் உறவுகள் முல்லையில் நேற்று கவனவீர்ப்பு



முல்லைத்தீவு, ஏப். 28
முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்றுக் கவனவீர்ப்பில் ஈடுபட்டதோடு அரச தலைவர் உள்ளிட்ட 4 அரசியல் தலைவர் >> 21

## காணிகளை விரைந்து விடுவியுங்கள்

கேப்பாபிலவு மக்கள் மைத்திரிக்கு அவசர கடிதம்

முல்லைத்தீவு, ஏப். 28
"முகாம் வாழ்க்கையால் எங்கள் பிள்ளைகளின் கல்வி, கலாசாரம், பண்பாடுகள், விழுமி >> 21

ஐரோப்பிய நாடாளுமன்றத்தில்

## இலங்கைக்கு எதிரான தீர்மானம் தோல்வியில்

கொழும்பு, ஏப். 28
ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன் றத்தில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தோல் வியைச் சந்தித்துள்ளது.
இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச் சலு கையை மீள வழங்கக்கூடாது என்று கோரி 52 ஐரோப்பிய ஒன்றிய நாடா ளுமன்ற உறுப்பினர்கள் >> 22

## இராணுவ பஸ் மீது கல் வீச்சு தாக்குதல்

முல்லைத்தீவில் நேற்றிரவு சம்பவம்

முல்லை, ஏப். 28
முல்லைத்தீவில் இ ரா ணு வ பேருந்து மீது நேற் றிரவு கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப் பட்டதாகத் தெரி விக்கப்பட்டது.
>> 04

## காணாமற்போனோரின் உறவினர்களுக்கு அரசு ஆறுதல் கூறவேயில்லை

வடக்கு முதலமைச்சர் மனவருத்தம்

யாழ்ப்பாணம் ஏப் 28
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு அரசு இது வரை எந்தவித ஆறுதல் வார்த்தைகளும் கூறாதமை மன வருத்தம் தருகிறது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் >> 24

## மைத்திரியை சந்திக்கிறார் பொன்சேகா

நாட்டில் இராணுவ ஆட்சி மலராது எனவும் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 28
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை >> 21





## கடையடைப்புக்கு ஆதரவாக சபை அமர்வும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப் 28

கடையடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வை அடுத்த மாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் அவைத் தலைவர் சி.வி.கே சிவஞானம். வடக்கு - கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அழைப்பின் பேரில் முழு அடைப்புப் போராட்டம் நேற்று நடைபெற்றது. இந்தப் போராட்டத்துக்கு வடக்கு மாகாண சபையும் முழு ஆதரவை வழங்கியது.

நேற்றைய சபை அமர்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உரையாற்றினார். அவரின் உரையைத் தொடர்ந்து மாகாண சபை அமர்வை அடுத்த மாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக அவைத் தலைவர் அறிவித்தார். (த-8)

## இந்தியாவிலிருந்து மன்னாருக்கு பெரிய வெங்காய விதை கடத்தல்

### ஐவர் நேற்றுக் கடற்படையால் கைது

யாழ்ப்பாணம், ஏப். 28

இந்தியாவில் இருந்து கடத்திவரப்பட்ட 942 பெரிய வெங்காய விதைப் பைக்கற்றுக்களைக் கடற்படையினர் நேற்று முன்தினம் கைப்பற்றினர். இவற்றைக் கடத்திய குற்றச்சாட்டில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

இது குறித்துக் கடற்படையினர் தெரிவித்ததாவது:

இந்தியாவில் இருந்து கடத்திவரப்பட்டு வாகனத்தில் ஏற்றப்பட்ட 942 பெரிய வெங்காய விதைப்பைக்கெற்றுக்கள்நேற்று முன்தினம் அதிகாலை மன்னார் சிலாவத்துறைப் பகுதியில் வைத்துக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன. ஒவ்வொரு பைக்கற்றுக்களும் 500 கிராம் நிறையுடையவையாகும். மொத்தம் 471 கிலோ கிராம் பெரிய வெங்காய விதைகள் கைப்பற்றப்பட்டன.

இவற்றைக் கடத்தப் பயன்படுத்தப்பட்ட வடி ரக வாகனத்துடன் திருகோணமலை மற்றும் குருநாகல் பகுதிகளைச் சேர்ந்த 5 பேரும் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தடயப் பொருள்களுடன்சிலாவத்துறைப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டனர் - என்றனர். (த-101)

## பிரதேச செயலர்களுக்கு உள்ளக இடமாற்றங்கள்

மன்னார் மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் 10 பிரதேச செயலாளர்களுக்கு நேற்று முன் தினம் ஒரே நாளில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் உள்ளக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றங்கள் தொடர்பான அறிவுறுத்தல் கடிதங்கள் நேற்றுமுன்தினம் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதன்படி மன்னார் மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 4 பிரதேச செயலாளர்களுக்கு உள்ளக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர்களில் 6 பிரதேச செயலாளர்களுக்கு உள்ளக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இடமாற்றங்கள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையிலேயே வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது (த-101)

## வடமாகாணப் பாடசாலைகளில் கைரேகை நேரப் பதிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கைரேகை நேரப் பதிவு இயந்திரங்களின் செயற்பாடு நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பமாகியது.

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு அமைய 1 சி தரப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் வரவைப் பதிவு செய்வதற்காக கைரேகை நேரப் பதிவு இயந்திரங்கள் பாடசாலைகளில் பொருத்தப்பட்டிருந்தன. நேற்றுமுன்தினம் இரண்டாம் தவணைக்காகப் பாடசாலைகள் ஆரம்பமானபோது கைரேகை நேரப் பதிவுச் செயற்பாடும் ஆரம்பமாகியது. (த-4-17-108)

### கால்நடைகள் கடத்தலைத் தடுக்கும்

# உதவிப் பொலிஸ் அதிகாரிக்கு எதிராக அவதூறுப் பரப்புரை

### தீவகச் சிவில் சமூகம் கண்டிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 28

கால்நடைகளை இறைச்சியாக்கிக் கடத்தும் கும்பல்களைக் கட்டுப்படுத்தும் தீவகப் பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை இடமாற்றும் நோக்குடன் அவருக்கு எதிராக அவதூறுப் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அவர் மீது பொய்யான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ள தீவகச் சிவில் சமூகம், அவரைத் தொடர்ந்தும் தீவகத்தில் பணியாற்ற அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் தீவக சிவில் சமூகத்தினரால் அனுப்பப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தீவகத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் நான்கு முக்கிய பிரச்சினைகளை எதிர்கொண்டனர். தீவகத்தில் உள்ள கால்நடைகள் இறைச்சிக்காக யாழ்ப்பாண நகருக்குத் தரை, கடல் மார்க்கமாக கடத்தப்பட்டன. சட்டவிரோதமாகப் பனை மரங்கள் தறிக்கப்பட்டன. சட்டவிரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டது. கொலை, கற்பழிப்பு, களவு என்று சமூகவிரோதச் செயல்கள் அதிகரித்துக் காணப்பட்டன. இவை தொடர்பில் தீவக மக்கள், சிவில் அமைப்புக்கள், மக்கள் பிரதிநிதிகள் எனப் பலரும் குரல் கொடுத்தனர். அப்போதைய பாதுகாப்புத் தரப்பினரின் செயற்றிறன் இன்மையால் இவை கட்டுப்படுத்தப்படவில்லை.

தொடர்ச்சியாக நாம் கேட்டுக் கொண்டதற்கு இணங்கத் தீவகப் பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக ஜெயசுந்தர நியமிக்கப்பட்டார். இதன் பின்னர் மேற்குறிப்பிட்ட சகல சட்டவிரோதச் செயல்களும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. குறிப்பாக கால்நடைகளைக் கடத்தும் செயற்பாடு பெருமளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டது.

இதனால் பாதிக்கப்பட்ட, யாழ்ப்பாண நகரில் பெருமளவான இறைச்சிக் கடைகளை நடத்திவரும் வியாபாரி மற்றும் சட்டவிரோத செயல்கள் மூலம் பணத்தைப் பெற்ற வேறு சிலரும் இணைந்து, உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு எதிராகப் பொய்க் குற்றச்சாட்டுக்களை பொலிஸ் தலைமையகத்திற்கும், ஊடகங்களுக்கும் அநாமதேயமான முறையில் தெரிவித்து வருகின்றனர்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை தீவகத்திலிருந்து இடமாற்றம் செய்து, தமது பழைய செயற்பாடுகளை முன்னெடுக்க முனைகின்றனர்.

தீவக சிவில் சமூகத்தினராகிய நாங்கள் இவர் மீதான குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதுடன், தீவக மக்கள் நலன் கருதி அவர் தொடர்ந்தும் தீவகத்தில் கடமையாற்ற வேண்டும் என்று கோருகின்றோம். இவரின் தமிழ் மொழிப் புலமை காரணமாக பொதுமக்களின் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து, பொலிஸ் பொதுமக்கள் உறவை மேம்படுத்துவதில் சிறந்தவர் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம் - என்றுள்ளது. (த-5)

## குப்பைகள் சேகரிப்பும் அத்தியாவசிய சேவை

### வர்த்தமானிக்கு அங்கீகாரமளிக்க இன்று கூடுகிறது நாடாளுமன்று

கொழும்பு, ஏப். 28

குப்பை சேகரிப்பை அத்தியாவசிய சேவையாக்கும் வர்த்தமானிக்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தை வழங்கும் நோக்கில் இன்று நாடாளுமன்றம் அவசரமாகக் கூடவுள்ளது.

இன்று முற்பகல் 9.30 மணிக்குச் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் சபை கூடவுள்ளது.

மீதொட்டமுல்ல குப்பை மேடு இடர் தொடர்பாகக் கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன நாடாளுமன்றத்தை அவசரமாகக் கூட்டுமாறு சபாநாயகரிடம் கோரியிருந்தார்.

நாடாளுமன்றத்தை அவசரமாகக் கூட்டுவதற்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் அங்கீகாரம் அவசியம் என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக தினேஷ் குணவர்தன தலைமை அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இந்நிலையில் சென்ற வாரம் குப்பை சேகரிப்பை அத்தியாவசியமாக்குவதற்கான சிறப்பு வர்த்தமானி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## அரச தலைவர் சட்டத்தரணிகளாக சுமந்திரன் எம்.பி. உட்பட 25 பேர்

கொழும்பு, ஏப். 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட 25 பேர் அரச தலைவர் சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, அரச தலைவருக்கு உள்ள அதிகாரத்துக்கமைய சட்டத்தரணி தொழில்வாண்மையில் சிறப்பு பெற்றவர்கள் மற்றும் தொழில்வாண்மை செயற்பாடுகளில் நேர்மையாகவும், உன்னதமானவர்களுமான சட்டத்தரணிகள் அரச தலைவரினால் இவ்வாறு அரச தலைவர் சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைய தயா பெல்பொல, ஆரிய பீ. ரெக்கவ, அனுர பண்டார மெத்தேகொட, நிஸ்ஸங்க நாணயக்கார, நெவில் அபேரத்ன, டபிள்யு.கே. அனுஜ கௌசிக்க பிரேமரத்ன, ஏ.எல்.எம்.ஹெதயாத்துல்லா, சமந்த ரத்வத்தே, விஜேரத்ன தர்மசேன, உபாலி சேனாரத்ன, பத்ம பண்டார, எஸ்.கே.மார்க் பீரிஸ், கருணாரத்ன ஹேரத், மஹேந்ர சுவந்தரத்ன், ஏ.பீ.சீ.எம்.ஜயசேகர, மொஹான் வீரக்கோன், பீ.ஆர்.எஸ்.பீ.சமரநாயக்க, உபுல் ஜயசூரிய, ஆனந்த விக்ரமசேகர, பே.சீ.வெலிஅமுண, எம்.ஏ.சுமந்திரன், விஜய நிரஞ்சன் பெரேரா, கருணாதேவகே விமலதாஸ, மொஹமட் நிசாம் காரியப்பர், விவேகாநந்தன் புவிதரன் ஆகியோர் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர். (த-5)

## மீதொட்டமுல்ல இடரில் உயிரிழந்தோர் 32 பேர்

கொழும்பு, ஏப். 28

கொலன்னாவை, மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்தமையால், எவரும் காணாமல் போகவில்லை. 32 பேர் உயிரிழந்துள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மைய நிலையம் அறிக்கையிட்டுள்ளது.

நேற்று மாலை 6 மணிக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த தகவலின் பிரகாரம்,இந்த இடரில் 418 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 782 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சம்பவத்தில் 32 உயிரிழந்துள்ளனர். 11 பேர் காயமடைந்துள்ளனர். ஒருவர் கூட காணாமற்போகவில்லை. 60 வீடுகள் முழுமையாகவும் 22 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒரேயொரு நலன்புரி முகாமே இருக்கிறது. அதில், 72 குடும்பங்களைச் சேர்ந்த 315 பேர் தங்கியுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-4)

## குப்பைமேடுகள் சில சரிந்து விழும் அபாயம்

### சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 28

மீதொட்டமுல்ல குப்பைமேட்டு இடரைத் தொடர்ந்து கண்டி, கொஹாகொட மற்றும் கம்பளை குப்பைமேடுகளும் சரியும் அபாயம் நிலவுவதாக மாநகரங்கள் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

குப்பைமேடுகள் முகாமைத்துவம் தொடர்பில் அரச தலைவரின் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த சிறப்புக் கலந்துரையாடலின்போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார். இவ்விரு குப்பைமேடுகளையும் பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் மீதொட்டமுல்ல இடரைப்போல மேலும் இரண்டு அசம்பாவிதங்கள் நடப்பதைத் தவிர்க்க முடியாமல் போய்விடும் எனவும் அமைச்சர் சம்பிக்க இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார். (த-4)

# இந்தியாவின் கைகளில் இலங்கையின் ஒரு பகுதி

## ரணிலின் இந்தியப் பயணம் அதை தெளிவாக்குகிறது என்கிறார் மகிந்த

கொழும்பு, ஏப். 28
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய பயணத்தின்போது செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டின் ஊடாக நாட்டின் ஒரு பகுதி இந்தியாவிடம் ஒப்படைக்கப்படுகிறது என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். மாத்தளையில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனக பண்டாரதென்னக்கோனைச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தம்புள்ளை தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கியமை ஒரு முட்டாள்தனமான முடிவாகும். எங்கள் மீதான அரசியல் பழிவாங்கல் தொடர்வதை இது நிரூபிக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் தேவைக்கு ஏற்பவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜனக பண்டார சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக்காக அதன் வளர்ச்சிக்காக இடைவிடாது உழைத்தவர். அப்படிப்பட்டவரை விலக்கியது இந்தக் கட்சிக்கு ஏற்பட்ட பெரும் வீழ்ச்சியாகும். சுதந்திரக் கட்சி இப்போது பண்டாரநாயக்கவின் கொள்கையைத் தூக்கி வீசிவிட்டது. இன்று நாங்கள்தான் அவரின் கொள்கையைச் சரியாகப் பின்பற்றுகின்றோம்.

இன்று இந்த அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்துள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு பீல்ட் மார்சலிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது என்ன போரா?நாடு எங்கே போய்க்கொண்டிருக்கின்றது என்பது இதில் இருந்து நன்றாக விளங்குகின்றது.

இந்தப் பழிவாங்கலை அரசு நிறுத்தவேண்டும். இப்போது நாடு விற்கப்படும் விதத்தைப் பாருங்கள். இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் மற்றும் துறைமுகம் போன்றவை இந்தியாவுக்கு கொடுக்கப்படுகின்றன. இதனூடாக நாட்டின் ஒரு பகுதி இந்தியாவிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தை அமைச்சர்கள் பலரும் எதிர்த்துள்ளனர். நாம் நடத்தும் மே தினக் கூட்டத்தில் இதற்கான எதிர்ப்பை மக்கள் வெளிப்படுத்துவார்கள். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பலரும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். வரலாற்றில் பதியப்படும் மே தினக் கூட்டமாக இந்தக் கூட்டம் அமையும் - என்றார். (த-3)

## பொலிஸாருக்குக் கஞ்சா விற்க முயன்றவர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 28
பொலிஸாருக்குக் கஞ்சா விற்க முயன்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கைதுச் சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றது. பளை செம்பியன்பற்றுப் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். 4 கிலோ 15 கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது.

காங்கேசன்துறை போதைப்பொருள் தடுப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது, பருத்தித்துறை மாலுசந்திப் பகுதியில் வைத்துச் சந்தேக நபர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர். (த-10-26)

## சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 28
வடமராட்சி குடத்தனைப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் அதிரடி நடவடிக்கையின் மூலம் இந்தக் கைதுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. துன்னாலையைச் சேர்ந்த 23 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டவராவார்.

குடத்தனைப் பகுதியில் கன்ரர் ரக வாகனம் ஒன்றில் சந்தேக நபர் மணல் அகழ்வில் ஈடுபட்டிருக்கொண்டிருந்தவேளை பொலிஸாரின் திடீர்ச் சோதனையின்போது மணலுடன் சிக்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-10-26)

## ஒரே நாளில் இரண்டு பேரை கடத்திய ஆயுதக் குழுக்கள்

### கம்பளைப் பிரதேசத்தில் சம்பவம்

கொழும்பு, ஏப். 28
பொலிஸ் சீருடையில் வாகனங்களில் வந்த இரு ஆயுதக் குழுக்கள் கம்பளைப் பிரதேசத்தில் ஒரே நாளில் இருவரைக் கடத்திச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

'கம்பளை, புபுரெஸ்ஸ, ரஜதலாவ பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வெள்ளைநிற கப் ரக வாகனத்தில் வந்த நால்வர் தனது 40 வயதுக் கணவரைக் கடத்திச் சென்றதாக அவரது மனைவியான சுதர்மா கலபத்தி கலஹா முறைப்பாடு செய்துள்ளார்.

அன்றைய தினம் பகல் கம்பளை இ.போ.ச.பேருந்துநிலையத்திலிருந்து 27 வயதான தனியார் பேருந்து நடத்துநர் ஒருவர் நீலநிற வானில் வந்தவர்களால் கடத்தப்பட்டிருப்பதாகக் கம்பளை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

40 வயதான யாமில்லேகெதர ரத்னாயக்க சம்பவ தினம் இரவு 8 மணியளவில் அவரது வீட்டு முற்றத்தில் உறவுமுறை சகோதரியொருவருடன் அமர்ந்து கதைத்துக் கொண்டிருந்தபோது கடத்தப்பட்டுள்ளார். பொலிஸில் வாக்குமூலமொன்றைப் பெறவிருப்பதாகக் கூறியவர்கள் அவரது சட்டையைப் பற்றி இழுத்துக்கொண்டுசென்று வாகனத்தில் ஏற்றியதாக அவரது உறவுமுறை சகோதரி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்ட மற்றொரு நபரான பேருந்து நடத்துநர் அன்றைய பணி முடிந்து தனது புபுரெஸ்ஸ வீடு செல்வதற்காக கம்பளை இ.போ.ச. பேருந்து நிலையத்தில் காத்திருந்தபோது கடத்தப்பட்டுள்ளார் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களது கடத்தல் தொடர்பான விசாரணைகள் கம்பளை மற்றும் கலஹா பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. (த-10)

### மாயக்கல்லி புத்தர்சிலை விவகாரம்

## சம்பந்தன் - ஹக்கீம் நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, ஏப். 28
இறக்காமம் மாயக்கல்லி மலையில் பௌத்த விகாரை அமைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சியை தடுப்பது தொடர்பில், அமைச்சர். ரவூப் ஹக்கீம், எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனை நேற்றுச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது மாயக்கல்லி மலை ஆக்கிரமிப்புக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய உயர் மட்ட நடவடிக்கைளை இருதரப்பும் கூட்டாக மேற்கொள்வது குறித்து இணக்கம் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசதலைவருடன் விரைவில் பேசுவதற்கும் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# பொன்சேகாவுக்கு இராணுவப் பதவி வழங்கவேகூடாது

## வலுக்கிறது கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 28
முப்படைகள், பொலிஸ் உட்பட ஒட்டுமொத்த பாதுகாப்பு விவகாரங்களைக் கவனிக்கும் பதவியை சரத் பொன்சேகாவுக்கு வழங்குவதற்கு முன்னாள் படைவீரர்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளரான வைஸ் அட்மிரல் சரத் வீரசேகர கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

மக்கள் போராட்டத்தை எவரும் கட்டுப்படுத்தக்கூடாது. அது ஜனநாயக விரோதச் செயல். பீல்ட் மார்ஷல் பதவியைப் பெற்றுள்ள சரத் பொன்சேகா, சாகும்வரை இராணுவச் சீருடை அணிவதற்குரிய அதிகாரத்தைப் பெற்றுள்ளார். எனவே, அவர் அரசியல் செய்வது பொருத்தமாக அமையாது.

பீல்ட் மார்ஷல் பதவியைத் துறக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அமைச்சுப் பதவியைத் துறக்கவேண்டும் என்று சரத் வீரசேகர கூறியுள்ளார்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இதை எதிர்த்துள்ளது.

மக்கள் பிரச்சினையைத் தீர்க்காமல் சிறப்புச் செயலணி மூலம் மக்கள் குரலை ஒடுக்குவது முறையற்ற செயல். எத்தகைய தடைகள் வந்தாலும் மாணவர் போராட்டம் தொடரும் என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர். அத்துடன், எதிரணி சார்பான சில தொழிற்சங்கங்களும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. (த-4)

## ஐ.எஸ். அச்சுறுத்தல் குறித்து இலங்கை- இந்தியா பேச்சு

கொழும்பு, ஏப். 28
தெற்காசியாவில் அதிகரித்து வரும் ஐ.எஸ் தீவிரவாத அச்சுறுத்தலை எதிர்கொள்வது குறித்து, இந்தியாவும் இலங்கையும் பேச்சு நடத்தவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கையின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன், இந்திய நடுவண் அரசின் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்றுமுன்தினம் நடத்திய பேச்சுக்களின்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதுடில்லியில் நடந்த இந்தச் சந்திப்பின்போது, ஐ.எஸ் தீவிரவாத அச்சுறுத்தல்கள் அதிகரித்து வருவது குறித்து இரண்டு நாடுகளின் தலைவர்களும் கவலை வெளியிட்டனர்.

அத்துடன், பிராந்தியத்தின் அமைதி மற்றும் உறுதிப்பாட்டைக் குழப்புவதற்கான ஐ.எஸ் தீவிரவாதிகளின் முயற்சிகளை முறியடிப்பது குறித்து இரண்டு நாடுகளின் பாதுகாப்பு அமைப்புகளுக்கு இடையில் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்தவும் இரு தலைவர்களும் இணக்கம் வெளியிட்டுள்ளனர். (த-4)

## சரத் பொன்சேகாவிடம் ராணுவப் பொறுப்பா?

### *சீறுகிறார் அமைச்சர் எஸ்.பி.*



கொழும்பு, ஏப். 28
சிறப்பு இராணுவ அதிகாரங்களைக் கொண்ட இராணுவப் பிரிவொன்று அமைத்து பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு கொடுக்கும் விடயம் சாத்தியப்படாது என்று அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கத் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சரத் பொன்சேகாவுக்குச் சிறப்புப் பதவியொன்றை உருவாக்க இராணுவ அதிகாரங்களைக் கையளிக்க அரச தலைவர் தீர்மானித்துள்ளார். அமைச்சர் ராஜித சேனாரட்னவும் இந்தக் கருத்தை வலியுறுத்தியிருந்தார்.

ஆனால், இவர்கள் அழுத்தமாகக் கூறுவது போன்று அரச தலைவர் அவ்வாறு கூறியிருக்கவில்லை. சாதாரணமான கருத்தையே முன்வைத்தார். ஆனால், இராணுவ அதிகாரங்கள் அனைத்தையும் வழங்கும்வகையில் பதவியொன்று உருவாக்கிக் கொடுப்போம் என்று கூறவில்லை.

வெளியாகியுள்ள செய்திகள் போன்று ஒரு பதவியை இலங்கையில் உருவாக்கமுடியாது. நாடாளுமன்றில் சட்டவரைவு கொண்டுவந்து அவ்வாறான பதவிகளை உருவாக்க முடியாது. ஜனநாயகம், நல்லாட்சி தொடர்பில் பேசப்படும் சூழலில் அது முற்றிலும் நாட்டின் அடிப்படை உரிமை மீறலாகவே பார்க்கப்படும். அரச தலைவர் நினைத்தால் அவருக்கு உயர் பதவிகளையோ அல்லது இராணுவத் தளபதி பதவியையோ வழங்க முடியும் - என்றார். (த-4)

# தரம் 5 மாணவர்களுக்கு நாளை கற்றல் முகாம்

தென்மராட்சி, ஏப். 28
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட மூன்றாவது பரீட்சையில் வினாத்தாள் இரண்டில் 20க்கும் 40க்கும் இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான கற்றல் முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை 4 நிலையங்களில் நடாத்தப்படும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்தார்.
நாவற்குளி மகா வித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம் மற்றும் கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை ஆகிய மத்திய நிலையங்களில் கற்றல் முகாம் நடாத்தப்படும். மூன்றாவது பரீட்சை வினாத்தாள் இரண்டில் 20க்கும் 40க்கும் இடைப்பட்ட புள்ளிகள் பெற்ற மாணவர்களை அவர்களது வகுப்புப் பொறுப்பாசிரியர்களுடன் அருகில் உள்ள நிலையத்துக்கு அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களை அவர் கேட்டுள்ளார். (வ-9)

# கலைச் சிதறல்கள் கண்காட்சி சாவகச்சேரி டிறிபேக்கில் செவ்வாயன்று ஆரம்பம்

தென்மராட்சி, ஏப். 28
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களின் ' கலைச் சிதறல்கள் ' என்னும் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல் எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, மறுநாள் புதன்கிழமை ஆகிய இரண்டு நாட்களுக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) த.கிருபாகரன், முல்லைத்தீவு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.சிவாணந்தம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.ஆரியரத்ன, உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சிறிதரன், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் நா.இராஜன் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கைலாயநாதன் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோரும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# அடாவடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சிறுவன் சீர்திருத்தப் பாடசாலையில்

தென்மராட்சி, ஏப். 28
தென்மராட்சி பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்தவர்களைத் தாக்கிக் காயப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிறுவன் உள்ளிட்ட இருவரை கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தினர். சிறுவனை அச்சுவேலி சீர்திருத்தப் பாடசாலையில் சேர்க்குமாறு மன்று உத்தரவிட்டது.
மந்துவிலில் இரு வீடுகளுக்குள் உள்நுழைந்து அங்கிருந்த இருவரைத் தாக்கி காயப்படுத்தியதுடன் அங்கு காணப்பட்ட முச்சக்கரவண்டியையும் மின்குமிழ்களையும் அடித்து நொருக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
வரணி குடமியனிலுள்ள வீடு ஒன்றுக்குள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளையில் புகுந்து அங்கு வசித்த தம்பதியர் மீது தாக்குதல் நடாத்தி காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 16 வயதுச் சிறுவனை சான்று பெற்ற பாடசாலையில் சேர்க்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-9)

# இலங்கை-இந்தியா இடையே வீதி ரணிலுடன் நிதின் கட்கரி பேச்சு

கொழும்பு, ஏப். 28
இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே வீதி இணைப்பை ஏற்படுத்துவது தொடர்பாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன், இந்திய தரைவழிப் போக்குவரத்து மற்றும் கப்பல்துறை அமைச்சர் நிதின் கட்கரி பேச்சு நடத்தினார்.
இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவை, புதுடில்லியில் உள்ள தாஜ் விடுதியில் நேற்றுமுன்தினம் காலை இந்திய அமைச்சர் நிதின் கட்கரி சந்தித்தார்.
இந்தச் சந்திப்புக்குப் பின்னர், நிதின் கட்கரி தனது கீச்சகப் பக்கத்தில் இட்டுள்ள பதிவில், 'இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேவீதிஇணைப்பை ஏற்படுத்துவது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடினேன்' என்று குறிப்பிட்டுள்ளார். எனினும் மேலதிக விபரங்கள் எதையும் அவர் வெளியிடவில்லை.
சில மாதங்களுக்கு முன்னதாக, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே தரைவழிப் பாலத்தை அமைக்கும் திட்டம் இந்தியாவிடம் இருப்பதாகவும் அதுகுறித்து இலங்கையுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் நிதின் கட்கரி கூறியிருந்தார்.
23 ஆயிரம் கோடி இந்திய ரூபா செலவு ஏற்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்ட இந்த திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியும் உதவ முன்வந்திருந்தது. எனினும், தலைமன்னாரையும், இராமேஸ்வரத்தையும் இணைக்கும் அனுமன்பாலத்தைஅமைப்பது தொடர்பாக இந்தியாவுடன் பேச்சு நடத்தப்படவில்லை என்று இலங்கை அரசு மறுத்திருந்தது.
அத்துடன், அத்தகைய துரோகச் செயலுக்குத் தாம் ஒருபோதும் அனுமதி அளிக்கமாட்டேன் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உறுதியளித்திருந்தார். (கு-4)

# அதிகளவான சாரயத்தை கொண்டு சென்றவரிடம் ரூ. 20,000 தண்டம் அறவீடு

தென்மராட்சி, ஏப். 28
நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட மேலதிகமாக அரச சாராயத்தைக் கொண்டு சென்ற குற்றத்துக்கு பருத்தித்துறை வாசிக்கு 20ஆயிரம் ரூபா தண்டம் விதித்த சாவகச்சேரி நீதிவான் மன்று, அவரிடம் பறிமுதல் செய்த மேலதிக சாரயத்தை அழிக்குமாறும் உத்தரவிட்டது.
சரசாலை கனகன்புளியடிச் சந்தியில் கடந்த 17 ஆம் திகதி கடமையிலிருந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முறையில் சாலையில் வந்த மோட்டார் சைக்கிளை நிறுத்திச் சோதனையிட்டனர். காற்போத்தல் அரச சாராயம் 70 போத்தல்களை அதில் பயணித்தவர் கொண்டு செல்வதைப் பொலிஸார் கண்டறிந்தனர். சாராயத்தைக் கைப்பற்றிய பொலிஸார், அவற்றை எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் பருத்தித்துறையைச் சேர்ந்தவரைக் கைது செய்து பொலிஸ் பிணையில் விடுவித்திருந்தனர்.
பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபர் மன்றில் முன்னிலையானார். கைப்பற்றப்பட்ட சாரயப் போத்தல்கள் பொலிஸாரால் மன்றில் பாரப்படுத்தப்பட்டன.
வழக்கை விசாரித்த நீதிவான், ஒருவர் எடுத்துச் செல்லக்ககூடிய நிர்ணய அளவைவிட அதிகமாக அரச சாராயம் கொண்டு சென்ற குற்றத்துக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். மேலதிகமாகக் கொண்டு செல்லப்பட்ட சாராயத்தைப் போத்தல்களை பறிமுதல் செய்து அழிக்குமாறு உத்தரவிட்டார். (வ-9)

# சங்கத்தானை விநாயகருக்கு திங்களன்று கொடியேற்றம்

தென்மராட்சி, ஏப். 28
சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய பெருந் திருவிழா எதிர்வரும் மே முதலாம் திகதி திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
அன்றைய தினம் காலையில் சங்கத்தானை மீனாட்சிஅம்பாள் ஆலயத்திலிருந்து ஆலய அடியார்களால் கொடிச்சேலை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கொடியேற்றம் இடம்பெறும்.
எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் சித்திரா பௌர்ணமி தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.
பெருந் திருவிழா கிரியைகள் ' கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்களின் வழிகாட்டுதலில் ' சிவஸ்ரீ ஜெகதீஸ்வர மயூரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் என்று ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்தனர். (வ-9)

# வீரகத்தி விநாயகரின் திருவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 27
இருபாலை கிழக்கு, கோப்பாய் மானம்புலம் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது.
எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சங்கு முழுக்கும் தொடர்ந்து ஏனைய வழிபாடுகளும் இடம்பெறும். அன்று மலை 6 மணிக்கு வசந்தமண்டபவழிபாடு, திருவூஞ்சலையடுத்து சுவாமி உலா வருவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ)

# பாம்பு தீண்டியதில் பெண் பொலிஸ் சாவு

வவுனியா, ஏப். 28
பெண் பொலிஸ் உத்தியோகத்தர் பாம்பு தீண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மாத்தறையைச் சேர்ந்த இமாலி குணசேகர (வயது - 43) என்பவரே உயிரிழந்த வராவார்.
வவுனியா மூத்த பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் கடமையில் இருந்த பெண் பொலிஸ் சாஜர்ஜண்டான இவர் கடந்த 19 ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் புடையன் பாம்பு தீண்டியதில் வவுனியா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (கு-4)

# பண்ணிசை வகுப்பு இன்று ஆரம்பம்

சாவகச்சேரி, ஏப்.27
சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையால் வெள்ளிக்கிழமை தோறும் மாலை வேளைகளில் பண்ணிசை வகுப்பை நடாத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
முதலாவது பண்ணிசை வகுப்பு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் திருஞானசம்பந்த பிள்ளையால் ஆரம்பிக்கப்படவுள்ளது. வயது வேறுபாடின்றி பண்ணிசை கற்பிக்கப்படவுள்ளதால் கற்க விரும்பவர்கள் பங்குபற்றுமாறு அறநெறிப் பாடசாலை இயக்குநர் கேட்டுள்ளார். (வ-9)

# பராமரிப்பற்ற காணிகள் மீது சிவப்பு அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஏப். 28
யாழ்ப்பாண மாநகரப் பகுதியில் பாராமரிப்பு இன்றி காணப்படும் வெற்றுக் காணிகளுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டு வருகின்றன.
பராமரிப்பு இன்றி காணப்படும் காணிகளை காணி சொந்தக்காரர்கள் உடனடியாக துப்புரவாக்கக் கோரி இந்த சிவப்பு அறிவித்தல் சம்பந்தப்பட்ட காணிகளில் ஒட்டப்படுகின்றன என்று யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்தார்.
"காணியின் முன் பக்கத்தில் சிவப்பு அறிவித்தல் மாநகராட்சி மன்றத்தால் வைக்கப்பட்டுள்ளன. பராமரிப்பு இன்றி புறகள் மற்றும் செடிகளால் காடுபோல் வளர்ந்திருக்கும் இந்தக் காணிகள் சம்பந்தப்பட்ட காணி சொந்தக்காரர்களால் உடனடியாக துப்புரவாக்கப்படவேண்டும். காணிகள் துப்புரவாக்கப்படாவிட்டால் மாநகராட்சி மன்றம் காணிகளை பொறுப்பேற்று துப்புரவாக்கும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-17)

## இராணுவ...

முல்லைத்தீவு, தண்ணீரூற்று பழைய பொலிஸ் நிலையத் துக்கு அருகே நேற்றிரவு 7.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
"தண்ணீரூற்று பகுதியிலிருந்து முல்லைத்தீவு பகுதி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இராணுவத்தின் பேருந்து மீது இனந்தெரியாத நபர்களால் கல் வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. இதன் போது பேருந்தின் முன் பக்கக் கண்ணாடி முற்றாக உடைந்து சேதமடைந்தது.
சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. இராணுவத்தினரும், பொலிஸாரும், புலனாய்வாளர்களும் இணைந்து அருகே உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த சி.சி.ரி. கமராவின் பதிவுகளைச் சோதனையிட்டனர். வீதிச் சோதனை நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினரை இறக்கி வந்த போதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது" என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவத்தை அடுத்து அங்கு பதற்ற நிலை உருவாகியது. கேப்பாபிலவு வற்றாப்பளை முள்ளியவளை வீதி மற்றும் முள்ளியவளை தண்ணீரூற்று முதன்மை வீதி ஆகிய இடங்களில் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-102)

# பாலாலய குடமுழுக்கு

மந்துவில் வடக்கு, புளியந்திடல் கந்தசுவாமி ஆலய பாலாலய குடமுழுக்கு நாளைமறுதினம் காலை 5.55 மணி தொடக்கம் 6.43 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்தனர்.
பாலாலயக் கிரியைகள் இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நாளை காலை 9 மணிக்கு சிறப்புக் கிரியைகள் நடைபெற்று நாளைமறுதினம் காலை 5.55 மணிக்கு பாலாலய குடமுழுக்கு இடம்பெறும்.
பாலாலயம் சிவாகமகிரியாமணி சிவஸ்ரீ சோமசந்திரசிகாமணிக் குருக்கள் தலைமையில் இடம்பெறும் என்று அவர்கள் தெரிவித்தனர். (வ-9)

# பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஏப் 27
வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று பிரதேச செயலர் திருமதி யு. யசோதா அறிவித்தார். (வ-8)


VMK JEWELLERY
நியூ
வீ.எம்.கே ஜுவல்லர்ஸ்
தங்கத்திருநாளாம் அக்ஷய திருதியை
தினமான 28,29 / 04/ 2017 ஆம் திகதிகளில் எம்மிடம்
நகைகள் வாங்கும் அனைவருக்கும் விசேட
அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படும். அழகிய
டிசைன்களில் அசல் 22 கரட் தங்க நகைகளை கொள்வனவு
செய்து ஐஸ்வரியத்தை அள்ளி செல்லுங்கள்
நியூ வீ.எம்.கே ஜுவல்லறி
80/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 720 1117 / 021 222 2515
கண்டி வீதி, சாவகச்சேரி
021 227 1616 / 077 7849 369


50 வருட காலமாக யாழ் குடாநாட்டு மக்களின் நன்மதிப்பைபெற்ற உங்கள் அபிமான
மைதிலி நகைமாடம் இன்
தங்கத்திருநாளாம் அக்ஷய திருதியை கொண்டாட்டம்
இம்மாதம் (29.04.2017) 29 ஆம் திகதி வரை எம்மிடம் நகை வாங்கும்
அனைத்து வாடிக்கையாளர்களின் சிட்டைகளும், குலுக்கல் முறையில்
தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு விசேட பரிசுகள் காத்திருக்கின்றன.
முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகள்
தங்க நாணயங்கள், மேலும் 10 ஆறுதல் பரிசுகள்
அன்றைய தினத்துக்கான (28,29 ஆம் திகதி) விசேட சலுகைகள்
அதி நவீன டிசைனுக்கேற்ப நம்ப முடியாத விலைக் கழிவுகள் வழங்கப்படும்.
பழைய நகைகளைக் கொடுத்து நகை வாங்குவோருக்கு அன்றைய பவுண் விலைக்கே எடுக்கப்படும்.
குறிப்பிட்ட நகைகள் தங்க விலைக்கே சேதாரம் இல்லாமல் வழங்கப்படும்.
நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் அதி விசேட பரிசு காத்திருக்கின்றது.
02 பவுணுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு பவுண் காசு அன்பளிப்பாக வழங்கப்படும்.
காலை 8.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை கடை திறந்திருக்கும்
அக்ஷய திருதியை
அர்த்தமுள்ள அக்ஷய திருதியில் பொன், பொருள் வாங்கினால்
செல்வம் பெருகும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.
செல்வத்துக்கு அதிபதியான குபேரன் நான் இழந்த சங்கநிதி, பதுமநிதிகளை பெற்றது அக்ஷய திருதியை நாளில்தான். பாண்டவர்கள் வனவாசத்தின்போது சூரியனிடம் இருந்து அள்ள அள்ள குறையாத அக்ஷய பாத்திரம் பெற்றது இந்த நாளில்தான். அதேபோல் மணி மேகலையும் இந்த நாளில் தான் அக்ஷய பாத்திரம் பெற்றுள்ளார். ஆம் உங்கள் சௌபாக்கியம் குறையாத வாழ்வின் அதிர்ஸ்டம் பெருகிட தூய தங்க ஆபரணங்களை உங்கள் ஒவ்வொருவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லத் தவறாதீர்கள்.
மைதிலி 89 V நகைமாடம்
யாழ் மைதிலி ஜுவெலர்ஸ்
89V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 7902
79 Z, Sea Street, Colombo-11. Tel: 2396239.

# சிங்கப்பூர் ஜுவல்லறி

இல.28, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
No.28, Kasthuriar Road, Jaffna.



## Sinkapoore Jewellery

அக்ஷய திருதியை
தங்கத்திருநாள்
கொண்டாட்டம்
இன்றும் 28/04/2017
நாளையும் 29/04/2017
இடம்பெறும்

அள்ள அள்ள குறையாத ஐஸ்வரியத்தை தரும் அக்ஷய திருதியை தினத்தில் எம்மிடம் தங்கத்தை கொள்வனவு செய்து அன்பளிப்பு பொருள்களை பெற்று மகிழ்ச்சியடையுங்கள்



குறையாத செல்வத்தை வளமாக அள்ளி வழங்கும் பொன்னான திருநாள்

T.P: 021 4590 260 / 021 222 3327

பொன் பெருகும் பொன்னாளாம்
அக்ஷய திருதியை வாழ்த்துக்கள்

28,29ஆம்
சித்திரை 2017

# பூரணி நகை மாடம்

## Purane Nakai Maadam



குறையாத செல்வத்தை வளமாக அள்ளித்தரும் அதிசயத் திருநாளாம் அக்ஷய திருதியை இம்முறை ஏப்ரல் மாதம் 28.29 ஆம் திகதி (வெள்ளிக் கிழமை.சனிக்கிழமை) கொண்டாடப்படு கின்றது. இத்திருநாளில் உங்கள் வாழ்வில் மேன்மேலும் சுபீட்சத்தை உருவாக்கும் பெறுமதிமிக்க நகைகளை பூரணி நகைமாடத்தில் கொள்வனவு செய்து மகிழுங்கள்.

2017 ஆண்டுக்கான பூரணி ஜுவல்லர்ஸ் இன் அக்ஷய திருதியை அன்று மாபெரும் சலுகையை தவறவிட வேண்டாம்.

- ஒவ்வொரு தங்க நகைகளுக்கும் விசேட விலைக்கழிவுகள்.
- நகைகளை கொள்வனவு செய்யும் அனைவருக்கும் வியத்தகு விசேட பரிசுகள் காத்திருக்கின்றன.
- எங்கள் காட்சியறையில் வைக்கப் பட்டுள்ள அதி நவீன நகைகளுக்கு விசேட தள்ளுபடி.
- ஏப்ரல் 28.29 ஆம் திகதி காலை 8.00 மணிமுதல் மாலை 8.00 மணிவரை எமது காட்சியறை உங்களுக்காக திறந்திருக்கும்.

1/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Kasthuriyar Road, Jaffna.
021 222 3121

# சிறிநதியா நகை மாளிகை

36 வருடங்களுக்கு மேல் நம்பிக்கைமிக்க கைராசியான நிறுவனம்



ஐஸ்வர்யத் திருவிழா அக்ஷய திருதியை

**28.04.2017, 29.04.2017**

வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை
காலை 7.00 - இரவு 9.00 மணிவரை





அன்றையதினம் தங்கம் வாங்கும் அனைவருக்கும் பெறுமதிமிக்க அன்பளிப்பு பொருள்கள் வழங்கப்படும்

சித்திரை மாதம் சுக்ல பட்ச திருதியை அக்ஷய திருதியை நாளாகக் கொண்டாடுவது யாவரும் அறிந்த ஒன்று. அக்ஷய திருதியை அன்று நாம் செய்யும் எந்த காரியமும் வளர்ந்து கொண்டேயிருக்கும், பெருகிக்கொண்டேயிருக்கும் என்பது திண்ணம். இத்தகைய சிறப்புமிக்க அக்ஷய திருதியை தினத்தன்று எமது வாழ்வின் தேவைகளின் ஒன்றாக விளங்கும் தங்கத்தை தங்களின் வசதிக்கேற்ப பெரியதோ. சிறியதோ வாங்கி என்றும் வற்றாத செல்வத்துடன் வளமுடன் வாழ தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக விவரங்களுக்கு:
➡ https://www.facebook.com/SREENATHIYAJEWELERYSHOP
➡ சிறிநதியா நகை மாளிகை

**குறிப்பு:** இரண்டு பவுணுக்கு மேல் தங்க நகைகளை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு மகாலக்ஷ்மி திருவுருவம் பொறிக்கப்பட்ட தங்க நாணயம் அல்லது தங்க மோதிரம் அன்பளிப்பாக வழங்கப்படும்.

வாடிக்கையாளர்களின் நலன்கருதி 2012 ஆம் ஆண்டிலிருந்து **கரட்மெசினை** அறிமுகப்படுத்தி **தரச்சான்றிதழ்** வழங்கி வருகின்றோம்



சிறிநதியா நகைமாளிகை
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2709

சிறிநதியா நகைமாளிகை
இல.56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6744

மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களுக்கு அன்பான வேண்டுகோள்!

மலரும் ஏவிளம்பி வருடம் சித்திரை (15,16ஆம் நாள்) 28,29/04/2017 ஆகிய திகதிகளில் அள்ள அள்ளக் குறையாத ஐஸ்வரியத்தை அள்ளித்தரும் அக்ஷய திருதியை எனும் திருநாளிலே தரம், நம்பிக்கை கைராசி அனைத்திற்கும் உரித்தான உங்கள்



# செல்வி நகை அகம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

# Chelvi
Nakai Agam
Manufacturers of Gold Jewels



பொன் பெருகும் பொன்னாளாம்
அக்ஷய திருதியை தினத்தன்று
செல்வி நகை அகம் வழங்கும்
பொன்னான வாய்ப்பு

- ஒவ்வொரு தங்க நகைகளுக்கும் விசேட கழிவு
- நகை கொள்வனவு செய்யும் அனைவருக்கும்
- பெருமதிமிக்க பரிசில்கள்

(22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப் படும்.)

1/3, Kasthuriar Road, Jaffna. T.P: 021 222 9441 1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

நிகழும் மங்கலகரமான ஏ விளம்பி வருடம்
சித்திரைத்திங்கள் 15.16 ஆம் நாள்களில் (28.29.04.2017)
வெள்ளிகிழமை. சனிக்கிழமை அன்றைய நாள்களில்
அள்ள அள்ளக் குறையாத ஐஸ்வரியத்தை அள்ளித்தரும்
அக்ஷயதிருதியை எனும் திருநாளிலே
தரம். நம்பிக்கை. கைராசி அனைத்திற்கும் உரித்தான
உங்கள்

# மயூரன்ஸ்
## நகை மாளிகை



ஸ்தாபனத்தில் தங்க நகைகளைப் பெற்று
என்றுமே குறையாத இன்பத்தைப் பெற்றிட
அன்போடு அழைக்கின்றோம்.

அக்ஷய திருதியை அன்று நகை கொள்வனவு செய்பவர்களுக்கு
பெறுமதி வாய்ந்த அன்புப் பரிசுகள் வழங்கப்படும்.

இல. 95, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P : 077 651 0251

---

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

# நியூ பிரணகாஸ்
## நகைத்தொழிலகம்

New Branakas
Jewellery & Work Shop



தங்கத் திருநாளாம்
அட்சய திருதியை
28/29.04.2017 ஆம்
திகதிகளில் எம்மிடம்
தங்க நகைகளை வாங்கும்
அனைவருக்கும்
அன்பளிப்புப் பொருள்கள்
வழங்கப்படும்.

No.11, கன்னாத்திட்டி வீதி, யாழ்ப்பாணம்.
No.11, Kannathiddy Road, Jaffna.
branakasjewellers@gmail.com
T.P:- 021 222 8465

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## ரூபி ஜுவல்லறி இன் அக்ஷய திருதியைக் கொண்டாட்டம்

தங்கநகை உலகில் 34 வருடம் அனுபவம் வாய்ந்த நாங்கள் உலகின் பல பாகங்களிலும் இருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Rube Since 1982 Jewellery

# ரூபி ஜுவல்லறி

நம்பிக்கை,
கைராசி மற்றும்
தரம்குன்றா

சிங்கப்பூர் தரத்திலான
தங்க நகைகளை உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ளலாம்.

ரூபியின் தங்கக் காசு மழை
24.04.2017 - 01.05.2017 வரை
எமது ஜுவல்லறியில் தங்கத்தினை
கொள்வனவு செய்யும்
10 வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல்
முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு
தங்கக் காசு வழங்கப்படும்.

இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.




எம்மிடம் கடன் அட்டைகள்
மூலம் கொள்வனவு செய்யும்
வசதியும் உண்டு

இல: 227 - 229,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 6919
0777 344 074

---

பொன் பெருகும் பொன்னாளாம்
அக்ஷய திருதியை வாழ்த்துக்கள்

28,29 ஆம்
சித்திரை 2017

# கன்னிஹா
## ஜுவல்ஸ்

KANNIHA JEWELS



குறையாத செல்வத்தை வளமாக அள்ளித் தரும் அதிசயத் திருநாளாம் அக்ஷய திருதியை இம்முறை ஏப்ரல் மாதம் 28.29 ஆம் திகதி (வெள்ளிக் கிழமை, சனிக்கிழமை) கொண்டாடப்படுகின்றது. இத்திரு நாளில் உங்கள் வாழ்வில் மேன்மேலும் சுபீட்சத்தை உருவாக்கும் பெறுமதிமிக்க நகைகளை கன்னிஹா ஜுவல்ஸ் இல் கொள்வனவு செய்து மகிழுங்கள்.

2017 ஆண்டுக்கான கன்னிஹா ஜுவல்ஸ் இன் அக்ஷய திருதியை அன்று மாபெரும் சலுகையை தவறவிட வேண்டாம்.

- ஒவ்வொரு தங்க நகைகளுக்கும் விசேட விலைக்கழிவுகள்.
- எங்கள் காட்சியறையில் வைக்கப் பட்டுள்ள அதி நவீன நகைகளுக்கு விசேட தள்ளுபடி.
- நகைகளை கொள்வனவு செய்யும் அனைவருக்கும் வியத்தகு விசேட பரிசுகள் காத்திருக்கின்றன.
- ஏப்ரல் 28.29 ஆம் திகதி காலை 8.00 மணிமுதல் மாலை 8.00 மணிவரை எமது காட்சியறை உங்களுக்காக திறந்திருக்கும்.



99E கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Kasthuriyar Road, Jaffna.
021 222 4448

MAJESTIC CINEPLEX Jaffna
A CEYLON THEATRES CINEMA
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

### அறை வாடகைக்கு

குறைந்த விலையில் நாள் வாடகைக்கு Room ரூபா 700 - ரூபா 4000 வரை A/C, T.V Attach Bathroom வசதிகளுடன் உண்டு. Hotel Villa City 422/1, Galle Road Wellawatte இராமகிஷ்ண Shed க்கு அருகில் **077 796 7878**

## அச்சுவேலி வடக்கு (சரசாலி) அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுதர் தேவஸ்தானம், அச்சுவேலி

எமது ஆலயத்துக்கான புதிய இரத மண்டபம் அமைத்து அக்ஷய திருதியை தினமான நாளை (29.04.2017) சனிக்கிழமை சாந்தி விழா நடத்த எம்பெருமான் திருவருள் கைகூடி உள்ளது.

குறித்த இரத மண்டபத்தினைப் பல இலட்சம் ரூபா செலவில் நிர்மாணித்துள்ள காலஞ்சென்றவர்களான சந்தன். செல்லர், செல்லர் - செல்லம்மாவின் குடும்பத்தினரது இக்கைங்கரியத்தையும், இரதத்துக்கான வர்ணத்தினையும் மீளவும் பெரும் நிதிப் பங்களிப்புடன் தீட்டித் தந்துதவிய கு.செல்வரத்தினம் குடும்பத்தினரையும். தேரடி வைரவருக்கான மண்டபத்தினை மீளவும் புனரமைப்புச் செய்துதவிய பொ.அருளானந்தம் குடும்பத்தினரையும், தீர்த்தக் கேணியினையும் திருத்தம் செய்து உதவிய காலஞ்சென்ற ந.சந்திரலிங்கம் குடும்பத்தினரையும் பாராட்டி வாழ்த்துவதோடு. நாளைய தினம் நடைபெற உள்ள சாந்தி விழாவில் பக்த கோடிகள் அனைவரும் கலந்துகொண்டு ஸ்ரீ சித்திர வேலாயுதப் பெருமானின் அருட்கடாச்சம் பெற்று ஏகுமாறு வேண்டுகின்றேன்.

**ச.இராசரத்தினம் ஐயா,**
**ஆலய பரம்பரை தாபரிப்பாளரும்,**
**பூசகரும்.**

(aja cs /3520)

# மக்கள் போராட்டத்தில் அதிகாரிகள் களியாட்டம்!



மூதூர், ஏப்.28

காணமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் நேற்று கடையடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட வேளையில், கிழக்கு மாகாணசபையின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட சித்திரைப் புத்தாண்டு களியாட்ட நிகழ்வு பொதுமக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் கையளிக்கப்பட்டுக் கடத்தப்பட்டு காணாமல் அகப்பட்டோரை தேடியறியும் சங்கத்தின் திருகோணமலை மாவட்டத் தலைவி நா.ஆசா தெரிவித்ததாவது,

"திருகோணமலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் இடம் பெற்றுவரும் இடத்துக்கு அருகாமையில் இந்நிகழ்வு இடம்பெற்றமையானது, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரத்தில் அரசின் மெத்தனப் போக்கை தெளிவாகப் பறைசாற்றுகிறது. நாம் போராடி வரும் இடத்துக்கு அருகாமையில் வழமைபோன்று இவ்வருடமும் களியாட்ட நிகழ்வு, அதுவும் இன்றைய தினத்தில் நடைபெறுவது எம்மை மேலும் வேதனைப் படுத்துகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் மூலம், இதுதான் அரசின் நிலைப்பாடு என்ற கருத்து வெளிப்படுத்தப்படுவதை விளங்கிக் கொள்ளக் கூடியதாவுள்ளது" - என்றார்.

(ஐ-ய-40)

உ
வேலும் மயிலும் துணை

## சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை

அவர்களின்

## 110 ஆவது ஆண்டு நினைவு விழா 2017

காலம் : 30.04.2017 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : மாலை 5.00 மணி
இடம் : சதாவதானி அரங்கு

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பத்திரிகை அனுசரணையில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பணப்பரிசில் இவ் விழாவின் போது வழங்கப்படும்.

**வெற்றி பெற்றவர்களின் பெயர் விவரங்கள்:**

| | |
|---|---|
| **முதலாம் இடம்** ரூபா 10,000/= | **செங்கதிர்ச் செல்வன் சேந்தன்** 185/1, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| **இரண்டாம் இடம்** ரூபா 5,000/= | **திருமதி கிருஷானி கனகராஜன்** சந்திரகிரி, முடக்காடு வீதி, நெல்லியடி கிழக்கு, கரவெட்டி. |
| **மூன்றாம் இடம்** ரூபா 3,000/= | **குணசேகரம் பிரியதர்சினி** இராமநாதன் நுண்கலைக் கூடம், சுன்னாகம், யாழ்ப்பாணம். |

**தலா ரூபா 1000/= வீதம் ஏழு ஆறுதல் பரிசில்கள்.**

01 **புவனேந்திரராசா விதுஷா**
கற்பகப் பிள்ளையார் வீதி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
02 **சோழமாதேவி அருளானந்தம்**
இல.07, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
03 **கோவிந்தராஜா கலைவாணி**
இல.34, எல்லப்பர் மருதங்குளம், வவுனியா.
04 **செல்வன் அருளானந்தம் விஜயராம்**
இல.10, இராஜ வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
05 **திவானி கந்தசாமி**
இல.21, பிள்ளையார் வீதி, தவசிக்குளம், வவுனியா.
06 **செல்வி ஹேமதாரணி வரதராசா**
டச்சு வீதி, சித்தன்கேணி.
07 **பரராஜசிங்கம் ரமேஸ்**
இல.05, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

அனுசரணை: உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாகாண சமூகசேவைகள் திணைக்களம் - வடமாகாணம்

## பெறுகைகளுக்கான அழைப்பு

### கைதடி அரச முதியோர் இல்லத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்பு சேவையைப் பெற்றுக்கொள்ளல் - 2017/18

1. வடமாகாணசமூகசேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த சுத்திகரிப்பு சேவைகள் வழங்குநரிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

2. விலைக்கேள்விதாரர் சுத்திகரிப்பு சேவை தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாகஇருத்தல் வேண்டும்.

3. யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. விலைமனுதாரர் கேள்விகோரப்படும் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கான சேவை வழங்கல் தொடர்பில் மூன்று (03) வருடத்துக்குக் குறையாத முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல்வேண்டும்.

5. பொருத்தமான கேள்விவைப்புபணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. “Cleaning Service -2017/2018, Elders Home Kaithady, Reference No NP/24/2/3/Cle.Ser/2017-2018” என்ற விவரம் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விவரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

7. விலைக்கேள்விகள் 19.05.2017 ஆம் திகதி 14:00 மணிக்கு முன்பதாகப் பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத்திணைக்களத்தில் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 19.05.2017 ஆம் திகதி 14.00மணிக்குதிறக்கப்படும்

8. விலைமனுதாரர்கள் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும்போது அனுமதிக்கப்படுவர்.

9. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்குப் பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.

**வனஜா செல்வரட்ணம்**
**தலைவர்,திணைக்களபெறுகைகள் குழு,**
**மாகாணசமூகசேவைகள் திணைக்களம் வ.மா**
**கண்டிவீதி,கைதடி.**

**தொலைபேசி: 0213202464 தொலைநகல்: 0212231725**
**மின்னஞ்சல்:** ssdeptnp@gmail.com



புதுப் பொலிவுடன் அதே இடத்தில்

# ஸ்ரீ லக்சுமி ஜுவல்லறி

தங்கத்திருநாளாம் அக்ஷய திருதியை தினமான 28,29/04/2017 ஆம் திகதிகளில் எம்மிடம் நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் விசேட விலைக்கழிவுடன் அன்பளிப்புகளும் வழங்கப்படும்.



தங்க நகைகள் கொள்வனவு செய்து ஐஸ்வரியத்தை அள்ளிச் செல்லுங்கள்.

162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 9440, 0777038772

# நெடுங்கேணிப் பிரதேசத்தில் பாதீனியம் பெரும் ஆதிக்கம்

## ஒழிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கேள்வி

முல்லைத்தீவு, ஏப்.28
பாதீனியம் வளர்ந்திருந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவித்தல் பலகைக்குக் கீழேயே பாதீனியம் வளர்ந்துள்ளது என்று நெடுங்கேணிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

நெடுங்கேணி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதன்போதே இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டது.




"நெடுங்கேணியில் பாதீனியம் கட்டுக்கடங்காது பரவுகின்றது. அதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. இதைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படுமா?" என்று இணைத் தலைவர்கள் கேள்வி எழுப்பினர்.

"நெடுங்கேணியில் பாதீனியம் அதிகமாகக் காணப்படுகின்றது. திணைக்கங்களின் காணிகளிலேயே அதிகம் காணப்படுகின்றன. அவற்றை அழிப்பதற்கு திணைக்க ளத்தினர் முன்வர வேண்டும். பாதீனியத்தை அழிப்பதற்கு உரிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று நெடுங்கேணி கமநலசேவைகள் உத்தியோகத்தர் தெரிவித்தார். (ந-7)



# தீர்க்கக் கூடிய பிரச்சினைகளை இழுத்தடிக்கின்றது கூட்டு அரசு

## சாந்தி எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப்.28
தீர்க்கக் கூடிய பிரச்சினைகளைக் கூட இந்த அரசு தீர்க்கவில்லை என்று தெரிவித்தார் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா.

தந்தை செல்வாவின் 40 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
தந்தை செல்வா தமிழ் இனத்துக்கான உரிமைகளை பெற்றெடுப்பதற்காக சாத்வீக ரீதியாகப் போராடியவர். நீண்ட காலப் போராட்டத்தின் பின்னர் தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்ற மதிநுட்பத்தோடு அவர் அன்று கூறிச் சென்றதை இன்றும் நாங்கள் நினைவு கூறிக்கொண்டிருக்கின்றோம்.

தற்போதுள்ள அரசு தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பெற்று கொடுப்போம், அரசியல் ரீதியாக தமிழர்களுக்குத் தீர்வு வழங்குவோம், அதியுயர் அரச தலைவர் அதிகாரத்தை மாற்றி அமைப்போம் என்ற பல்வேறு கருத்துகளை முன்வைத்து ஆட்சிக்கு வந்தது. அந்த வகையிலே இந்த அரசு தப்பிவிட முடியாது. பன்னாட்டுக்கு அரசு நிச்சயமாக பதில் கூற வேண்டும்.

போர் முடிவடைந்து 8 வருடங்கள் முடிவடைகின்ற நிலையிலே மக்களுடைய அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பது வேதனைக்குரிய ஒரு விடயம். தீர்க்க கூடிய பிரச்சினைகளை கூட இந்த அரசு தீர்க்கவில்லை. மக்கள் ஆவணம் வைத்திருக்கின்ற காணிகள் விடுவிக்கப்படாமை, நீண்ட காலமாக அரசியல் கைதிகளாக இருக்கின்ற எங்களுடைய பிள்ளைகள் விடுவிக்கப்படாமை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய பதில் கூறாமை போன்ற பல்வேறு விடயங்களில் அரசு இழுத்தடிப்புச் செய்கின்றது.

தொடர்ந்து இழுத்தடிப்புச் செய்ய முடியாத வகையிலே உலகின் நெருக்கடிக்குள் உள்ளாகியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தந்தை செல்வாவிற்கொரு சிலை அமைக்க வேண்டும் என்பது எங்களது அவா. அதனை நிறைவேற்றுவதற்கு நீங்களும் ஆதரவு தெரிவிக்க வேண்டும்- என்றார். (ந-21)

# வவுனியாவில் நடமாடும் சேவை

வவுனியா, ஏப்.28
எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் பி.ப. 4 மணிவரையும் வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் நிலமெஹவர அரச தலைவர் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது. அன்று பொதுமக்கள் கலந்துகொண்டு அரச திணைக்களங்களின் சேவைகளை கீழ்க் காணும் இடங்களில் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு பிரதேச செயலாளர் திரு. கா. உதயராசா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
வவுனியா பிரதேச செயலக வளாகத்தில் இன்று சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பான மருத்துவப் பரிசோதனைகள் நடைபெறும் மருத்துவப் பரிசோதனைகளை வெற்றிகரமாக நிறைவேற்றியவர்களுக்கான எழுத்துப் பரீட்சை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் வவுனியா பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்களின் பிரதிகள் வழங்கல், தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்களை ஏற்றல். பிரஜா உரிமைச் சான்றிதழ், கடவுச்சீட்டு தொடர்பான ஆலோசனைகள், ஊழியர்களின் சேம இலாப, ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுடன் தொடர்புடைய சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

வவுனியா சைவப்பிரகாச மகளிர் வித்தியாலயத்தில் விவசாயம், இடர்முகாமைத்துவம், தேசிய வீடமைப்பு அதிகார சபை, முதியோர் அடையாள அட்டை, சமூகசேவைகள் திணைக்களம், மின்சார சபை, வனவளத்திணைக்களம், புகையிரதத்திணைக்களம், நன்னீர் மீன் வளர்ப்பு, சமுர்த்தித் திணைக்களம், கமநல அபிவிருத்தித்திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், சுற்றுலா அபிவிருத்தி சபை ஆகியவற்றுடன் தொடர்புபட்ட சேவைகளை பெற்றுக்கொள்ளவும்.

வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் கைத் தொழில்களுடன் தொடர்புடைய சேவைகள், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, புனர்வாழ்வு அதிகாரசபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தொழில்சார் பயிற்சி நிலையங்கள், தொழில்சேவை மத்திய நிலையங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்புப்பணியகம், கல்வித்திணைக்களம், நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை, உள்ளூராட்சி அதிகாரசபைகள், ஆகியவற்றுடன் தொடர்புபட்ட சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

கடந்த 8ஆம் திகதி காணிப் பிணக்குகள் தொடர்பிலான நடமாடும் சேவை நடந்த முடிந்துள்ளது. பொதுமக்கள் தமக்கு தேவையான சேவைகளை அந்தந்த இடங்களுக்குச் சென்று பெற்றுக்கொள்வதுடன் தேவையில்லாத அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்ள முடியும்- என்றார். (ந-21)

# தமிழ் மக்களுடைய உரிமைகள் இந்த ஆண்டாவது கிட்டட்டும்

## வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் தெரிவிப்பு



வவுனியா, ஏப்.28
எங்களுக்கான உரிமைகள் இந்த வருடமாவது எங்களுக்குக் கிடைக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், இராணுவ மயமாக்கப்பட்டிருகின்ற காணிகள் தொடர்பில் தீர்வுகள் கிட்ட வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் தெரிவித்தார்.

தந்தை செல்வாவின் 40 ஆவது நினைவு தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
இராணுவ மயமாக்கப்பட்டிருக்கும் இடங்களை விடுதலை செய்வோம், அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம் என்ற பொய்யான வாக்குறுதிகளை கொடுத்து மாய வலைக்குள் எங்களுடைய தலைமைகளை விழுத்தி வாக்குகளை பெற்று கூட்டரசு ஆட்சிக்கு வந்தது. இப்போது நாங்கள் நிர்கதியான நிலையில் இரண்டு வருடங்களை கடந்து பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

எங்களுடைய வாக்குகளை பெற்று ஆட்சிக்கு வந்த கூட்டரசு எங்களுக்கு பாதகமான முறையிலே பயணிக்கின்றது.

நாங்கள் சிங்கள மக்களுக்கு அவர்களுடைய உரிமைகளைக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் எங்களுடைய உரிமையை தட்டிப்பறிக்க வேண்டாம் என்று தான் நாங்கள் சொல்கின்றோம். எங்களுக்கான உரிமைகள் இந்த வருடமாவது எங்களுக்குக் கிடைக்க வேண்டும். என்றார். (ந-21)



வவுனியா வேப்பங்குளத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த விபத்தில் இருவர் காயமடைந்தனர். மோட்டார் சைக்கிளும், முச்சக்கர வண்டியுமே விபத்துக்குள்ளாகின. மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களே காயமடைந்தனர். விபத்துத் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-21)

# ஜீவநகர் மக்களுடன் சிவநேசன் கலந்துரையாடல்

முல்லைத்தீவு, ஏப்.28
முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவின் முத்தையன்கட்டுக்குளம் கிராம அலுவலர் பிரிவின் ஜீவநகர் கிராம மக்களை ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) இன் பொருளாளரும் வடக்கு மாகாணசபை உறுப்பினருமான க. சிவநேசன் கடந்த



செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

கிராமத்தின் அவசிய தேவைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பில் அதில் கலந்துரையாடப்பட்டது.

கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் சார்ந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கருத்துக்கள் தெரிவித்தனர். (ந-21)

# இலங்கையில் பன்னாட்டுத் தரத்தில் சாலை உட்கட்டமைப்பு வசதிகள்

## இந்திய அரசு இணக்கம்

கொழும்பு,ஏப்.28
இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பன்னாட்டுத் தரம் வாய்ந்த சாலை உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு இந்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன், இந்தியாவின் மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்கரி நடத்திய பேச்சுக்களின் போது சாலை அபிவிருத்திகள் தொடர்பாக இணக்கம் காணப்பட்டது.
இலங்கையில் மூன்று பிரதான சாலைகளை அபிவிருத்தி செய்து தருமாறு இந்திய அரசிடம், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார் என்று இந்தியாவின் நெடுஞ்சாலைகள் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். யாழ்ப்பாணம் - மன்னார், மன்னார் - வவுனியா, தம்புள்ள-திருகோணமலை ஆகிய பிரதான சாலைகளை அபிவிருத்தி செய்து தருமாறு இந்தியாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. "உள்ளூர் அனுமதி மற்றும் காணிகள் சுவீகரிப்பு போன்றவற்றை உள்ளூர் முகவர் அமைப்புகள் பொறுப்பேற்றுக் கொண்டால் மாத்திரமே, இது சாத்தியமாகும். காணிகள் சுவீகரிப்பு மற்றும் ஏனைய அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளாமல், இந்தத் திட்டத்தை உரிய காலத்தில் நிறைவேற்றுவது கடினம். விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கு அனைத்துலக ஆலோசகர் ஒருவரை நியமிப்பதற்கும் எதிர்பார்த்துள்ளோம். இறுதியான திட்ட அறிக்கையைப் பெற்றுக்கொண்டு, இந்திய அரசு திட்டத்தை முன்னெடுக்கும் . இந்தியா இலங்கைக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்தும், இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் திட்டத்துக்கு எமது அம்மைச்சு முழு ஒத்துழைப்பை வழங்கும் " என்று நிதின் கட்கரி குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# மின்சார சபையின் பதில் தலைவராக கனேகல நியமிப்பு

கொழும்பு,ஏப்.28
இலங்கை மின்சார சபையின் பதில் தலைவராக சக்திவளத்துறை ஆலோசகரான டபிள்யூ.பி கனேகல நியமிக்கப்பட்டுள்ளார்.
மின்சாரத்துறை அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய குறித்த நியமனத்தை நேற்று முன்தினம் மாலை வழங்கினார். கனேகல, ஓய்வுப் பெற்ற நிர்வாக சேவை அலுவலராவார். அத்துடன் மின்சாரத்துறை அமைச்சின் ஆலோசகராகவும் செயற்பட்டு வருகிறார்.
மின்சார சபையின் தலைவர் விஜயபால பதவி விலகியதை அடுத்து, புதிய பதில் தலைவராக கனேகல நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

## கோரிக்கை நிறைவேறாவிடில்

# மீண்டும் போராட்டம்

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 28
வேலைநிறுத்தப் போராட்டம் தற்காலிகமாகவே கைவிட்டுள்ளது. எமது கோரிக்கை நிறை வேற்றப்படாவிடின், வேலைநிறுத்தப் போராட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும். இவ்வாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.
இது தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் டீ.ஜே.ராஜகருணா தெரிவித்ததாவது,
"எண்ணெய்த் தாங்கிகள் தொடர்பில் இந்தியாவுடன் எந்தவொரு ஒப்பந்தத்திலும் அரசு கையெழுத்திடாது என்று தலைமை அமைச்சரின் எழுத்து மூலமான வாக்குறுதியை அடுத்து, தற்காலிகமாகவே இந்தப் போராட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. எங்களது தொழிற்சங்க நடவடிக்கைக்கையால் அரச வளங்களை விற்பனை செய்வதிலிருந்து அரசு பின்வாங்கியுள்ளது. எண்ணெய்த் தாங்கிகள் தொடர்பில் அரசின் அடுத்த கட்ட நகர்வுகளை எமது தொழிற்சங்கம் தொடர்ந்தும் அவதானித்து வருகின்றது. அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தொழிற்சங்களின் ஒற்றுமையான நடவடிக்கைக்களில் இருந்து நாங்கள் கற்றுக்கொண்டுள்ளோம். இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரிடம் ஆலாசனை பெறப்பட்டுள்ளது. எமக்கு வழங்கிய வாக்குறுதியை உடைத்தெறிந்தால், அரசு இன்னும் பல விளைவுகளை எதிர்கொள்ளும்"-என்றார். (ஐ-10)

# மக்களைப் பழிவாங்கும் மைத்திரி அரசு



கொழும்பு, 28
மைத்திரி அரசு அரசியல்வாதிகளிடம் பழிவாங்கியது போதாதென்று, மக்களையும் பழிவாங்க ஆரம்பித்துள்ளது. அதன் ஒரு ஏற்பாடே பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தலைமையில் ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கான படையணி.
இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
மாத்தளையில் இடம்பெற்ற இறப்பு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது.
பொது மக்கள் பாதையில் இறங்கிப் போர் செய்யவில்லை. அவர்களது தேவைகளையே கோரிக்கைகளாக முன்வைக்கின்றனர். அவர்களை அடக்குவதற்குப் போர் செய்வதற்கு பீல்ட் மார்சல் தலைமையில் படையணி அமைப்பது பொது மக்களைப் பழிவாங்குவதற்காகவே. சிறிலங்கா சுதந்திரக் கட்சி யிலுள்ள மூத்த உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்யும் நடவடிக்கை மடைமையான ஒன்று.
ஐ.தே.கவின்ஓர் ஒப்பந்தத்தையே சுதந்தக் கட்சி இதன் மூலம் நிறைவேற்றிக் கொண்டது. நாம் தான் சரியான சுதந்திரக் கட்சியினர். எம்மிடமே பண்டாரநாயக்கவின் சரியான கொள்கை உள்ளது. தற்பொழுது சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்று சொல்லிக் கொள்பவர்களுக்கு கொள்கையொன்று இல்லாதுள்ளது. காலி முகத்திடலில் நடைபெறவுள்ள மே தினக் கூட்டம் வரலாற்றில் என்றுமில்லாதளவு சிறப்பானதாக அமையவுள்ளது. நாட்டிலுள்ள சகல கிராமங்களுக்கும் நாம் அழைப்பு விடுத்துள்ளோம்- என்றார். (ஐ-10)

# செயற்திறனற்ற அமைப்பாளர்களே பதவியிலிருந்து நீக்கப்பட்டனர்

## சு.க. பொதுச் செயலாளர் தெரிவிப்பு



தெகொழும்பு, ஏப். 28
சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து கொண்டு கட்சிக்காகச் செயற்படாதவர்களே, அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
அமைப்பாளர்களைப் பதவி நீக்குவதற்கான நோக்கம் பழிவாங்களோ, குரோதங்களோ இல்லை. தங்களுடைய அமைப்பாளர் பதவிகளுக்கு ஏற்ப செயற்படாமையே காரணம். அவ்வாறானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது கட்சியின் பொறுப்பாகும்.
அவர்களுக்கு மாத்திரமல்ல, இன்னும் எதிர்காலத்திலும் செயற்றிறனற்ற அமைப்பாளர்களுக்கும் இதுதேதான் கதி.என்றார். (ஐ-10)

# சிறைச்சாலை பஸ் மீது சூட்ட மற்றுமொரு சந்தேகநபரும் கைது



கொழும்பு, ஏப். 28
களுத்துறை பிரதேசத்தில் சிறைச்சாலைப் பேருந்து மீது நடத்தப்பட்ட துப்பாக் கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் மற்றுமொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். மல்வத்துகிரிபிட்டியப் பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். குறித்த சந்தேகநபர், மனிதப் படுகொலைகள் பலவற்றுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று களுத்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். சிறைச்சாலைப் பேருந்து மீது கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி காலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பிரபல பாதாள உலக் குழுவின் தலைவர் சமயங் உள்ளிட்ட 7 பேர் சாவடைந்ததுடன், 4 பேர் காயமடைந்தனர். (ஐ-10)

# சு.கவின் எதிர்காலம் குப்பை மேடாகிவிடும்

## எச்சரிக்கிறார் ஜனக்க பண்டார

கொழும்பு, ஏப். 28
திறமைவாய்ந்த என்னைப் போன்ற அமைப்பாளர்களைப் பதவி நீக்கியதன் ஊடாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலம், மீதொட்டமுல்ல குப்பை மலையாகிவிடும். இவ்வாறு பதவி விலக்கப்பட்ட பதுளை தொகுதி முன்னாள் அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான ஜனக்க பண்டார தென்னகோன் எச்சரித்தார்.
கடந்த செவ்வாய்க்கிழமை அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
"அமைப்பாளர் பதவியிலிருந்து என்னை, நீக்கியதையடுத்து, மத்திய மாகாண சபையின் அமைச்சரான என்னுடைய மகன் பிரமித் பண்டார தென்னகோன், அமைச்சர் பதவியை விட்டு விலகினார்.
சுதந்திரக் கட்சிக்குள் பல குறைபாடுகள், தவறுகள் இருக்கின்றன. என்னுடைய தந்தை, 1956ஆம் ஆண்டு முதல் தம்புள்ளையைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். தந்தையின் சேவையை, 1994ஆம் ஆண்டு முதல் நான் முன்னெடுத்தேன்" - என்றார்.
அதேவேளை ஜனகபண்டார தென்னகோனின் மகன் பிரமித பண்டார தெரிவித்ததாவது, "மதுபான வியாபாரிகளுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் நற்பெயர் காணப்படுகிறது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் மகிந்த சார்புக் குழுவினர் இணைந்து பயணிக்கும் காலம் உருவாகும் என்ற நம்பிக்கை சிறியளவிலேனும் எமது உள்ளங்களில் காணப்பட்டது. இருப்பினும், அண்மைய நிகழ்வுகள் அது சாத்தியமில்லையென்பதை எடுத்துக் காட்டுகின்றது- என்றார். (ஐ-10)

# படைகளின் தளபதி பொறுப்பை ஏற்பதில்தீர்க்கமான முடிவில்லை

## பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 28
பாதுகாப்புப் படையின் பொறுப்பை ஏற்பது, என்னுடைய அமைச்சுப் பதவிக்குப் புறம்பானதாகும். இது தொடர்பில் . அரச தலைவருடன் இன்னும் தீர்க்கமான பேச்சுக்கள் இடம்பெற வேண்டும் என்று பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
அமைச்சுப் பதவியல் இருக்கும்போதே மேற்கொள்ளும் ஒரு யோசனையாகத்தான் இந்த பாதுகாப்புப் படை தொடர்பான யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது.
இன்னும், அதனை முன்னெடுக்கும் முறைமைகள் தொடர்பில் கலந்துரையாடப்படவில்லை. அரச தலைவர் இது தொடர்பில் இன்னும் வரையறுத்து எதனையும் கூறவில்லை. இது தொடர்பில் இன்னும் கலந்துரையாட வேண்டும் என்றார் பொன்சேகா.
நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், சரத் பொன்சேகாவுக்குப் புதிதாக பொறுப்பு வழங்கப்படும் போது, அவர் தற்பொழுது வகிக்கும் அமைச்சுப் பதவியை இழக்க வேண்டிவரும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்திருந்தார். (ஐ-10)

## காட்டுத் தீயால் 20 ஏக்கர் நாசம்

கொழும்பு, ஏப். 29
அக்கரபத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போபத்தலாவ மெனிக் பாலம கருப்பன் தையிலம் வனப்பாது காப்புக் காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட காட்டுத்தீயால் 20 ஏக்கர் காடு எரிந்து நாசமாகின.
என்று அக்கரபத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.
தீயைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வர நேற்று நுவரெலியா இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டதுடன் பொலிஸார் இராணுவம், பொது மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர முயற்சித்தனர்.
இந்தத் தீ காரணமாக எமது நாட்டுக்கே உரித்தான அரிய வகை மூலிகைகள், பெறுமதி மிக்க மரவகைகள், உட்பட ஊர்ந்து செல்லும் பிராணிகள் முயல், மான் போன்ற சாதுவான மிருகங்களும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ -10)

# ஐ.தே.கவின் கட்டளைப்படியே செயற்படுகிறது சு.க.

## மகிந்த அணி சாடல்

கொழும்பு, ஏப். 28
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்திலிருந்து பிறப்பிக்கப்ப டும் உத்தரவுகளுக்கு அமையவே சுதந்திரக்கட்சியின் தலைமைப்பீடம் முடிவுகளை எடுக்கிறது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.



பொரளை. என்.எம். பெரேரா நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
"இலங்கையில் அமைந்திருந்த பன்னாட்டு இராணுவ முகாமை பண்டாரநாயக்க வெளியேற்றினார். திருமலையி லிருந்து பிரிட்டனின் முகாமை அகற்றிவிட்டு சுதந்திர இலங்கையை அவர் ஸ்தாபித்தார். அவ்வாறான கட்சியிலுள்ள உறுப்பினர்கள் சிலர் திருகோணமலையின் கட்டுப்பாட்டை இந்தியாவுக்கு வழங்குவதற்கு முயற்சிக்கும் போது அமைதி காத்து வருகின்றனர். கட்சிக்காகக் கடுமையாக உழைத்தவர்கள் தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். ஜனக்க பண்டார தென்னக்கோனின் பரம்பரை இந்தக் கட்சிக்காகப் பெரும்பாடுபட்டுள்ளதை இன்று மறந்து விட்டனர்.
ஐக்கிய தேசியக் கட்சியின் தேவைக்கு அமைவாகவே இந்த முடிவு சுதந்திரக்கட்சியால் எடுக்கப்பட்டுள்ளது. தற்போது சுதந்திரக்கட்சியின் பல்வேறுபட்ட தீர்மானங்கள் சிறிகொத்தவின் வழிகாட்டலுக்கமைவாகவே முன்னெடுக் கப்படுகின்றது" - என்றார். (ஐ - 4)

# முழுக் கடையடைப்புப் போராட்டத்துக்கு மட்டக்களப்பு முஸ்லிம்கள் ஆதரவில்லை

## முன்னாள் எம்.பி. அரியநேந்திரன் கவலை

செங்கலடி, ஏப்.28
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவரங்களை வெளியிடவேண்டும் என்பதோடு காணி விடுவிப்பு போன்ற கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடைப்பிடிக்கப்பட்ட முழுக் கடையடைப்புப் போராட்டத்துக்கு மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் ஆதரவு வழங்காமை கவலையளிக்கின்றது
இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களில் உறவுகளின் அழைப்பின் பேரில் நேற்று நடைபெற்ற கடையடைப்புப் போராட்டத்துக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் பிரதேச வர்த்தகர்கள் ஒத்துழைப்பு வழங்காமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவயது.
வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் அழைப்பின் பேரில் நடைபெற்ற கடையடைப்புப் போராட்டத்துக்கு தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள் ஆதரவு வழங்குவதாக அறிவித்திருந்தன.
இந்தநிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி, ஏறாவூர் மற்றும் காத்தான்குடி பிரதேசங்களிலுள்ள வர்த்தகர்கள் ஒத்துழைக்கவில்லை. குறித்த பிரதேசங்களில் வழமைபோல் அன்றாட வர்த்தக நடவடிக்கைகள் நடைபெற்றன. இது கவலையளிக்ககூடிய விடயமாகும்.
வடக்கு, கிழக்கில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் கடந்த இரு மாதகாலத்துக்கும் மேலாக நடத்தப்படும் தொடர்போராட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையில் நடைபெற்ற கடையடைப்புப் போராட்டத்துக்கு தமிழ்பேசும் மக்கள் என்ற ரீதியில் முஸ்லிம்கள் ஒத்துழைப்பு தருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டபோதும் மட்டக்களப்பிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் ஆதரவு கிடைக்கவில்லை - என்றார். (ஐ -ய.47)

# மன்றுக் கட்டளையைக் கிழித்தவர்களை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவு

கிழக்கு மாகாணசபைக்கு முன்பாக வேலை தேடும் பட்டதாரிகள் கடந்த 25 ஆம் திகதி மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது திருகோணமலை நீதிமன்றால் வழங்கப்பட்ட தடையுத்தரவுக் கட்டளையைக் கிழித்து காலுக்குக் கீழ்ப் போட்டு மிதித்த விவகாரம் தொடர்பில் சம்பந்தப்பட்ட நால்வரை எதிர்வரும் மே 23 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
கடந்த 25 ஆம் திகதி கிழக்கு மாகாண சபை கூடியவேளையில், பட்டதாரி கள் மாகாணசபையின் பிரதான கதவுகளை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
ஆர்ப்பாட்டக்காரர்களால் பொதுச்சொத்துக்கள் மற்றும் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படலாம் எனத் தெரிவித்து அதனை நிறுத்துவதற்கு ரிய கட்டளையைப் பிறப்பிக்குமாறு தலைமையகப் பொலிஸ் நிலையத்தால் திருகோணமலை நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது.
கோரிக்கையைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதிவான் எம்.எச்.எம். ஹம்ஸா, ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை தாங்குபவர்களுக்கு, பொது மக்களுக்கோ அல்லது பொது சொத்துக்களுக்கோ பாதிப்புக்கள் ஏற்படாதவாறு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்குமாறு கட்டளை பிறப்பித்ததுடன் அதனை ஒலிபெருக்கியில் அறிவிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.
அதனையடுத்து நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையை பொலிஸார் வழங்கிய போது பிக்கு ஒருவர் அதனைக் காலுக்குக் கீழ்ப் போட்டுக் கிழித்தார். தகாத வார்த்தைகளால் பேசி நீதிமன்றக் கட்டளையை உதாசீனப்படுத்தினர்.
சம்பவம் தொடர்பில் மன்றின் கவனத்துக்கு கொண்டுவந்த பொலிஸார், அச்செயற்பாட்டில் ஈடுபட்டவர்களைக் கைது செய்திருந்தால் பொலிஸாருக்கும் வேலை தேடும் பட்டதாரிகளுக்குமிடையில் பெரும் பிரச்சினைகள் நடந்திருக்கும் என்று நீதிமன்றில் தெரிவித்தனர்.
ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை தாங்கிய பௌத்த பிக்கு உட்பட மூவரையும் நீதிமன்றில் முன்னிலையாக கட்டளை பிறப்பிக்கு மாறு திருகோணமலை தலைமையகப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித் தனர். அதனையடுத்து ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை தாங்கிய நான்கு பேரையும் எதிர்வரும் மே மாதம் 23 ஆம் திகதி திருகோணமலை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பிரதம நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார். (ஐ - ய.45)

# திருடர்களைப் பிடிக்கவே பொன்சேகாவுக்கு புதிய பதவி

கொழும்பு, ஏப். 28
நாட்டில் சிவில் நிர்வாகம் வீழ்ச்சியடைந்து விட்டது என மக்களும் கூறுகின்றனர். அதனால் சட்டம் ஒழுங்கு சீர்குலையாமல் இருப்பதற்கு இராணுவக் கூட்டுப் படைகளின் தளபதியாக பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார். முன்னைய அரசில் அங்கம் வகித்ததிருடர்களையும் கொலைகாரர்களையும் பிடிப்போம். அமைச்சரவையின் அமைச்சர்கள் அனைவரும் இந்த யோசனையை ஏற்றுக்கொண்டனர்.
இவ்வாறு சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகள், அவற்றுக்கு அவர் அளித்த பதில்களின் விவரம் வருமாறு:
**கே:** மற்றுமொரு கோத்தாபயவை உருவாக்குவதற்காக பொன்சேகாவுக்கு இராணுவத் தளபதி பதவியை வழங்கப் போகின்றீர்களா?
**ப:** கோத்தாபயவுக்கு மகிந்த ராஜபக்சவே அஞ்சி கொண்டிருந்தார். ஒருமுறை மகிந்த ராஜபக்ச சமாதானம் தொடர்பாக ஒரு குழுவினருடன் பேச்சு நடத்திக்கொண்டிருந்த போது அங்கு கோத்தா வந்தார். அதனைக் கண்ட மகிந்த ராஜபக்ச கோத்தா வருகிறார் என்று பதறியடித்துக் கொண்டு பேச்சு நடத்த வந்திருந்தவர்களை ஒரு அறையில் போட்டு பூட்டி விட்டார். இவ்வாறு தான் மகிந்த ராஜபக்ச போர் செய்தார்.
**கே:** தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முயலுகின்றீர்களா?
**ப:** அரசியல் ரீதியாகச் செயற்படுவதற்கு அவர்களுக்கு இடமளிக்க முடியாது.
**கே:** ஏன் அரசால் ஒழுக்கத்தை ஏற்படுத்த முடியாதா?
**ப:** இங்கு பல்வேறு விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். நாட்டின் பாதுகாப்பும் முக்கியம். அதேநேரம் ஒழுக்கமும் முக்கியம். எனவே இந்த இரண்டு விடயங்களையும் முன்னெடுப்பதற்காகவே சரத்பொன்சேகாவை நியமிக்கின்றோம்.
**கே:** தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றலாமே?
**ப:** எவ்வளவு கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளோம் என்று உங்களுக்குத் தெரியும். வரவு, செலவுத்திட்டத்தின் ஏற்பாடுகளைக் கூட நாங்கள் திருத்தியிருக்கின்றோம். தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றியே வருகின்றோம். ஆனால் யாரோ ஒரு அதிகாரி எதனையோ கூறினார் என்பதற்காக ஒரு நாள் வேலைநிறுத்தம் நடத்திய மருத்துவ அதிகாரிகள் சங்கம் எமது நாட்டில் தான் உள்ளது. மனிதாபிமானமற்ற முறையில் எதனையும் செய்வதற்கு அனுமதிக்க முடியாது. முன்னர் கொழும்பில் வந்து ஆர்ப்பாட்டம் செய்வதற்கு அஞ்சினர். கோத்தாவுக்கு அஞ்சி ஆர்ப்பாட்டம் செய்யாமல் இருந்தனர். இப்போது அந்தப் பயம் போய் விட்டது. அதனால் நினைத்தவுடன் கொழும்பு வந்து ஆர்ப்பாட்டங்களைச் செய்கின்றனர்.



**கே:** ஏன் பொலிஸாரைக் கொண்டு சிவில் நிர்வாகத்தை முன்னெடுக்க முடியாதா?
**ப:** இராணுவத்தைக் கொண்டு செய்வதிலும் தவறில்லை . தற்போது போர் இல்லை. இராணுவமும் ஏதாவது செய்வதற்காகப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். எனவே அவர்களைப் பயன்படுத்துவதில் தவறில்லை.
**கே:** இதன்மூலம் நாடு இராணுவமயமாகுமே?
**ப:** அவ்வாறு இல்லை. இராணுவத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் தவறில்லை.
**கே:** சிவில் நிர்வாகத்தில் இவற்றை மேற்கொள்ள அரசுக்கு முதுகெலும்பில்லையா?
**ப:** அவற்றைச் செய்வதன் மூலமே முதுகெலும்பை நாம் காட்டுகின்றோம். புதிய நியமனம் மூலம் நாம் முதுகை நிமிர்த்த முடியும்.
**கே:** ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுமா?
**ப:** பார்ப்போம்.
**கே:** கோத்தா செய்ததையே பொன்சேகா செய்வாரா?
**ப:** அப்படி இல்லை. பொன்சேகா கஷ்டப்பட்டவர், கஷ்டங்களை அறிந்தவர். அநீதிக்கு எதிராக அவர் செயற்படுவார்.
**கே:** பொன்சேகாவுக்கு இராணுவத் தளபதி பதவி வழங்குவதற்கு பதிலாக சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவி வழங்கலாமே?
**ப:** அது நல்ல யோசனை. அது தொடர்பில் நாங்கள் பேசலாம். ஆனால் சட்டம் ஒழுங்கு அமைச்சை வழங்கினால் அதில் பொலிஸார் மட்டுமே உள்ளடங்குவர்.
**கே:** குப்பைப் பிரச்சினைக்கு என்ன தீர்வு?
**ப:** குப்பைகளைக் கொட்டுவதற்காகத்தான் முத்துராஜவெல மற்றும் தொப்பை ஆகிய பிரதேசங்களை தெரிவு செய்தோம். அங்கும் குப்பைகளை கொட்ட வேண்டாமென ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். மீதொட்டமுல்ல குப்பை எங்களுக்கு வேண்டாமெனக் கூறுகின்றனர். நாட்டின் ஒருமைப்பாடு தொடர்பாக பேசுபவர்கள் குப்பை விடயத்தில் பிரித்துப் பார்க்கின்றனர். ஒவ்வொரு சந்தி சந்தியாக சமஷ்டியைக் கொண்டுவரவே முயற்சிக்கின்றனர்.
**கே:** அப்போது இதற்கு என்ன தான் தீர்வு?
**ப:** அதற்குத்தான் சரத் பொன்சேகாவை சிறப்புப் பதவிக்கு கொண்டு வர முயற்சிக்கின்றோம்.
**கே:** அப்படியானால் அமைச்சர்களாகிய உங்களால் எதனையும் செய்ய முடியாதா?
**ப:** ஒருவரால் அனைவரையும் கட்டுப்படுத்த முடியாது. உங்களால் உங்கள் நிறுவனத்தின் அனைவரையும் கட்டுப்படுத்த முடியுமா? முடியாது. அதனால் தான் இவ்வாறான ஏற்பாடுகளை செய்கிறோம் - என்றார். (ஐ - 4)

# வில்பத்து விவகாரம் தொடர்பான கலந்துரையாடலில் குழப்ப நிலை

## வெளிநடப்புச் செய்தார் நவவி எம்.பி.

மன்னார், ஏப். 28

வில்பத்து விவகாரம் தொடர்பாக முசலி பிரதேச செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் குழப்ப நிலை ஏற்பட்டது. புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நவவி அதிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்ற கலந்துரையாடலுக்கு அரச தலைவர் செயலகத்தில் இருந்து மேலதிகச் செயலாளர் கலந்து கொள்வார் என்று கூறப்பட்டிருந்தது. எனினும் அவர் கலந்து கொள்ளவில்லை. அதனாலேயே குழப்ப நிலை ஏற்பட்டது.

கலந்துரையாடலில் பிரதியமைச்சர் பைசால் காசிம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ். தௌபீக், எம். எச்.எம். சல்மான், மாகாணசபை உறுப்பினர்களான எஸ்.எச்.எம். நியாஸ், ஏ.எல். தவம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி குனைஸ் பாரூக், சட்டத்தரணி முத்தலிப் பாபா பாரூக், கடற்படை அதிகாரிகள், வன பரிபாலன திணைக்கள அதிகாரிகள், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரின் அதிகாரிகள், பேராதனை பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் ஹஸ்புல்லா, விரிவுரையாளர் நௌபல் மற்றும் முசலி பிரதேச மக்கள், முசலி பிரதேசச் செயலாளர் ஆகியோருடன் அமைச்சர் றிசாட் பதியுதீனின் பணிப்புக்கு அமைவாக புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நவவியும் கலந்து கொண்டிருந்தார்.

பேராதனை பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் ஹஸ்புல்லா மற்றும் விரிவுரையாளர் நௌபல் ஆகியோர் வில்பத்து தொடர்பில் விளக்கம் வழங்கினர்.

அறிவிக்கப்பட்டமைக்கு அமைவாக அரச தலைவர் செயலகத்தின் மேலதிகச் செயலாளர் குறித்த கலந்துரையாடலில் கலந்து கொள்ளாமை குறித்து கலந்தரையாடலில் கலந்து கொண்ட மக்கள் தமது அதிருப்தி வெளியிட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் நவவியும் அதிருப்தி வெளியிட்டு அங்கிருந்து வெளிநடப்புச் செய்தார். கலந்துரையாடல் இடம்பெற்ற மண்டபத்தில் சிறிது நேரம் குழப்ப நிலை ஏற்பட்டது.

முசலி பிரதேசச் செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் பொலிஸாரின் உதவியை நாடி நிலமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். கலந்துரையாடல் ஆரம்பித்துச் சிறிது நேரத்தில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

"வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. பேராதனை பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் ஹஸ்புல்லா மற்றும் விரிவுரையாளர் நௌபல் ஆகியோர் அதிகாரிகள் முன்னிலையில் வில்பத்து தொடர்பாக விரிவான விளக்கம் ஒன்றை வழங்கியுள்ளனர்.

மறிச்சுக்கட்டி பகுதியில் களப்பரிசோதனை மேற்கொள்ளவுள்ளோம். அதன் பிற்பாடு அதிகாரிகள் தாம் தயாரித்த அறிக்கையை மேலதிகாரிகளுக்கு சமர்ப்பித்த பின்பு நாங்கள் சுற்றாடல் மற்றும் வனப்பரிபாலன அமைச்சின் செயலாளர் முன்னிலையில் இந்த விடயம் தொடர்பில் இறுதி முடிவெடுக்க மேலதிக சந்திப்பொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளோம். என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். (ற-56)



வேப்பங்குளத்தில் நேற்றுக் காலை நடந்த விபத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மோட்டார் சைக்கிளும், சைக்கிளுமே இவ்வாறு விபத்துக்குக்குள்ளாகின. விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற –21)

# முல்லைத்தீவு இளைஞர்களின் இறப்பு வடக்கின் நிலையைப் பறைசாற்றுகிறது

## மஸ்தான் எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப்.28

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள் ஈரானில் உயிரிழந்துள்ளமை வடக்கு மாகாண இளைஞர்களின் தற்போதைய நிலையை எடுத்துக் காட்டுகின்றது. இந்தச் சம்பவம் மிகவும் மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கே.காதர் மஸ்தான் தெரிவித்தார்.

அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

வடக்கு மாகாணத்திலுள்ள இளைஞர்களின் உண்மையான நிலையை முல்லைத்தீவு உடுப்புக்குளத்தைச் சேர்ந்த பேரம்பலம் மைதிலிபாலன், செம்மலையைச் சேர்ந்த விஜயகுமார் பிரசாந்த் ஆகியோரது உயிரிழப்புகள் பறைசாற்றுகின்றது. போர் முடிவுற்று எட்டு ஆண்டுகள் கடந்தாலும் எமது இளை ஞர்களின் வாழ்வியலில் எந்த அபிவிருத்தியும் காணப்படாத நிலையில் பலராலும் எடுக்கப்படும் இறுதி முடிவே இந்த வெளிநாட்டுப்பயணம். இவ்வாறான வெளிநாட்டுப்பயணங்கள் சரி பிழைக்கு அப்பால் சூழ்நிலையே காரணமாக அமைகிறது.

குடும்ப வறுமைகாரணமாக வெளிநாடுகளுக்கு சென்று உழைக்கவேண்டும் என்ற ஆவலுடன் போலி முகவர்களிடம் பணத்தைக் கொடுத்து முறையற்ற விதத்தில் வெளிநாடு செல்ல முற்பட்டு இறந்த இரு இளைஞர்களினதும் உயிரிழப்புகள் ஏற்றுக் கொள்ள முடியாதவையாகும்.

இளைஞர்களின் உயிரிழப்பால் சோகத்தில் ஆழ்ந்துள்ள கிராம மக்களுக்கும் அவர்களது குடுப்பத்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரசியலுக்குள் வந்த பின்னர் அதிகமான இளைஞர்களுடைய தேவைப்பாடுகளை நான் அறிந்துகொள்கின்றேன். இவர்களுக்கான உதவிகளை அரசின் மூலமும் ஏனைய வெளிநாட்டு உதவிகள் மூலமும் நிவர்த்தி செய்ய முயற்சித்துக் கொண்டே இருக்கின்றேன். பெருமளவில் இல்லாவிடினும் குறைந்த அளவு அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை கொண்டு செல்லக் கூடியவாறு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றேன். என்றுள்ளது. (ற -21)

# வீதி சீரின்மையால் போக்குவத்துக்கு இடையூறு

முல்லைத்தீவு, ஏப்.28

ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு வீதி திருத்த வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஒட்டுசுட்டானிலிருந்து பிச்சம்பீலி வரையும், புதுக்குடி யிருப்பிலிருந்து இராணுவ முகாம் வரையும் வீதிகள் சீரமைக்கப்பட்டன. சுமார் 500 மீற்றர் தூரமான வீதி சீரமைக்கப்படவில்லை. சீரமைக்கப்படாத வீதி போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. வீதி அதிகார சபையினர் குறித்த வீதியைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ற - 500)

# மூதாதையர்களின் வரலாறுகளை அறிந்து கொள்வது மிக முக்கியம்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு

எங்களுடைய மூதாதையர் எவ்வாறாக வாழ்ந்தார்கள், எவ்வாறாக எங்களை ஆண்டார்கள், எங்களுக்கு எவ்வாறான ஒரு இராச்சியம் இருந்தது, நாங்கள் இந்தப் பூகோளத்திலே எப்படி வாழ்ந்தோம் என்ற உண்மைகளை எல்லாம் கொண்டுவர வேண்டிய காலம் இதுவே.

இவ்வாறு வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா தெரிவித்தார்.

கடந்தவாரம் முல்லைத்தீவு நகரப் பகுதியில் பண்டாரவன்னியன் சிலை திரை நீக்கம் செய்யப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எல்லோருக்கும் தெரியும். காலம் காலமாக நாங்கள் காட்டிக் கொடுக்கப்படுகிறோம். பண்டாரவன்னியனின் வீரவரலாறு. அவன் எவ்வாறாக போராடினான், எவ்வாறாக களம் அமைத்திருந்தான், அவனுடைய சேனைகள் எவ்வாறாக திரட்டினான். யார் யாரை எல்லாம் நம்பினான், எவ்வாறாகத் தனது இறுதிமூச்சுவரை வீரத்தன்மையை வெளிக்காட்டிக் கொண்டான் என்பதை வெளிப்படுத்துவது எமது நிகழ்காலத்துக்கு தேவையானதாக இருக்குமென்று நான் நம்புகிறேன்.

முல்லைத்தீவிலே அமைக்கப்பட்டிருக்கும் சிலை வடக்கு மாகாணசபையாலே நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. அது அமைச்சுக்குட்பட்ட கலை பண்பாட்டுக்கு உரியது என்ற அடிப்படையிலே அந்தப் பொறுப்பு எமக்கு வழங்கப்பட்டது.

இந்த வரலாறு எவ்வளவு உண்மையானது என்பதை எங்களுடைய மக்கள் மேலும் மேலும் படிக்கவேண்டும். அதற்காக இங்கு இந்தச் சிலையை அருமை பெருமையாகச் செய்து காண்பித்திருக்கிறீர்கள். இதனை அமைக்க உதவிய நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனைப் பாராட்டுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

காலம் காலமாக இங்கே பத்திரிகையாளர்கள். மக்கள் பிரமுகர்கள் எனப் பலரும் வருகின்றனர். வருகின்றவர்கள் அங்கு 10 நிமிடமோ 15 நிமிடமோ நின்று அவனின் வரலாறை அறிய ஒரு பூங்காவையும் அமைக்க ஆவன செய்வோம் - என்றார் (ற - 500)

# மாதாந்தம் மின் கட்டணம் அறவிடாததால் சிரமம்

முல்லைத்தீவு. ஏப்.28

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மாதாந்தம் மின்சாரக் கட்டணம் அறவிடும் உத்தியோகத்தர் வராததால் மின் பாவனையாளர்கள் பெரும் இடர்பாட்டை எதிர் கொள்கின்றனர் என்று பாவனையாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களாக அறவீட்டாளர்கள் வருவதில்லை. இதனால் மின் பாவனையாளர்கள் செலுத்த வேண்டிய தொகை அலகு என்பது அடிப்படையில் ஒரு பெரிய தொகையாக மாறக்கூடும். மின்சார சபையினர் மாதாந்தம் பாவிக்கும் அலகை கணக்கிட்டு ரசீது கொடுத்தால் இலகுவாக பணத்தை செலுத்தலாம்.

மாதாந்தம் அறவீடுகளை மேற்கொள்ள மின்சாரசபை ஆவன செய்ய வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர். (ற - 500)

# அரசியலாளர்கள் கொள்கைகளால் வடக்கு, கிழக்கு மக்கள் வஞ்சிப்பு

## கிழக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு

திருகோணமலை, ஏப்.28

நாட்டின் ஏனைய ஏழு மாகாணங்களும் சுதந்திரம் அடைந்த நாள் முதல் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மாத்திரமே சுதந்திரம் அடைந்தநாள் தொடக்கம் வீழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த நாட்டின் அரசியலாளர்களின் கொள்கைகளின் அடிப்படையில் வஞ்சிக்கப்பட்ட மக்களாக வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் உள்ளனர்.

இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய கி. துரைராசசிங்கம் தெரிவித்தார்.

திருகோணமலையில் அண்மையில் இடம்பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு பதக்கம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாண விளையாட்டு வீரர்களுக்கான பதக்கம் வழங்குகின்ற நிகழ்வில் எமது மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்கள் தான் குறைவான பதக்கங்களைப் பெற்றுள்ளார்கள். இந்தச் செய்தி அந்த மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவன் என்கின்ற வகையில் எனக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்ற செய்தி அல்ல. ஆனால் அதற்குப் பல பின்புலங்கள் காரணமாக இருக்கலாம். அவற்றை மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு அதிகாரிகள் சீர் செய்ய வேண்டும்.

வெளிநாடுகளில் அந்தந்த நாட்டு மக்களைத் தன் சொத்துக்களாக மதிக்கின்றார்கள். நம்முடைய நாட்டில் நிலைமை அவ்வாறு இல்லை. இனம் மொழி மதம் என்கின்ற பேய்களை நாங்களே வளர்த்துக் கொண்டிருக்கின்றோம். இந்தப் பேய்களுக்கு அடிபணிந்துகொண்டு நாங்களும் உலக நாடுகளுக்கு முன் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்று சொல்வதற்கு எந்தத் தகுதியும் எமக்கு கிடையாது.

மக்களின் குறைகளைக் கேட்டு அதனைத் தீர்க்க வேண்டிய கடமை அரசியலாளர்களுக்கு உண்டு. ஆனால் நிர்வாகிகள் என்பவர்கள் அரசியலாளர்கள் தீட்டுகின்ற திட்டங்களை எந்தளவுக்கு நடைமுறைப்படுத்துகின்றார்கள் என்கின்ற கேள்வியும் எங்களுக்கு இருக்கின்றது. இந்த விடயங்களை கருத்தில் கொண்டு அதிகாரிகள் தங்களுடைய அதிகாரங்களை எவ்வாறு மத்தியில் இருந்து பெற்று எங்களுடைய மாவட்டங்களுக்கு வழங்க வேண்டும் என்பது தொடர்பாக தங்களது உத்திகள் அனைத்தையும் கையாள வேண்டும் - என்றார். (ற - 101)

# கிழக்கும் முடங்கியது! ஒன்றித்தன உணர்வுகள்!


மட்டக்களப்பு


திருகோணமலை




கல்முனை


அம்பாறை


செங்கலடி


அச்சுவேலி


சாவகச்சேரி


சங்கானை






தட்டாதெரு


மானிப்பாய்

# கொழும்பு அரசே! எமது குரல்


சுன்னாகம்


யாழ்ப்பாணம்


இணுவில்


கொக்குவில்


மல்லாகம்


மருதனார்மடம்


மந்திகை


முல்லைத்தீவு


கிளிநொச்சி


நெல்லியடி


பருத்தித்துறை


வல்வெட்டித்துறை


உடுப்பிட்டி


தெல்லிப்பழை


உரும்பிராய்



# உன் காதுகளில் கேட்கிறதா?









வவுனியா






மன்னார்




## அகதிகளின் மகன் நான்; பாப்பரசர் மிக உருக்கம்

உரோம், ஏப். 28
அகதிகள் மற்றும் கைவிடப்பட்டவர்களின் மகனே நான் இவ்வாறு தெரிவித்தார் பாப்பரசர் பிரான்சிஸ்.
"கனடாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
ஈராக், சிரியா மற்றும் ஏனைய நாடுகளில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக நாளுக்குநாள் நூற்றுக்கணக்கான அகதிகள் உருவாகிக் கொண்டுள்ளனர். அவர்கள் தமது எதிர்காலம் தொடர்பில் மிகுந்த அச்சத்துடன் உள்ளனர்.
ஒவ்வொரு நாடுகளும் அகதிகளை ஏற்க வேண்டும். அவர்களுக்காக தமது கதவுகளைத் திறந்து வைத்திருக்க வேண்டும். சிரியாவில் இடம்பெறும் உள்நாட்டுப் போர் உடனடியாக முடிவுக்கு வரவேண்டும்.
அவர்களுக்கென ஒவ்வொருவரும்உள்ளோம்என்றநிலையை தோற்றம் பெறச் செய்யவேண்டும். நான் அகதிகளின் மகன் எனப்பாப்பரசர்மேலும்தெரிவித்தார். (ம)





# வடகொரியா மீண்டும் போர்ப் பயிற்சி
# தீபகற்பத்தில் பதற்றம் இரட்டிப்பு

### ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா இணைந்து விரைவில் ஆலோசனை

பியாங்யாங், ஏப். 28
கொரியத் தீபகற்பத்தில் போர்ப் பதற்றம் நிலவுகின்ற நிலையில், வடகொரியா நேற்றுமுன்தினம் மாலை (இலங்கை நேரப்படி) போர்ப் பயிற்சி மேற்கொண்டுள்ளதுடன் இராணுவ அணிவகுப்பையும் நடத்தியுள்ளது. இது அமெரிக்கா - வடகொரியா இடையே பதற்றத்தை மேலும் அதிகரித்தது.
வடகொரியாவின் அணுவாயுதத் திட்டம் அமெரிக்காவுக்கு எதிரானது என்று அந்த நாடு தெரிவித்ததைத் தொடர்ந்து தனது பாதுகாப்புக் கருதியும், கொரியத் தீபகற்பத்தில் உள்ள தனது நட்பு நாடுகளான தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகியவற்றின் பாதுகாப்புக்கருதியும்தீபகற்பத்தில் வின்சன் என்ற விமானம் தாங்கிப் போர்க் கப்பலையும், யு.எஸ்.எஸ். மிசிகன் என்ற ஏவுகணை நீர்மூழ்கிக் கப்பலையும் நிறுத்தியுள்ளது அமெரிக்கா.



அமெரிக்காவின் இந்த நகர்வுக்கு வடகொரியாதனது கடும்கண்டனத்தைத் தெரிவித்தது. முன்னதாக தனது தேசியத் தலைவரின் பிறந்த தினத்தில் மிகப்பெரும் இராணுவ அணிவகுப்பை நடத்தியிருந்தது. வடகொரியாவின் 85ஆவது இராணுவ தினம் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டியும் அந்த நாடு மீண்டுமொரு இராணுவ அணிவகுப்பையும் போர்ப் பயிற்சியையும் நடத்தியுள்ளது. அந்த நாடு இதுவரை நடத்தியதிலேயே இதுதான் மிகப்பெரிய போர்ப் பயிற்சி என்றுபன்னாட்டு ஊடகங்கள்செய்திவெளியிட்டன.
இதனால் அமெரிக்கா - ஜப்பான் - தென்கொரியா இணைந்து விரைவில் டோக்கியோவில் ஆலோசனை நடத்தவுள்ளன. இதைவிட அமெரிக்கா இன்னும் ஓரிரு போர்க் கப்பலை கொரியத் தீபகற்பத்துக்கு அனுப்பவுள்ளது என்றும்செய்திகள்வெளியாகியுள்ளன. (ம)

## விமானம் தாங்கி போர்க்கப்பலை சுயமாகத் தயாரித்தது சீனா

பீஜிங், ஏப். 28
முற்றுமுழுதாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட விமானம் தாங்கிப் போர்க் கப்பலை அறிமுகம் செய்துள்ளது சீனா.
உலக அளவில் சீனாவின் படைபலம் அபாரமானது. அந்த நாடு வருடாவருடம் தனது இராணுவ கட்டமைப்பை விரிவுபடுத்திக் கொண்டுசெல்கிறது. ஆனால் விமானம் தாங்கிப் போர்க் கப்பல் வரிசையில் சீனாவில் ஒன்று மட்டுமே இருந்தது. அதுவும் ரஷ்யாவிடம் இருந்து கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்டது. இதனால் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் உள்நாட்டில் விமானம் தாங்கிப் போர்க் கப்பலைக் கட்ட ஆரம்பித்தது சீனா. இதன் கட்டுமானங்கள் ஓரளவு நிறைவடைந்து நேற்றுமுன்தினம் அந்தக் கப்பல் அறிமுகம் செய்யப்பட்டது. எனினும் கப்பலுக்கான மின்னிணைப்பு முழுவதுமாக மேற்கொள்ளப்படவில்லை என்று சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்தக்கப்பல்ஜெ15ரக போர் விமானங்களை சுமந்து செல்லும் ஆற்றல் படைத்தது. இதன்நீளம்302 மீற்றர். அகலம்70.5மீற்றர். சீனாஇதுவரைகட்டியகப்பல்களிலேயே மிகப்பெரியதும் நவீனமானதும் இதுவே. கொரியத் தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றம், தென்சீனக் கடல் பரப்பில் உள்ள இழுபறி நிலைகள் ஆகியவற்றைக் கையாள இந்தக் கப்பல் சீனாவுக்கு மிகவும் உதவும் என்று கருதப்படுகிறது. (ம)





# ஓ.பி.எஸ். அணியுடன் பேச இ.பி.எஸ். தரப்பினர் தயார்



சென்னை, ஏப். 28

அ.தி.மு.கழகத்தின் இணைப்பு முயற்சியில் தமிழக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அணியுடன் பேசுவதற்குத் தாங்கள் தயார் என்று தற்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தரப்பில் உள்ளவர்களில் ஒருவரான அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்தார்.

சசிகலா குடும்பத்தை, பழனிச்சாமி அணியினர் கட்சியில் இருந்து ஒதுக்கி வைத்துள்ளனர். "கட்சியின் நலன் கருதி பன்னீர்செல்வம் அணியுடன் பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறோம்" என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த அழைப்பை ஏற்றுக்கொண்ட பன்னீர்செல்வம் அணியினர், கட்சியின் தலைமை அலுவலகத்தில் உள்ள சசிகலாவின் பதாகைகளை அகற்ற வேண்டும் என்று வலியுறுத்தினர். இதையடுத்து, சசிகலாவின் பதாகைகள் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டன.

இதனிடையே, பன்னீர்செல்வம் அணியினரும், பழனிசாமி அணியினரும் நேற்று முன்தினம் இரவு, சென்னையில் உள்ள தனியார் விடுதியில் ரகசியப் பேச்சுவார்த்தை நடத்தினர் என்று தகவல் வெளியானது. இதை, இரு தரப்பினரும் மறுத்துள்ளனர். இரு அணிகளுக்கும் இடையே பேச்சு இன்று நடக்கும், நாளை நடக்கும் என்று தகவல்கள் வந்துகொண்டிருக்கிறதே தவிர, உறுதியான தகவல்கள் இரு தரப்பிலிருந்தும் வரவில்லை.

இந்த நிலையில், சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய நிதியமைச்சர் ஜெயக்குமார், "இரு அணிகளுக்கும் இடையேயான பேச்சில் நல்ல முடிவு விரைவில் ஏற்படும்.

இரு அணிகள் குறித்த பேச்சுவார்த்தைக்கு சுமுகமான சூழல் ஏற்பட்டுள்ளது. பன்னீர்செல்வம் அணியுடன் பேச்சு நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்று தெரிவித்தார். (ம)

## எல்லைச் சுவருக்கான நிதியை வழங்கியே தீரும் மெக்சிக்கோ

### ட்ரம்ப் எதிர்பார்ப்பு

அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லையில் அமையவுள்ள நிரந்தர தடுப்புச் சுவருக்கான நிதியை மெக்சிக்கோ வழங்கியே தீரும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் குறிப்பிட்டார்.

அமெரிக்க அதிபர் தேர்தல் கடந்த வருடம் நடைபெற்றது. ட்ரம்ப், தனது தேர்தல் பரப்புரையில், சட்டவிரோதக் குடியேறிகள், போதைப் பொருள் கடத்தல்கள் ஆகியவற்றை முறியடிக்க மெக்சிக்கோ எல்லையில் தடுப்புச் சுவர் அமைக்கப்படும். அதற்கான நிதியை மெக்சிக்கோவே வழங்கும் என்று தெரிவித்தார்.

அவர் அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர், எல்லைச் சுவர் அமைக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்தியுள்ளார். தற்போது தற்காலிகமாகச் சுவர்கள் அமைக்கப் படுகின்றன. ஆனால் நிதியை வழங்க மாட்டோம்என்றுமெக்சிக்கோ முரண்டு பிடித்தது. இதனால் மெக்சிக்கோவில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு கூடுதல் வரி விதிக்க ட்ரம்ப் திட்டமிட்டார்.

இதையடுத்து மெக்சிக்கோ, எல்லைச்சுவர் விடயம் தொடர்பில் மீண்டும் பரிசீலனை செய்துவருகிறது. பெரும்பாலும் தடுப்புச் சுவருக்கான நிதியை வழங்குவதற்கு மெக்சிக்கோ சம்மதிக்கும் என்று எதிர்பார்க்கப்படும்நிலையில் ட்ரம்பும் அவ்வாறே தனது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டார். (ம)





## சிலந்திப் பண்ணை

இந்தோனேஷியாவைச் சேர்ந்த 28 வயது மிங் கு என்ற பெண், கடந்த 7 ஆண்டுகளாக மிகப்பெரிய சிலந்திகளை வளர்த்து வருகிறார். இவரது வீட்டில் தற்போது ஆயிரத்து 500 சிலந்திகள் இருக்கின்றன.

"ஒருநாள் தோட்டத்தில் மிகப் பெரிய அழகான சிலந்தியைக் கண்டேன். விதம்விதமாகப் படங்கள் எடுத்தேன். ஏனோ அந்த எட்டுக்கால் பூச்சி என்னை வசீகரித்தது.

அதனை வளர்க்க விரும்பினேன். என் பெற்றோரிடம் சொன்னபோது அதிர்ந்து போனார்கள். என் ஆசையை ஓரமாக வைத்துவிட்டு, சிலந்திகளைப் பற்றிய புத்தகங்களைத் தேடிப் படித்தேன். என் ஆர்வத்தைக் கண்ட பெற்றோர், வீட்டில் சிலந்திகளை வளர்க்க சம்மதம் தெரிவித்தனர். விதவிதமான சிலந்திகளைத் தேடிப் பிடித்து வளர்க்க ஆரம்பித்தேன். சிலந்திகளுக்காக இதுவரை ஒரு கோடி ரூபா (இலங்கை மதிப்பில்) செலவு செய்திருக்கிறேன். இவற்றுக்காகத் தனியாக ஓர் அறையை ஏற்பாடு செய்திருக்கிறேன். சிறியதும் பெரியதுமான ஜாடிகளில் அவை வளர்கின்றன. இவற்றில் சில சிலந்திகள் இந்தோனேஷியாவைச் சேர்ந்தவை. மற்றவை வெளிநாடுகளில் இருந்து வாங்கப்பட்டவை. இன்னும் இரண்டு வகை சிலந்திகள் கிடைத்துவிட்டால் என்னிடம் அத்தனை சிலந்தி வகைகளும் இருக்கும். ஒருநாளைக்குப் பத்து மணி நேரம் இவற்றுக்காகச் செலவிடுகிறேன். பெண் சிலந்திகள் கொன்று தின்று விடுவதால் ஆண் சிலந்திகளைத்தான் அடிக்கடி வாங்க வேண்டியிருக்கும். இதுவரை நான் சிலந்திகளை விற்பனை செய்ய நினைத்ததில்லை. ஆனால் அரிய வகை சிலந்திகள் இனப் பெருக்கத்தின் மூலம் அதிகரித்துவிட்டன. அதனால் தற்போது சிலந்தி வளர்ப்பைத் தொழிலாக மாற்றிக்கொண்டேன்.

இந்தோனேஷியா மட்டுமின்றி, இணைய வழி மூலம் இங்கிலாந்து, சுவீடன், ஜெர்மனி, போலந்து போன்ற நாடுகளிலும் விற்பனை செய்துவருகிறேன். 7 ஆண்டுகளில் 14 தடவை சிலந்திகள் கடித்திருக்கின்றன. அதிக விஷமுள்ள சிலந்தி கடித்தால் உடனே மருத்துவரிடம் செல்ல வேண்டும். பாதுகாப்பாகக் கையாண்டால் சிலந்தி வளர்ப்பு மிகவும் சுவாரசியமானது" என்கிறார் மிங் கு. (ம)

## தென்கொரியாவில் ஏவுகணைத் தடுப்பு

வடகொரியாவின் அச்சுறுத்தலைச் சமாளிக்கும் வகையில் அமெரிக்கா தனது ஏவுகணைத் தடுப்புச் சாதனத்தை தென்கொரியாவுக்கு அனுப்பியுள்ளது.

வடகொரியா இதுவரை ஐந்து அணுவாயுத சோதனைகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளது. ஆறாவது சோதனைக்கு தற்போது அந்த நாடு தயாராகி வருகிறது. இந்தச் சோதனை நடத்தப்பட்டால் வடகொரியாவின் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் பதற்றம் நீடித்து வரும் நிலையில் அமெரிக்கா தனது ஏவுகணைத் தடுப்புச் சாதனமொன்றை தென்கொரியாவுக்கு அனுப்பியது. இது நேற்றுமுன்தினம் தென்கொரியாவை சென்றடைந்தது. (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# தமிழர்களின் குரலுக்கு மதிப்பளியுங்கள்

வடக்குக் கிழக்கு எங்கும் நேற்றைய முழு அடைப்பு பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. எந்த அரசியல் தரப்பும் சாராமல், அழைப்பு விடுக்காமல் காணாமற்போனவர்களின் உறவினர்கள் விடுத்த அழைப்புக்கு ஒட்டுமொத்தத் தமிழ் பேசும் மக்களும் ஒரே குரலில் ஒருமித்துத் தமது ஆதரவைத் தெரிவித்ததன் மூலம் அரசியல் கலப்பற்ற தமது விருப்பத்தை, நோக்கத்தை அவர்கள் தெளிவாகக் கொழும்பு அரசுக்கும் உலக நாடுகளுக்கும் எடுத்துவிளக்கியுள்ளார்கள். போரின்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது, அவர்களின் விதி என்ன என்பது பற்றி உடனடியாக அறியத் தாருங்கள் என்பதுதான் அவர்களின் கோரிக்கை, நோக்கம், விரும்பம் எல்லாமே.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னர் ஈழத் தமிழர்களால் நடத்தப்பட்ட போராட்டங்களிலேயே இந்தப் போராட்டம் முதன்மையானது ; பல விதங்களில் சிறப்பானது.

முதலாவது, இந்தப் போராட்டத்துக்கு எந்த அரசியல் கட்சியும் அழைப்பு விடுக்கவில்லை. அவை போராட்டத்தை ஒழுங்குபடுத்தவும் இல்லை. கிளிநொச்சியில் கடந்த 67 நாள்களாகத் தொடர்ந்து போராட்டம் நடத்தி வந்த, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களே இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள். அதற்கு அரசியல் கட்சிகள் அனைத்தும் ஆதரவு வழங்கியிருந்தன.

இரண்டாவது, வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்து ஒற்றுமையாக ஓரணியாக நின்று அண்மைக்காலத்தில் நடத்திய மிக வெற்றிகரமான போராட்டம் இது. ஒருங்கிணைப்பின்மை, சரியான தகவல்கள் போய்ச் சேராமை என்பவை காரணமாகக் அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில் போராட்டம் முழுமையாக இடம்பெறவில்லையாயினும் அந்த மாவட்டத்தின் முக்கிய நகரமான கல்முனையில் முழுமையாகக் கடைகள் அடைக்கப்பட்டு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது. இந்த வகையில் வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் நடந்த போராட்டமாகவும் இந்தப் போராட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

மூன்றாவது, வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களுடன் முஸ்லிம் மக்களும், அவர்களின் கட்சிகளும் வேறுபாடுகளுக்கு அப்பால் இந்தப் போராட்டத்துக்குத் தமது ஆதரவை வழங்கியிருந்தன.

மிரட்டல், அச்சுறுத்தல், வன்முறை என்று எதுவும் இன்றி மக்கள், குக்கிராமங்களிலும் உணர்வுடன் கடைகளை மூடிப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியிருந்தனர். பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை. அரச அலுவலகங்கள் மற்றும் தனியார் அலுவலகங்களுக்கு எவரும் செல்லவில்லை, அங்காடிகளும்கூட மூடப்பட்டன. பொதுப்போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டிருந்தது. வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக பாண் உற்பத்திகூட நிறுத்தப்பட்டிருந்தது.

இது போன்ற அமைதியான ஒருங்கிணைந்த ஒரு மக்கள் போராட்டத்தை வடக்கு கிழக்கு கண்டிருப்பது இதுவே முதல் தடவை என்றுகூடச் சொல்லலாம்.

தமிழ் மக்கள் அரசியல் கட்சிகளால் தூண்டப்படாமலேயே போராடக்கூடியவர்கள் என்ற செய்தியைச் சொன்ன விதத்திலும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயம் உள்ளிட்ட தமிழ் மக்களின் கரிசனைக்குரிய பிரச்சினைகள் மீது ஒட்டுமொத்தத் தமிழர்களின் கருத்தை வெளிப்படுத்திய விதத்திலும்கூட இந்தப் போராட்டம் மிக முக்கியமானதே.

பெரும்பொருளாதாரநலிவுக்குமத்தியிலும், தமிழ்பேசும்மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்துக்கு ஊடாகக்கொழும்பு அரசுக்கு வெளிப்படுத்தியிருக்கும்செய்தி முக்கியமானது. அது, எங்கள்குரலுக்குமதிப்பளியுங்கள், போராடிக்கொண்டிருப்பவர்கள் ஒரு சிறு தொகையினர் அல்லர் ; அவர் ளுடன் நாம் எல்லோரும் இருக்கின்றோம் என்பது தான்.

கொழும்பு அரசு இனியும் தாமதிக்காமல் தமிழ் மக்களின் குரலுக்குச்செவி சாய்த்து மதிப்பளிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை இந்தப் போராட்டம் தெளிவாக உணர்த்திச் சென்றிருக்கிறது. தாமதிக்காமல்தமிழ்மக்களின்உணர்வைக் கொழும்பு அரசு புரிந்துகொள்ளவேண்டும். அதற்கேற்பச் செயலாற்றவும் வேண்டும்.

# அதிகாரப் பகிர்வை முறையாகப் பேணினால் பல்லின நாட்டில் நல்லாட்சி சிறக்கும்

**நேற்று முன்தினம் (26.04.2017) புதன்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள தந்தைசெல்வா நினைவுத் திடலில் இடம்பெற்ற தந்தை செல்வாவின் 40 ஆவது நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்ண ஆற்றிய தந்தை செல்வா நினைவுப் பேருரை இங்கு பிரசுரமாகிறது.**

தி.சோபிதன்

3 ஆண்டுகளுக்கு முன்னர், கொழும்பில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் நினைவுப் பேருரையை ஆற்ற அழைக்கப்பட்டிருந்தேன். நான் அப்பொழுது சொன்னேன், என்னுடைய முன்னோடியான மறைந்த தலைவர் பேர்னாட் சொய்ஸாவுக்குப் பிறகு எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் நினைவுப்பேருரைஆற்ற இரண்டாவது பெரும்பான்மை இன உறுப்பினராக நான் அழைக்கப்பட்டிருக்கின்றேன் என்று.

நான் இந்த இடத்தில் பேச இருக்கின்ற விடயம், 'எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் அதிகாரப் பகிர்வும் ' என்பதாகும். பல சமூகங்கள் வாழ்கின்ற இந்த நாட்டில் அதிகாரப் பகிர்வுகள் சரியாக நடைபெற்றால் இந்த நாடு சிறந்த நாடாக இருக்கும் என்பது எனது கருத்து.

**சிறுபான்மை இனத்தவர்கள் சமஉரிமைகோருவதுவழமையே.**

பல சிறுபான்மை இனத்தவர்கள் இருக்கின்ற இந்த நாட்டில் கல்வி, வேலைவாய்ப்பு, அபிவிருத்தி போன்றவற்றில் தங்களுக்கும் சம உரிமை கிடைக்க வேண்டும் என அவர்கள் கோருவார்கள். ஆனால் சிறுபான்மை இனத்தவர்கள் புவியியல் பிரதேசத்தில் அதிகளவில் செறிந்து வாழும்போது, அவர்கள் சமவுரிமை, சமவாழ்வு என்பதுடன் மட்டும் நின்று விடுவதில்லை. அதிகளவான தமது உரிமைகளை, அதிகாரப் பகிர்வுகளை விகிதாசாரப்படி கோருவார்கள்.

புவியியல் ரீதியாக ஒரு பிரதேசத்தில் அதிகளவில் சிறுபான்மை இனங்கள் செறிந்து வாழும்போது, அவர்கள் தமக்கு உரிய உரிமைகளை அழுத்திக் கேட்பார்கள். இன அரசியல் முரண்பாடு, ஒரு வருமான அடிப்படையிலான பிரச்சினை மட்டுமல்ல, அது அரச அதிகாரம் சம்பந்தப்பட்டதும் ஆகும் என்பது அதன் அர்த்தமாகும். நான் கடந்த காலத்தில் ஒரு நிகழ்வில் கலந்து கொண்டிருந்த போது அங்கிருந்த பேராசிரியர் ஒருவர் தமிழர்களுக்கு என்ன பிரச்சினை இருக்கின்றது? நாங்கள் அவர்களுடன் வாகனங்களில் ஒன்றாகப் பயணிக்கின்றோம்; ஒன்றாக இருந்து தேநீர் அருந்துகின்றோம்; அப்படி இருக்கையில் அவர்களுக்கு இந்த நாட்டில் என்ன பிரச்சினைகள் இருக்கின்றன எனக் கேட்டார்.

அப்போது நான் சொன்னேன்; அதுவே தான்பிரச்சினையாகஇருக்கின்றது. நீங்கள் தமிழர்களுடன் தேநீரைப் பகிரத் தயாராக இருக்கின்றீர்கள் ஆனால், அதிகாரங்களை பகிரத் தயாராக இல்லை எனத் தெரிவித்தேன்.

உலகத்து நாடுகளில், பல்லின மக்கள் வாழும் நாடுகளில் இருக்கிறபெரும்பான்மைஇனத்தவர்கள் தமது அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு இலகுவில் ஒத்துக் கொள்வதில்லை. இலங்கையில் உள்ள பிரச்சினை என்னவெனில், பெரும்பான்மை இனம் அதிகாரப் பகிர்வை வழங்க மறுத்ததால் சிறுபான்மைத் தரப்பு பிரதேச சுயாட்சியைக் கோரிய நிலையில் பெரும்பான்மை இனத்தவரது விடாப்பிடியான பிடிவாதத்தால் பிரிவினைவாதம் நோக்கி சிறு பான்மை நகர்ந்தது.

ஒற்றையாட்சியில் இயங்குகின்ற அரசுகளுக்கு உதாரணமாக விளங்குகின்ற பெரிய பிரித்தானியாவில் அதிக அளவில் அதிகாரப் பகிர்வு காணப்படுகிறது. ஸ்கொட்லாந்து, வடநெதர்லாந்துபோன்றநாடுகளில் அதிகாரப் பகிர்வு இருக்கின்றது. பிரித்தானிய அரசியல் யாப்பு, எழுதப்பட்ட அரசியல் யாப்பு அல்ல. நடைமுறையில்அது சமஷ்டி ஆட்சியாக இருப்பதை அவதானிக்க முடியும்.

**சுதந்திர இலங்கையின் ஆரம்பகால அரசியல்**

1930களில் தமிழர்கள் கூட்டாட்சி மற்றும் அதிகாரப்பகிர்வைக் கோரவில்லை. முழுச் சிங்கள அரசுக்கு தலைமை தாங்கிய எஸ்.பண்டாரநாயக்க அதனைக் கோரியிருந்தார். இந்தக் கூட்டாட்சித் தத்துவம் தொடர்பாக ஆறு கட்டுரைகளை அவர் எழுதியிருந்தார். எனவே முதன்முதலாக தமக்கு அதிகாரப்பகிர்வு வேண்டும்; கூட்டாட்சி வேண்டும் என வலியுறுத்தியவர்கள் தமிழர்கள் அல்லர். கண்டிய சிங்களவர்கள் தான் முதலாவதாக இவற்றைக் கோரியவர்கள்.

ஆகவே பண்டாரநாயக்க, மற்றும் கண்டிய சிங்களவர்கள் கோரிய பிறகுதான் தமிழர்கள் இவற்றைக் கோரினார்கள்.

அந்தக் காலங்களில் தமிழர்கள் தமது பங்குக்குக் கோரியது சம பல பிரதிநிதித்துவம். ஐம்பதுக்குஐம்பது என்றுஅதுகுறிப்பிடப்பட்டது. தமிழர்கள் மைய அரசை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். 1931 ஆம் ஆண்டு டொனமூர் ஏற்பாட்டில் பிரித்தானிய நிர்வாகிகளுடன்7பேரைக்கொண்ட அமைச்சரவை இருந்தது. அந்த அமைச்சரவையில் ஒரு தமிழரும் உள்ளடங்கியிருந்தார்.

1936ஆம்ஆண்டில்அமைச்சரவை உறுப்பினர்களை ஒருவிதமாக மாற்றி அமைத்து முழுச் சிங்கள அமைச்சரவையைஉருவாக்கினார்கள். இந்தக்கணக்குவாய்ப்பாட்டை அமைத்துத் தமிழர்களோ முஸ்லிம்களோ இடம்பெறாத வகையில் அமைச்சரவையை உருவாக்கிக் கொடுத்தவர் கணிதத்துறையில் மேதாதையாக இருந்த தமிழனான சி.சுந்தரலிங்கம் எனச் சொல்லப்படுகின்றது.

முழுச் சிங்கள அமைச்சரவை அமைக்கப்பட்டமை தமிழ் மக்களுக்கு மிகவும் சூசகமான செய்தியாக இருந்தது. அப்படி இருந்த போதிலும்தமிழர்கள்மைய அரசை



ஏற்றுக்கொண்டிருந்தார்கள். தமிழர்களுக்கு சுயாட்சி வேண்டும் என்பதை முதலில் வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றிய கட்சி இலங்கை கம்னியூனிஸ்ட் கட்சியாகும்.

சோல்பரி யாப்பு முன்வைக்கப்பட்டபோது இந்த அதிகார பகிர்வு தொடர்பில் எவரும் பாரதூரமான முன்மொழிவுகளை முன்வைக்கவில்லை. 1947 ஆம் ஆண்டுடில் இடம் பெற்ற தேர்தலில் தமிழர்களுக்கான தலைமைக் கட்சியாக தமிழ்க் காங்கிரஸ் கட்சி இருந்தது. இந்தக் கட்சி தேர்தலில் போட்டியிட்டு ஆசனங்களை பெற்றுக்கொண்டது. அப்போது பிற்போக்கு வலதுசாரி கட்சியான ஐக்கியதேசியக்கட்சி யுடன் இணைந்தது. அப்படி இருந்த போதிலும் மலையக மக்களின் வாக்குரிமைகள் பறிக்கப்பட்ட போது காங்கிரஸ் மௌனமாக இருந்தது.

இந்த நிலையில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இருந்த செல்வநாயகம் மட்டும் வெளியேறினார்.

இருமொழிக்கொள்கைகளைகடைப்பிடித்து வந்த தென்னிலங்கைக் கட்சிகள், தங்களது நிலைப்பாட்டை மாற்றி சிங்கள மொழி மட்டும் ஆட்சி மொழி எனத் தீர்மானிக்க, தமிழ் மக்கள் எஸ்.ஜே.வி பக்கம் வந்தனர். பின்னர் இடது சாரிகள் தனிச்சிங்கள மொழியே அரசகரும மொழி என்பதற்கு எதிராக இரண்டு மொழிகள் என்றால் ஒரு நாடு; ஒரு மொழியென்றால் இரண்டு நாடுகள் என உறுமினார்கள். ஆனால் அதற்கும் அரசு செவிசாய்க்கவில்லை.

பண்டாரநாயக்க பிரதேச சபை அதிகாரம் போன்ற விடயம் தொடர்பில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன் ஒரு உடன்படிக்கை மேற்கொண்டார். ஆனால் இந்த உடன்படிக்கைகளை சிங்கள பெரும்பான்மை இனத்தின் தீவிர போக்குடையவர்கள் எதிர்த்தார்கள். பண்டாரநாயக்க உடன்படிக்கையை கிழித்தெறியவேண்டுமெனநிர்ப்பந்திக்கப்பட்டார். அதனைத்தொடர்ந்து நாட்டில் இனக்கலவரம் உருவானது. பின்னர் 1965ஆம் ஆண்டில் ஐக்கியதேசியக்கட்சி அதிகாரத்துக்கு வந்தபோது மாவட்ட அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பில் செல்வநாயகத்துடன் உடன்பாட்டுக்கு வந்தனர். ஆனாலும் இதனை சிறிலங்கா சுதந்திர கட்சி எதிர்த்தது. இதனால் மேலும் முரண்பாடுகள் வலுத்தன.

1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அரசியல் நிர்ணய சபை நடைமுறை இழக்கப்பட்ட பொன்னான வாய்ப்பு ஆகும். அப்போது செல்வநாயகம் தனது உரையில் நேருவின் கருத்தை மேற்கோள் காட்டி இந்திய அரசியல் நிர்ணய சபை கூட்டப்பட்ட போது நேரு சொன்னார், நாங்கள் எல்லோரும் பொதுவான கருத்துக்கு வரவேண்டும்; அதே மனத்தோடு நாங்கள் இங்கு அமரவேண்டும் என தெரிவித்திருந்தார்.

அரசியல் நிர்ணய சபையில் சிங்களத்தலைவர்கள் ஒற்றையாட்சிக் கொள்கையை முன்வைத்தனர். செல்வாகூட்டாட்சிமுறைமையை முன்வைத்தார். ஆட்சி முறை தொடர்பில் முக்கியஉரையை தர்மலிங்கம் நிகழ்த்தினார். நாங்கள்பிரிவினையைஆதரவிக்கவில்லை அதற்குமாற்றீடாகஅதிகாரங்களைபகிர்வது தொடர்பில் பரிசீலனைசெய்வோம் எனத் தெரிவித்திருந்தார்.

ஐக்கிய முன்னணி அரசு ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்திருந்தால் அதன் பின்னர் வந்த அனர்த்தங்கள்ஏற்பட்டிருக்காது. செல்வநாயகம் காலமாகி மூன்று மாதங்களில் இடம் பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனது கொள்கைப் பிரகடனமாக சுதந்திரசோஷலிசதமிழீழம்என்றகோரிக்கையை முன்வைத்தது. 77 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி தனது பிரகடனத்தில் தமிழர்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன. அதனைத்தீர்க்கஒருவட்டமேசைமாநாடுஒன்றை நடத்தவுள்ளதாகத் தெரிவித்தது. ஆனால் தேர்தல் நடந்த பின்னர் வட்டமாகவோ அல்லது சதுரமாகவோ ஒரு மாநாடும் நடத்தப்படவில்லை. பின்னர் 87 ஆம் ஆண்டுகளில் ஐக்கியதேசியக்கட்சிநிர்ப்பந்தத்தின்பேரில் 13ஆவதுதிருத்தச்சட்டத்தைமுன்வைத்தது. இந்த சட்டத் திருத்தம் வந்த பின்னர் வந்த மைய அரசுகள் அதன் ஊடாக அதிகாரங்களை பகிர்வதில் நாட்டம் காட்டவில்லை.



எந்த ஒரு மாகாண சபையாவது பிரிவினை நோக்கி பயணிக்கமுயற்சிக்கின்றது என அறிந்தால் அந்த விடயத்தில் கொழும்பு அரசு தலையிடலாம் என்ற விடயத்தை உத்தேச அரசமைப்பில் இணைக்க முயல்கிறோம். ஆனால் இந்த விடயத்தில் மாகாண சபையின் அனைத்துவிடயங்களிலும் கொழும்பு அரசு மூக்கை நுழைக்காதவிதத்தில்செயற்பாடுகள்அமையவேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளது.

**நாட்டின் இன்றைய அரசியல் சூழ்நிலை**

20வருடகீழ்நோக்கியஅதிகாரம், தெற்கிலும் மாற்றங்களைஏற்படுத்தியுள்ளது. இந்தஅதிகாரப்பகிர்வுக்கான உப குழுவில் பரிந்துரைகளை செய்தவர்களில் மாகாணங்களின் தலைவர்கள் அதிகம் பங்காற்றியுள்ளனர். அவர்கள்தமதுகாலங்களில்கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் அனுபவங்களைக் கொண்டு மாகாண சபைகளை எவ்வாறு அபிவிருத்தித் தேவைக்குப் பயன்படுத்தலாம் என ஆராய்ந்ததில் தென்னிலங்கையைச் சேர்ந்த மாகாண சபைகளின் தலைவர்கள் மிகச் சிறந்த பரிந்துரைகளை முன்வைத்துள்ளனர்.

மாகாண சபைகளுக்கு மட்டுமல்லாது அதன் கீழ் இயங்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்கும் அதிகாரங்களை வழங்கி அபிவிருத்திகளை திறம்படச் செயற்பட வைக்க முடியுமா என்ற ரீதியில் சிந்தித்து வருகின்றோம்

தென்னிலங்கைமாகாணமுதலமைச்சர்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டு பகிரப்படுகின்ற அதிகாரங்கள் பற்றி பேசிவிட்டார்கள். ஆளுநர்களின் கைகளில் அதிக அதிகாரங்கள் இருக்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணசபைகளின்அதிகாரங்களைஆளுநர்கள் தட்டிக்கழிக்கின்ற நிலைமை காணப்படுகின்றது. தெற்கில் உள்ள மாகாண முதலமைச்சர்களும் ஆளுநர்களின் அதிகாரங்களை, குறைத்து மாகாண சபைகளின் அதிகாரத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்னிலங்கை மாகாண சபைகளும் கேட்கின்றன, பொலிஸ்அதிகாரங்களை எங்களிடம் தாருங்கள் என்று. நீங்கள் கொள்கைகளை வகுக்கும்போது எங்களையும் அழையுங்கள், அப்போதுதான் அவை நாங்கள் வகுத்த கொள்கைகளாக இருக்கும் என்கின்றனர். தற்போதுஇடம்பெற்றுவரும்அரசியல் சீர்திருத்தங்களை திரும்பவும் அரசியலுக்குள் வாய்ரப்பாக்கி தாம் முடியுமா என வடக்கிலும் தெற்கிலும் உள்ள தோல்வியடைந்த சிலர் எதிர்பார்க்கின்றனர்.

வடக்கிலும் சரி தெற்கிலும் சரி இனவாதப் போக்குடையோர் இருக்கின்றனர். சந்திரிகாவின் ஆட்சி காலத்தில் முன்வைத்த தீர்மானத்தில் தமிழர்களுக்கு அதிகளவு அதிகாரங்களைவழங்கவேண்டும்எனகூச்சலிட்டவர் இப்போதுஇந்தஅரசைக்கவிழ்க்கவேண்டும் எனக் கூறி வருகின்றார்.

நான் லங்கா சமசமாகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்றேன். மகிந்தராஜபக்ச அணியில் இருந்து விடுபட்டு நல்ல கொள்கையுள்ள அணியுடன் பயணிப்பது தொடர்பாக ஆலோசித்தவருகின்றேன். தெற்கு அரசியல் வாதிகள் அதிகார பகிர்வு தொடர்பில் சாதகமான மனநிலையில் இல்லை. தேர்தலில் தோல்வி கண்டவர்கள் அரசியல் தீர்வு முயற்சிக்கு முட்டுக்கட்டைகள் போடத் திட்டங்களைத் தீட்டிவருகின்றனர்.

ஒரு இணக்கப்பாட்டுக்கு வரக்கூடிய வகையிலான அரசியல் யாப்பை வைத்துக்கொண்டு நாம் முன்நகரக் கூடிய வகையில் இருக்க வேண்டும். அரசியல் தீர்வு தொடர்பாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை நாடாளுமன்றத்தில் பெற்ற பின்னரே அது மக்களிடம் முடிவுக்காகச் சமர்ப்பிக்கப்படும் கடந்த 10 வருடங்களாக ஆட்சி நடாத்திய மகிந்த, சிங்கள மக்களின் மனங்களைச் சீரழித்து விட்டார்.

ஆனால் தற்போதைய ஆட்சியாளர்களின் செயற்பாடுகள்அவர்களைஅதிலிருந்துமீட்டு உண்மை நிலையை உணர வழிசெய்துள்ளன. அதிகளவான அதிகாரங்கள் வழங்கினால் அது பிரிவுக்கு வழிவகுக்கும் எனத் தெற்கில் ஒரு சாரர் கூறி வருகின்றனர். ஸ்கொட்லாந்து, பிரித்தானிய பிரிவினைக் கோரிக்கைகள் அதிகாரப்பகிர்வால் உருவாகவில்லை.

வரலாற்று ரீதியாக அவர்களின் பின்னணியே அடிப்படையாகும். ஆகவே அது தொடர்பாக அச்சம் கொள்ளத் தேவையில்லை. ஆனாலும் அவ்வாறான ஒரு நிலைமைக்கும் நாம் முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம். ஆனால் அதற்கும் நாங்கள் இணக்கம் கண்டு முழுமையாகச் செயற்பட வேண்டும்.

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவது பிரிவினைக்குக் காரணமாகலாம் என அச்சம் போக்கப்பட வேண்டும்.

எந்த ஒரு மாகாண சபையாவது பிரிவினை நோக்கி பயணிக்க முயற்சிக்கின்றது என அறிந்தால் அந்த விடயத்தில் கொழும்பு அரசு தலையிடலாம் என்ற விடயத்தை உத்தேச அரசமைப்பில் இணைக்க முயல்கிறோம். ஆனால் இந்த விடயத்தில் மாகாண சபையின் அனைத்து விடயங்களிலும் கொழும்பு அரசு மூக்கை நுழைக்காத விதத்தில் செயற்பாடுகள் அமையவேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளது.

19 ஆம் திருத்தத்தின் பின்னர் பொதுமக்களால் அரச தலைவர் மீதும் வழக்கு தாக்கல் செய்ய முடியும். எங்களுக்கு தற்பொழுது அரியதொருசந்தர்ப்பம்கிடைத்துள்ளது. கூட்டாட்சி அரசில் ஐக்கிய தேசியக் கட்சிசார்பில் 106 உறுப்பினர்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிசார்பில்93உறுப்பினர்களும் இருக்கின்றனர் சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் அரைவாசிப் பேர் கூட்டு எதிரணியில் இருக்கின்றனர். ஆயினும் புதிய அரசியல் திருத்தம் ஒன்றை வெற்றியுடன் உருவாக்க கூடிய நிலைமை உருவாகியுள்ளது. ஜேவிபி அரசியல் திருத்தம் தொடர்பில் சாதகமான பார்வையைக் கொண்டுள்ளது. ஆகவேபுதியஅரசியதிருத்தம்முன்வைக்கப்படும் என்ற முழுமையான நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.



# வாசகர் திருமுகம்

## தர்மச் செயற்பாடுகள் மனநிறைவு தருபவை

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் சுற்றாடலிலும் கோவிலுக்குச் செல்லும் பாதைகளிலும் வருடாந்த உற்சவ காலங்களில் தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்து பக்தர்கள் தாகசாந்தி செய்ய வசதி செய்யப்பட்டு வருகிறது. நல்லூர்க் கந்தனுக்காக நடத்தப்படுகின்ற தண்ணீர்ப் பந்தல்களில் சிறப்பு அம்சம் என்னவென்றால், அதிகாலையில் கோப்பி, பகலில் வகை வகையாகக் குளிர்பானங்கள், மீண்டும் மாலையில் கோப்பிஎன வழங்கப்படுவதாகும். இதேபோல மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன்கோயில் சுற்றாடலிலும் பாதைகளிலுமாக வருடாந்த உற்சவ காலங்களில் தண்ணீர்ப் பந்தல்களின் சேவை பக்தர்களுக்குக் கிடைக்கின்றது. கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்த இடத்தில் குறைந்த அளவிலான தண்ணீர்ப் பந்தல்களே சேவை வழங்கின. தற்பொழுது பந்தல்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக அதிகரித்திருப் பது. மக்களின் மனதில் தர்மச்செயல் களில் நாட்டம் அதிகரித்திருப்பதையே எடுத்துக் காட்டுகின்றது அதேபோன்று மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில், வல்லிபுரக்கோயில், தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் ஆகிய கோவில்களின் சுற்றாடலிலுள்ள தர்ம சிந்தனையுடையவர்கள், தனியாகவோ, கூட்டாகவோ வருடாந்த உற்சவ காலங்களில் போதியளவு தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்துச்சேவை செய்ய முன்வர வேண்டும்.

மக்கள் மனதில் தர்மசிந்தனை இருந்தால் இது ஒரு மிகச்சிறிய விடயம். இனிவரும் காலங்களில், மேற்குறிப்பிட்ட ஆலயங்களின் சுற்றாடல்களில் தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்து சேவை செய்ய தர்மசிந்தனையுள்ள வள்ளல்கள் முன்வருதல் வேண்டும்.

*எஸ். மணியம்*

## வாசிப்புக்குப் பொருத்தமான சூழல் அவசியம்

கடந்த 25ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வாசகர் திருமுகம் பகுதியில் சாவகச்சேரியைச் சேர்ந்த எஸ். சுப்பிரமணியம் என்பவரால் குறிப்பிடப்பட்ட மேற்படி விடயம் தொடர்பாக,

எமது நகராட்சி மன்றத்தின் தாபனப் பகுதியில் திருத்த வேலைகள் இடம்பெறுவதால், பொதுநூலகத்தின் வாசிப்புப் பகுதியில் தற்காலிகமாக தாபனப் பகுதி இயங்கி வருகிறது. இன்னமும் ஒரு வார காலத்தினுள் வாசிப்புப் பகுதி பழைய இடத்தில் இயங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*கா. சண்முகதாசன்*
*செயலாளர்*
*நகராட்சி மன்றம்*
*சாவகச்சேரி*

# மனதில் உறுதி வேண்டும்



ஒரு தந்தையும் மகனும் தங்களுடைய கழுதை ஒன்றை விற்பதற்காக சந்தைக்கு ஓட்டிச் சென்றனர். அதனைப் பார்த்த வழிப் போக்கர்கள் சிலர் "இவர்களைப் பார். அற்புத மான கழுதையை ஓடிக்கொண்டு தாங்கள் கால்நடை யாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். இவர்களில் யாராவது ஒருவர் அதில் ஏறிச் செல்லாம் தானே. ஆனால் இவர்களுக்கு பொருளைக் கொடுத்த கடவுள், அதனைப் பயன்படுத்தும் அறிவைக் மட்டும் கொடுக்கவில்லையே" என்று ஏளனம் செய்து பேசிக் கொண்டனர். இதனைக் கேட்டு வெட்கப்பட்டுப் போன தந்தையும் மகனும், ஒரு முடிவு செய்தனர். பின்னர் மகன் கழுதை மேல் உட்கார்ந்து செல்ல தந்தை கழுதையின் பின்னால் நடந்தவாறு சென்றார்.

இப்போது வேறு சிலர் அவ்வழியால் வந்தனர். அவர்கள் இவர்களைப் பார்த்து " இங்கே பார் இது என்ன அநியாயம்! பெரியவர் நடக்க. முடியாமல் நடக்க இந்த வாலிபப் பையன் சொகுசாக கழுதை மேல் சவாரி செய்கிறான்" என்று கிண்டலடித்தனர். இதனைக் கேட்டு "அவர்கள் கூறுவதில் ஒரு நியாயம் இருப்பதாக உணர்ந்த பையன் தந்தையை கழுதையில் உட்கார வைத்து தான் பின்னே நடந்து சென்றான். மேலும் கொஞ்சத் தூரம் நடந்திருப்பார்கள். "இதோ பாருங்கள், காலம் கரி காலமாயிற்று. தைரியசாலியான பெரியவர், ஒரு நோஞ்சான் பையனை நடக்க விட்டு தான் மட்டும் சொகுசாக கழுதைமேல் ஏறிப் போகிறார்" என்று சிரித்து ஏளனம் செய்தனர் சிலர்.

இதனைக் கேட்ட தகப்பன் மகன் இருவரும் கழுதைமேல் ஏறிச் சென்றனர். "இனி இந்த உலகம் நம்மைக் கோலி பண்ணாது" என்று தந்தை கூறினார். கொஞ்சத் தூரம் சென்ற பின் இன்னொரு வழிப்போக்கர் "இரண்டு தடியன்கள் ஒரு நோஞ்சான் கழுதையில் ஏறிச் செல்கிறார்களே! இரக்கம் கெட்ட ஜென்மங்கள்" என்று சற்று கோபமாக காரமாக விமர்சித்தார்.

இப்போது தந்தையும் மகனும் கழுதையில் இருந்து இறங்கி "இனி என்ன செய்வது? சனங்கள் குறை கூற முடியாத அளவுக்கு ஏதாவது செய்ய வேண்டும்" என யோசித்து கழுதையை கட்டி தோளில் சுமந்து செல்வோமென முடிவெடுத்து அப்படியே செய்தனர்.

இவ்வாறு கழுதையைத் தடியில் கட்டி தோளில் சுமந்து செல்கையில் வழியில் ஒரு காட்டாறு குறுக்கிட்டது. அதைக் கடக்கையில் தலைகீழாகக் கட்டப்பட்ட கழுதை மிரண்டு போய் வெள்ளத்தில் வீழ்ந்தது. கால்கள் கட்டப்பட்டிருந்ததால் கழுதையால் நீந்த முடியவில்லை. அதனால் அது ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. தந்தையும் மகனும் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

ஒரு செயலுக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக கருத்து தெரிவிப்பர். எல்லோரும் விரும்பும் படி நாம் நடக்க இயலாது. விமர்சனங்களுக்கு நாம் காது கொடுக்காது எமக்கு சரியென்று பட்டதை செய்து முன்னேற வேண்டும்.



**'கேட்பார் புத்தி கேட்காதே'**
**'எடுப்பார் கைப்பிள்ளை ஆகாதே'**
**'விமர்சனங்களுக்கு அஞ்சாதே'**

## தொடர் மொழிக்கு ஒரு மொழி

| | | |
|---|---|---|
| 1. கன்னிக் கவிதை | - | ஒருவர் முதன் முதலில் இயற்றிய பாட்டு. |
| 2. கையூட்டு | - | ஒரு கருமத்தை இலகுவில் நிறைவேற்றும் பொருட்டு சம்மந்தப்பட்ட அதிகாரிக்கு கொடுக்கப்படும் இலஞ்சப் பணம். |
| 3. செவிலி | - | வளர்ப்புத் தாய் |
| 4. சுயம்பு | - | ஒருவராலும் உருவாக்கப்படாது தானே தோன்றியது. |
| 5. கால் கோள் விழா | - | கருமம் ஒன்றைத் தொடங்குவதற்காக எடுக்கப்படும் விழா. |
| 6. அணிந்துரை | - | ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் ஒருவர் வழங்கும் புகழுரை |
| 7. பதிப்புரை | - | ஒரு நூலை அச்சிட்டு வெளியிடுவோர் அந்த நூல் குறித்து எழுதும் உரை. |
| 8. அங்கதம் | - | வெளிப்படைப் பொருளில் புகழ்ந்தும், மறை பொருளில் இகழ்ந்தும் கூறுவது. |
| 9. அகராதி | - | அகர வரிசைப் படி தொகுத்த சொற்பொருள் கூறும் நூல். |
| 10. ஆவணம் | - | உரிமை கோருவதற்குச் சான்றாக எழுத்துருவில் அமைந்த பத்திரம். |
| 11. ஆதனம் | - | ஒருவருக்கு உரித்தான நிலம் முதலிய சொத்துக்கள். |
| 12. ஏய்ப்பில் வைப்பு | - | பிற்காலத் தேவைக்காக (முதுமைக் காலத்துக்கென) சேமித்து வைக்கப்படும் பணம். |
| 13. ஒப்புரவு | - | உலக நடை அறிந்து ஒழுகுதல். |
| 14. ஏக போகம் | - | ஒருவர் தனக்கே உரிமையென முழுப் பொருளையும் தனித்து அனுபவித்தல். |
| 15. சிலேடை | - | இரு பொருள் பட கூறுவது. |

## தகவல் பரிமாற்றம்



- இன்று உலகில் தகவல் பரிமாற்றம் பெரிதும் வளர்ச்சி கண்டுள்ளது.
- விஞ்ஞானத்தின் வளர்ச்சியே இதற்கு முக்கிய காரணமாகும்.
- ஆதிகாலத்தில் பறவைகள் மூலமே (உ+ம் புறா) தகவல் பரிமாற்றம் நடைபெற்றது.
- பிற்காலத்தில் மனிதர்கள் கால் நடையாகச் சென்று தகவல்களைத் தெரிவித்தனர்.
- பின்னர் போக்குவரத்து வசதிகள் அதிகரித்ததும் தங்கள் உறவினருடன் தபால் சேவை வழியாக தொடர்பு கொண்டனர்.
- இன்று தந்தி, தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் மூலம் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.
- பத்திரிகைகள் மூலம் உலக நிலவரங்களைப் படித்தறிகிறோம்.
- உலகச் செய்திகளையும் உள்நாட்டுப் புதினங்களையும் வீட்டில் இருந்தவாறே வானொலி மூலம் கேட்கிறோம்.
- தொலைக்காட்சி மூலம் பல நிகழ்வுகளை நேரில் காண்பது போல காண்கிறோம்.
- இவையெல்லாம் தகவல் பரிமாற்றத்தின் வளர்ச்சியையே உணர்த்துகின்றன.
- தகவல் பரிமாற்றத்துக்கு இன்று மேலும் பல கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.
- கணினியின் வரவால் இணையம், மின்னஞ்சல் மூலம் தகவல் பரிமாற்றம் நிகழ்கிறது.
- தொலைநகல் (பாக்ஸ்) தொலைபேசி, செல்லிடத் தொலைபேசி போன்றவை மூலமும் தகவல் பரிமாற்றம் நிகழ்கிறது.
- சுருங்கக் கூறின் தபால் தந்தி, தொலைபேசி, செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி, செல்லிடத் தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் ஆகியன இன்று தகவல் பரிமாற்றத்துக்கு உதவுவதோடு துரிதமான பரிமாற்றத்துக்கும் ஏதுவாகின்றன.

## சொற்களை வகைப்படுத்தி எழுதுவோம்

அறிவு, பச்சை, ஆவணி, இளமை, ஊசி, முட்டை, பாக்கு, உவகை, கன்று, சங்கு

| உயிர் எழுத்தில் ஆரம்பிக்கும் சொற்கள் | மெய் எழுத்துச் சொற்கள் |
|---|---|
| 1. ........................... | 1. ........................... |
| 2. ........................... | 2. ........................... |
| 3. ........................... | 3. ........................... |
| 4. ........................... | 4. ........................... |
| 5. ........................... | 5. ........................... |


## படங்களுக்கிடையேயான வேறுபாடுகளை இனம் கண்டு வட்டம் இடுவோம்





## கல்விச் சிந்தனையாளர்

### மரியா மொன்ரி சோரி அம்மையார்



மரியா மொன்ரி சோரி அம்மையார் (1870 - 1952) குழந்தைக் கல்வி சிந்தனையாளர்களில் மரியா மென்ரிசோரி அம்மையார் முக்கியமானவர். பாலர் கல்வியில் புலன்களுக்கான பயிற்சியின் முக்கியத்துவத்தை இவர் வலியுறுத்தினார். பொருத்தமான முறையில் புலன்களுக்கு பயிற்சியளிப்பின் சிறுவர்கள் ஆற்றலில் மேம்பாடு அடைந்து செல்வர் என்பதை அவர் கண்டறிந்தார். கற்பிக்கும் போது குழந்தையினது தனித்துவத்தையும், தனியான இயல்புகளையும் மலர்ச்சியடையச் செய்யும் வகையிலும் கற்பித்தல், ஒருங்கமைக்கப்பட வேண்டும் என்றார். சிறுவர்களுக்கான பள்ளிக் கூடங்கள் வீட்டுச் சூழலைப் பிரதிபலிப்பதாக அமைவதோடு, கற்பதற்கு, விளையாடுவதற்கு, உணவு உண்பதற்கு, ஓய்வெடுப்பதற்கு தனித்தனி அறைகள் இருக்க வேண்டும். நல்ல சுகாதார பழக்க வழக்கங்களையும் பழகிக் கொள்ள கற்பிக்க வேண்டும் என்றார். ஆசிரியர்கள் பற்றி அவர் குறிப்பிடும் போது, ஆசிரியர்கள் நெறியாளர்களாக இருக்க வேண்டுமே தவிர, சிறுவர் கற்றலில் ஈடுபடுகையில் தேவையற்ற குறுக்கீடுகளைச் செய்யக் கூடாது. ஆசிரியர்களுக்கு பாட அறிவு மருத்துவ அறிவு, ஒழுக்கம் என்பன கட்டாயமாக தேவை எனவும் குறிப்பிட்டார்.

## வடக்கு - கிழக்கு...

இடங்களில் மக்கள் போராடி வருகின்றனர். இந்த மக்கள் போராட்டங்கள் மாதக் கணக்கில் தொடர்கின்றபோதும் அரசு இவற்றைக் கண்டுகொள்வதாக இல்லை.

இந்த நிலையிலேயே நேற்றைய கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

*யாழ்ப்பாணம்*

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாண நகர் உள்ளிட்ட அதிகமான இடங்களில் கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டிருந்தன. இன்று அக்ஷய திருதியை என்றபோதும் நகைக் கடைகளும் மூடப்பட்டன. சந்தைகளுக்கு விவ சாயிகள் தமது உற்பத்திகளை நேற்றுக் கொண்டு செல்லவில்லை. மரக்கறிகள் வராதமையால் சந்தைகள் வெறிச் சோடின. மரக்கறிகள் வாங் கச் சென்ற பலரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

பாடசாலைகள் இரண்டாந் தவணைக்காக நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டபோதும் நேற்று வெறிச்சோடின. மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை. ஆசிரியர்களில் அதிகம் பேர் பாடசாலைக்குச் சென்று சில மணி நேரத்தில் வீடு திரும்பிவிட்டனர். பிரதேச சபை மற்றும் நகர சபைகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்களும் மதியத்துக்கு முன்னரே வெளியேறினர். கிராமப்புறக் கடைகள் கூட நேற்றுப் பூட்டப்பட்டிருந்தன.

காலையில் ஓரிரு பேருந்துகள் பணியில் ஈடுபட்டபோதும் பின்னர் அவையும் நிறுத்தப்பட்டன. போக்குவரத்து முடங்கும் என்று முன்னரே கூறப்பட்டதால் பயணிகள் எவரும் பேருந்துகளைக் கவனத்தில் கொள்ளவில்லை. பேருந்து நிலையங்கள் வெறிச்சோடின. ஒரு சில மோட்டார் சைக்கிள்களையும் சிறிய ரக வாகனங்களையுமே சாலைகளில் காணமுடிந்தது.

அரச அலுவலகங்களும் வங்கிகளும் திறந்திருந்தபோதும் பொதுமக்கள் செல்லவில்லை. வைத்தியசாலைகளில் நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர். அங்கு வழமைபோல கிளினிக்குகள் நடைபெற்றன. தூர இடங்களில் உள்ள நோயாளர்கள் தவிர ஏனைய நோயாளர்கள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோக்களில் கிளினிக்குக்கு வந்திருந்தனர்.

சட்டத்தரணிகளும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். இதனால் நீதிமன்றங்களில் நேற்றைய வழக்குகள் சட்டத்தரணிகள் இன்றி நடைபெற்றன.

கடையடைப்புப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினர் நீதிமன்றுக்குச் செல்வதில்லை என முடிவு செய்திருந்தனர். வழக்குகள் மறு திகதியிடப்பட்டன.

வடமராட்சியில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி, மருதங்கேணி ஆகிய நகரப் பகுதிகளில் உள்ள மரக்கறி, மீன் சந்தைகள், கடைகள், பேக்கறிகள், உணவகங்கள் உள்ளிட்ட அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

*கிளிநொச்சி*

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் முன்பாக ஏ-9 வீதியின் குறுக்கே அமர்ந்து ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியூடான போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டது.

அரச திணைக்களங்கள் இயங்கியபோதும், அங்கு மக்கள் செல்லவில்லை. போக்குவரத்துச் சேவைகள் முடக்கப்பட்டமையால் அரச திணைக்களங்களில் ஊழியர்களின் வருகை முற்றிலும் பாதிக்கப்பட்டது. பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை தராமையால் அவை வெறிச்சோடிக் காணப்பட்டன. கிளிநொச்சி மாவட்டமே ஆள்கள் நடமாட்டம் அற்ற நிலையில் காணப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மாவட்ட மக்கள் முழுக் கடையடைப்புக்குத் தமது பெரும் ஆதரவை வழங்கியுள்ளனர்.

*முல்லைத்தீவு*

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத் நகர், முள்ளியவளை, ஒட்டுசுட்டான், புதுடியிருப்பு, விசுவமடு, உடையார்கட்டு, ப குளம், மல்லாவி, துணுக்காய், பாண்டி குளம் ஆகிய பிரதேசங்களின் வர்த்தக நிலையங்கள் முற்றாக மூடப்பட்டிருந்தன.

தனியார் போக்குவரத்துச் சங்கத்தினரும் தமது ஆதரவைத் தெரிவித்துச் சேவைகளை நிறுத்தியிருந்தனர். இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான சில பேருந்துகள் சாலையில் ஈடுபட்டமையை அவதானிக்க முடிந்தது.

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகை மிகக் குறைவாகவே காணப்பட்டது. சந்தைகள் இயங்கவில்லை.

முல்லைத்தீவில் மட்டுமன்றி வடக்கு முழுவதும் பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகங்களில்கூட பொதுமக்கள் வருகை மிகக் குறைந்திருந்தது. வெளிமாவட்டங்களில் இருந்து கடமைக்குச் செல்லும் உத்தியோகத்தர்களின் வரவும் குறைந்திருந்தது.

*மன்னார்*

மன்னாரும் நேற்று முற்றாக முடங்கியது. மரக்கறிச் சந்தைகள் மட்டுமன்றி மீன் சந்தைகளும் மூடப்பட்டன. மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை. படகுகள் கரையில் கட்டப்பட்டிருந்தன.

தனியார் பேருந்துகள் எவையும் பணியில் ஈடுபடவில்லை. தனியார் பேருந்து நிலையம் வெறிச்சோடிக் காணப்பட்டது. அரச பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் பேருந்துக்காகக் காத்திருந்தனர். சில பேருந்துகள் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

*வவுனியா*

வவுனியாவில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் என்ற வேறுபாடின்றி ஒற்றுமையாக அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டன. சன நடமாட்டம் மிகக் குறைவாகக் காணப்பட்டதால் வவுனியா நகரம் வெறிச்சோடியது. வீதிகளில் பொலிஸார் நடமாட்டம் ஆங்காங்கே காணப்பட்டது. வைத்தியசாலை, மாவட்டச் செயலகம், மைதானம் உள்ளிட்ட பல பகுதிகளும் மக்கள் நடமாட்டமின்றிக் காணப்பட்டன.

வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், தனியார் நிறுவனங்கள் என்பன மூடப்பட்டன. தனியார் மற்றும் இ.போ.ச. பேருந்துக்களும் சேவையில் ஈடுபடவில்லை தூர இடங்களுக்கான போக்குவரத்தை இ.போ.சபை பேரூந்துக்கள் மேற்கொண்டன.

*அம்பாறை*

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களிலும் நேற்று வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவைகளில் ஈடுபட்டன. தனியார் போக்குவரத்துச் சேவைகளும் அவ்வாறே இடம்பெற்றன. அத்தோடு பாடசாலைகளில் மாணவர்களது வரவு மிகமிகக் குறைவாக காணப்பட்டது. அரச, தனியார் வங்கிகள் நிறுவனங்கள் காலை வேளையில் இயங்க ஆரம்பித்துப் பின்னர் பூட்டப்பட்டன.

பாண்டிருப்பு, நீலாவணை, நற்பிட்டிமுனை, காரைதீவு, திருக்கோவில் போன்ற தமிழ்ப் பகுதிகளில் சந்தைகள், வர்த்தக நிலையங்கள், கடைகள் எவையும் திறக்கப்படவில்லை. இதனால் அப்பகுதிகளில் இயல்வு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

*முஸ்லிம் பகுதிகளில்*
*வழமை நிலை*

கல்முனை நகரப் பொதுச்சந்தை, சாய்ந்தமருது, சம்மாந்துறை மற்றும் கல்முனைக்குடி பொதுச் சந்தைகளில் வழமை போன்று வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்றன. கல்முனை முஸ்லிம் பகுதி, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர், சம்மாந்துறை போன்ற பிரதேசங்களில் வர்த்தக நிலையங்கள், கடைகள் யாவும் திறக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

*மட்டக்களப்பு*

மட்டக்களப்பு நகரில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. வங்கிச் சேவைகளும் இடம்பெறவில்லை. இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் சேவைகள் வழமைபோல் நடைபெற்றன.

*திருகோணமலை*

திருகோணமலையிலும் பல வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. பாடசாலைகளும் மாணவரின்றிக் காணப்பட்டன. ஆசிரியர்களின் வரவு மிகமிகக் குறைவாகக் காணப்பட்டது. போக்குவரத்துச் சேவை இடம்பெற்றபோதும் பயணிகளின் வருகை குறைவாகவே காணப்பட்டது. (த-4,6,7,9,11,17,26,36, 56,101, 108,109,173,402,422)

## எமது...

யங்கள் சீர்குலைந்துள்ளன. இதனைத் தொடர்ந்து அனுமதிக்க முடியாது.

எங்கள் காணிகளுக்குள் விரைவாக எங்களை மீள்குடியமர்த்துங்கள். அதுவரை எங்கள் அமைதிவழிப் போராட்டம் தொடரும்"

இவ்வாறு கேப்பாபிலவு மக்கள் அவசர கடிதம் ஒன்றை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் ஊடாக நேற்று அனுப்பி வைத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முழு அடைப்பு நேற்று முன்னெடுக்கப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும், கேப்பாபிலவு மக்களும் இணைந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் அரச தலைவருக்கு கேப்பாபிவு மக்கள் அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்தனர்.

"கேப்பாபிலவில் இருந்து இடம்பெயர்ந்தநாளில் இருந்தே எங்கள் அகதி வாழ்க்கை தொடர்கின்றது. சொந்த நாட்டுக்குள் எங்கள் அகதி வாழ்க்கைக்கு இன்று முடிவு வரும் நாளை வரும் என எதிர்பார்திருந்த எமக்கு ஏமாற்றமே மிஞ்சியது. வழங்கொழிக்கும் பூமியில் இராணுவம் சொகுசு விடுதிகள் அமைத்து ஆடம்பரமாக வாழுகின்றார்கள். நாங்கள் கொழுத்தும்வெயிலில் செத்துப்பிழைக்கின்றோம். கடந்த 7 வருடங்களுக்கு மேலாக எங்கள் காணிகளுக்குள் மீள்குடியமர்த்த வலியுறுத்தி பல போராட்டங்களை நடத்தி வருவது உங்களுக்கு நன்கு தெரிந்ததே. எங்கள் பிள்ளைகளின் கல்வி, கலாசாரம், பண்பாடுகள், விழுமியங்கள் சீர்குலைந்துள்ளன. இதனைத் தொடரந்து அனுமதிக்க முடியாது. எங்கள் காணிகளுக்குள் விரைவாக எங்களை மீள் குடியமர்த் துங்கள். அதுவரை அறவழிக்கு உட்பட்ட எங்கள் போராட்டம் தொடரும்" என்று கேப்பாபிலவு மக்களால் அரச தலைவருக்கு அனுப்பப் பட்ட அவசர கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச தலைவருக்கு உரிய கடிதத்தை கேப்பாபிலவு இளைஞர் மன்றத்தின் தலைவர், முல்லைத்தீவு மேலதிக உதவி மாவட்டச் செயலாளரிடம் கையளித்தார். தங்கள் காணிகளை விடுவிக்கக்கோரி தொடர் அமைதிவழிப் போராட்டத்தை 58ஆவது நாளாக கேப்பாபிலவு மக்கள் முன்னெடுத்துவருகின்றனர்.

(வ-7)

## காணாமற்...

களுக்கான மனுக்களையும் அவர்கள் கையளித்தனர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நேற்று கடையடைப்பு முன்னெடுக்கப்பட்டது. இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அவர்கள் மாவட்ட செயலகம் முன்பாக நேற்றுமுற்பகல் 10 மணியளவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"போர் நடைபெற்ற காலத்திலும், போரின் இறுதிக்கட்டதிலும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்களும், இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களும் எங்கே இருக்கின்றார்கள்? என்பது தொடர்பாக எந்த விதமான உறுதியான தகவல்களும் எமக்கு கிடைக்கவில்லை. இதற்குப் பொறுப்பானவர்களும் பதில் சொல்வதாக இல்லை. இனியும் காலத்தை தாமதியாது எங்கள் உறவுகளுக்கு விரைந்த தீர்வைப் பெற்றுத்தாருங்கள்" என்று வலியுறுத்தி அவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

'எங்கள் பிள்ளைகள் சிறையில் நாங்கள் நடு வீதியில், எங்கள் பிள்ளைகளை வெளியே விடு. அபிவிருத்தி வேண்டாம் அப்பாதான் வேண்டும், பதில் சொல் பதில் சொல் எங்களுக்கு முதல் பதில் சொல்' போன்ற கோசங்களையும் எழுப்பி தங்கள் கவனயீர்ப்பு போராட்டத்தை உறவுகள் முன்னெடுத்தனர்.

போராட்டத்தின் இறுதியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அகியோருக்கான மனுவை மாவட்டச் செயலகத்தின் ஊடாகவும், எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தனுக்குரிய மனுவை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசாவிடமும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்குரிய மனுவை வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனிடமும் அவர்கள் வழங்கி வைத்தனர்.

போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், ச்ாள்ஸ் நிர்மலநாதன், சாந்தி சிறிஸ்கந்தராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

"காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் வீதியில் இறங்கி தமக்கு உரிய நியாயத்தைப் பெற்றுக்கொள்ளவதற்காக போராடிவருகின்றார்கள்.

பன்னாட்டு நீதிபதிகளைக் கொண்டு ஒரு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதனை இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டு பன்னாட்டு நீதிநியாயங்களுக்கு உட்பட்ட ஒரு சட்டத்தை கொண்டுவர வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதோ? அதனை விட பயங்கரமான சட்டம். இந்த விடயங்களில் உரிய தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு அர்ப்பணிப்புடன் செயற்படும்" என்று போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி. சிவமோகன் தெரிவித்தார். (வ-

## மைத்திரியை...

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா விரை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். முப்படை உட்பட ஒட்டுமொத்த பாதுகாப்பு விவகா ளையும் கையாளும் வகையில் உயர்நி பதவியொன்றை பீல்ட் மார்ஷல் சரத் பொ சேகாவுக்கு வழங்குவதற்கு அமைச்சர யில் ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ள நிலை இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

நாட்டில் அத்தியாவசிய சேவைத்துறையை முடக்கும் வகையில் குழுவொன்று செயற்படும் பட்சத்தில், மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் அந்தச் சேவையை முன்னெடுப்பதற்கு வழிவகுக்கும் பொறுப்பை ஏற்பது பற்றி அரச தலைவருடன் பேச்சு நடத்தப்படும் என்று சரத் பொன்சேகா நேற்று தெரிவித்தார்.

பாதுகாப்புத்துறையில் உயர்நிலைப் பதவியொன்று உங்களுக்கு வழங்கப்படவுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் அறிவித்துள்ளாரே? என எழுப்பப்பட்ட கேள்விக்கு,

இராணுவத்தைப் பொறுப்பேற்க முடியுமா என அமைச்சரவைக் கூட்டத்தின்போது அரச தலைவர் என்னிடம் வினவினார். முடியாது எனக் கூறிவிட்டேன். அதன் பின்னர் கூட்டுப் படையணியின் தலைமைப்பொறுப்பே ஏற்கச் சொன்னார். அதுவும் வேண்டாம் எனக் கைகளில் சைகை காட்டினேன்.

நாட்டில் அவசர நெருக்கடிநிலையொன்று ஏற்படும்போது அதைக் கட்டுப்படுத்துவதற்கும், அத்தியாவசிய சேவைகள் முடங்கும் பட்சத்தில் அதை முன்னெடுக்கவும் பொறிமுறையொன்று அவசியமாகவுள்ளது. அவ்வாறான சூழ்நிலைகளின்போது நான் பொறுப்பொன்றை ஏற்கவேண்டுமென அமைச்சரவையில் பேசப்பட்டது. இதற்குச் சகல அமைச்சர்களும் ஆதரவு தெரிவித்தனர்.

இதையடுத்து பேச்சு நடத்திய பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கலாம் என நான் கூறினேன். அரச தலைவரின் நோக்கம் என்ன என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. எனவே, நாடு பற்றி யோசித்து தீர்மானமொன்றை எடுப்பேன் என்று விடையளித்தார்.

ஜனநாயகத்தைக் காட்டி ஆட்சிக்கு வந்த அரசு இராணுவ ஆட்சிக்கான ஒரு ஆரம்பக்கட்ட நடவடிக்கையாகவா இதைச் செய்கின்றது? என எழுப்பட்ட கேள்விக்கு,

அவ்வாறு இல்லை. இதற்கு முன்னர் வேண்டுமானால் இராணுவ ஆட்சி இருந்திருக்கலாம். ஆட்சியில் இருந்தவர் தனது பாதுகாப்புச் செயலாளர் ஊடாக வெள்ளை வான்களைப் போட்டு, வீடுகளை உடைத்தல், வீதிகளை உடைத்தல் உட்பட பல நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இப்படியானதொரு யுகம் இனிவராது. அப்படியான பாதுகாப்புச் செயலாளர்கள் இனி அந்த இடத்துக்கு வரவும் முடியாது.

கூட்டு அரசு, மக்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. அந்த சுதந்திரத்தை சிலர் தவறாகப் பயன்படுத்துகின்றனர். எனவே, ஒட்டுமொத்த மக்களினதும் நலனைக் கருத்தில்கொண்டு சுயலாப நோக்கோடு செயற்படும் அந்தக் குழுவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று பதிலளித்தார் சரத் பொன்சேகா.

(த-4)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 31.03.1963
மறைவு 29.03.2017

கெருடாவில் கிழக்கு சமக்கார அமைப்பின் பொருளாளர் திரு.துரைராசா அவர்களின் பாரியார்

அமரர் **துரைராசா தாரணி**

அவர்கள் 29.03.2017 புதன்கிழமை இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**புலோலி கமநல சேவைகள் நிலைய சமூகம்**



## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்திசாலையில் மருந்தாளராக கடமையாற்றும் **சுபாகினி திருமால்** அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி**

**பரமேஸ்வரி திருஞானசம்பந்தன்**

அவர்கள் (26.04.2017) அன்று காலமானார். அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிறைகாண் மருத்துவவியல் தொழில்வல்லுனர்கள் ஒன்றியம், யாழ்ப்பாணம்.**


## விலைக்கேள்விக்கான கோரல்
## முதலமைச்சரின் அமைச்சு
## வடக்கு மாகாணம்.

### குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்திக் கொடை (PSDG – 2017)

1. தவிசாளர் மாகாண அமைச்சின் பெறுகைக் குழு உள்ளூராட்சி மன்றங்களின் சார்பில் வடக்கு மாகாணத்திற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கட்டுமாண வேலைகளுக்கான தகவுடையோரும், தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடததப்படும். இருப்பினும் வியாபார பதிவினை வடக்கு மாகாண நிர்வாக எல்லைக்குள் கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களே விண்ணப்பிக்க முடியும்.
3. விலைக் கேள்வியாளர்கள் கறுப்பு பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருப்பவரும் 04/2016(i) இலகக 30.09.2016 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணதொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் வடக்கு மாகாணத்திற்குள் செல்லுபடியான வியாபார / கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக விவரங்கள் பகுதி 5 இல் (Schedule / Bidding Data & Contract Data) உள்ளடக்கப் பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை திட்டமிடல் கிளை, முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாண சபை, A9 வீதி, கைதடி எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே: 021 205 7114) அத்துடன் அலுவலக நாள்களில் மேற்படி முகவரியில் 9.00 மணியிலிருந்து 16.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
6. எழுத்து மூலமான விண்ணப்ப மொன்றை செயலாளர், முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம், A9 வீதி, கைதடி எனும் முகவரிக்கு சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான ஒரு முழுமையான கேள்வி ஆவணத்தினை 02.05.2017 ஆம் திகதியிலிருந்து 19.05.2017 ஆம் திகதிவரை எந்த ஒரு வேலை நாள்களிலும் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரை மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000/= செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். (கொடுப்பனவு முறைகாசாக இருக்கும்)
7. விலைக் கேள்வியானது இரு பிரதிகளில் (மூலப், பிரதி, இணைப்பிரதி) தயாரித்து 19.05.2017 ஆம் திகதியன்று 15.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தவிசாளர், மாகாண அமைச்சின் பெறுகைக்குழு, முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம், A9 வீதி, கைதடி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைக்குமான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடனேயே மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதியிலிருந்து 77 நாள்கள் (எழுபத்தேழு – 05.08.2017) வரை செல்லுபடியாகும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. கேள்விகோரல் தொடர்பான முன்னோடி கூட்டம் மாநாட்டு மண்டபம், முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம், A-9 வீதி கைதடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 12.05.2017 ஆம் திகதி அன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

| Se. No | ஒப்பந்த இலக்கம் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை | தேவைப் படும் காலம் |
| 1 | NP/05/04/03/Jaf/ PSDG/2017/01 | நெடுந்தீவு மணற் கடற்கரையினை அழகு படுத்தல் மற்றும் அடிப்படை வசதிகளை வழங்கல் | 2.56 | 3மாதம் | C8 (கட்டடங்கள்) | 26,000.00 | 03.09.2017 வரை |
| 2 | NP/05/04/03/ Mullai/ PSDG/2017/03 | முல்லைத்தீவு கற்சிலை மடு பகுதியினை அழகுபடுத்தல் மற்றும் அடிப்படை வசதிகளை வழங்கல் | 3.36 | 3மாதம் | C8 (கட்டடங்கள்) | 34,000.00 | 03.09.2017 வரை |
| 3 | NP/05/04/03/ Mullai/ PSDG/2017/04 | முல்லைத்தீவு விஸ்வமடு அட்டைக் குளம் பகுதியை அழகுபடுத்தல் மற்றும் அடிப்படை வசதிகளை வழங்கல் | 5.40 | 4மாதம் | C7 (கட்டடங்கள்) | 54,000.00 | 03.09.2017 வரை |
| 4 | NP/05/04/03/Man /PSDG/2017/05 | மன்னார் பேசாலை கடற்கரையை அழகுபடுத்தல், மற்றும் அடிப்படை வசதிகளை வழங்கல். | 3.80 | 3மாதம் | C8 (கட்டடங்கள்) | 38,000.00 | 03.09.2017 வரை |
| 5 | NP/05/04/03/Man / PSDG/2017/06 | கிளிநொச்சி மருது நகர் பகுதியை அழகு படுத்தல் மற்றும் அடிப்படை வசதிகளை வழங்கல் | 3.30 | 3மாதம் | C8 (கட்டடங்கள்) | 33,000.00 | 03.09.2017 வரை |

திருமதி.வி.கேதீஸ்வரன்.
தவிசாளர்,
மாகாணஅமைச்சுபெறுகைக்குழு
முதலமைச்சரின் அமைச்சு
வடக்குமாகாணம்.

27.04.2016

(C/29472)(10)

## இலங்கைக்கு...

தீர்மானத்தை முன்வைத்திருந்தனர். இந்தத் தீர்மானம் மீது பிரஸ்சல்சில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் கடந்த இரு தினங்கள் விவாதம் நடத்தப்பட்டு நேற்று மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கு 119 உறுப்பினர்கள் மாத்திரம் ஆதரவளித்தனர். தீர்மானத்துக்கு எதிராக 436 உறுப்பினர்கள் வாக்களித்தனர். 22 நாடாளுமன்ற உறுப் பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. இதற்கு அமைவாக, தீர்மானம் தோற் கடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குஜி.எஸ்.பி. பிளஸ்வரிச்சலுகைவழங்கப்படுவதாக இருந்தால் சில நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம்தெரிவித்திருந்தது. அந்த நிபந்தனைகளை இலங்கை நிறைவேற்றவில்லை எனவும், மந்தமாகச் செயற்படுகின்றது என்று தெரிவித்தும், இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை வழங்கப்படக்கூடாது என்ற தீர்மானம் கொண்டு வரப்பட்டிருந்தது. அந்தத் தீர்மானமே தோற்கடிக்கப்பட்டுள்ளது. (த-5)


## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் 4 ஆம் குறுக்குத் தெருவிலுள்ள 1 3/4 பரப்பில் வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
5 அறைகள், கிணறு, Attach Bathroom, Out side Bathroom என்பன உண்டு.

தொடர்பு: 076 414 3122


## பொதுக்கூட்டம் புதிய நிர்வாகம் தெரிவு அறிவித்தல்

எதிர்வரும் 30.04.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பொதுக்கூட்டம் ஆரம்பமாகி தொடர்ந்து புதிய நிர்வாகசபைத் தெரிவு எமது சங்க பணிமனையில் நடைபெறும் என்பதை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

நன்றி

செயலாளர்,
தெல்லிப்பழை இந்து இளைஞர்சங்கம்.


## வடக்கின் மாபெரும் சுகாதாரக் கண்காட்சி

யாழ். நிறுவனங்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்

வடக்கின் மாபெரும் சுகாதாரக் கண்காட்சி மே மாதம் 19,20,21 ஆம் திகதிகளில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் காலை 10.00 மணி தொடக்கம் மாலை 6.30 வரை நடைபெறவிருக்கின்றது.

தொடர்புகளுக்கு
0773436927 / 0778979990
www.evolutionecs.com





## சிவன் ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**
076 585 9977 , 075 787 3073

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே!

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது. வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார். தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

**இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி.**
**(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)**
**யாழ்ப்பாணம்.**
நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

100% உத்தரவாதம்



## Yarl Beauty & Language's Skills College

YBLSC



மகளிருக்கான பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!
அழகுக்கலை
கேக் ஐசிங்
தையல்
சனி, ஞாயிறு பிரிவுகள் 06.05.2017 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 08.05.2017 அன்று 10.00 மணிக்கு
#சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட NVQ பாடத்திட்டம்.
#சர்வதேச அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.



தமிழ் விளக்கத்துடன் A1 சான்றிதழுக்கு ஏற்றவாறு ஜேர்மன், சுவிஸ் நாடுகளுக்கான "Deutsch" மொழி வகுப்புகள்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை)

## ஏ-9 வீதியை...

வீதியை விட்டு அகன்று போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

**கிளிநொச்சியில்**

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒரு மணித்தியாலயம் ஏ-9 வீதியை மறித்து கண்ணீருடன் கதறி அழுது போராட்டத்தில் ஈடுபட்டனர். காணாமற்போனோருக்கு அரசு விரைவான ஒரு தீர்வை வழங்கவேண்டும் என்று அவர்கள் கோரினர்.

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று 67ஆவது நாளாகவும் தமது கவனவீர்ப்புப் போராட்டத்தை தொடர்ந்தனர்.

போராட்டம் குறித்து அரசு எவ்வித அக்கறையும் இன்றி உள்ளதால் போராட்ட வடிவத்தை மாற்றித் தீர்வு கிடைக்கும் வரை அகிம்சை வழியில் போராடப் போவதாகவும் அவர்கள் கூறினர்.

**வவுனியாவில்**

வவுனியாவில் காணாமற்போனோரின் உறவுகள் மேற்கொண்டுவரும் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. நேற்றுக் காலை 8 மணியளவில் அவர்கள் ஏ-9 முதன்மைச் சாலைக்குக் குறுக்காக அமர்ந்திருந்து போராட்டம் மேற்கொண்டனர். போராட்ட இடத்திற்குச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வீதியை வழிமறித்துப் போராட்டம் நடத்தவேண்டாம். போராட்ட இடத்திலிருந்தே அதனை மேற்கொள்ளுமாறு தெரிவித்ததையடுத்து அவர்கள் ஒருமணி நேரம் மேற்கொண்ட வீதி மறிப்புப் போராட்டத்தைக் கைவிட்டனர். (து-4-6-35)

## அமெ. கடற்படைக்கு...


இந்தியா அமெரிக்காவுடன் அணு ஆயுத ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. அணுஉற்பத்திக்குத்தேவையான யுரேனியத்தை இந்தியாவுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இணங்கியுள்ளது. அதன் அடிப்படையில் இந்த இரண்டு நாடுகளும் இராணுவ மட்டத்திலும் ஒப்பந்தம் செய்துள்ளன.

இதனை அப்படையாகக் கொண்டு பல நடவடிக்கைகளை இந்த இரண்டு நாடுகளும் மேற்கொண்டு வருகின்றன. அந்த இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான இடமாக இருப்பது திருகோணமலைத் துறைமுகம்தான். இந்தத் துறைமுகத்தை கைப்பற்றும் நடவடிக்கையில்தான் இந்த இரண்டு நாடுகளும் ஈடுபட்டுள்ளன.

இலங்கைக் கடற்படையினருக்குப் பயிற்சி வழங்குதல் என்ற போர்வையில் அமெரிக்கக் கடற்படையினர் இலங்கைக்குள் நுழையவுள்ளனர். திருகோணமலைத் துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்டே இந்தப் பயிற்சி நடவடிக்கை இடம்பெறவுள்ளது. இலங்கையும் அமெரிக்காவும் இதற்கான இணக்கப்பாட்டை எட்டியுள்ளன என்று ஓரிரு மாதங்களுக்கு முன் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

பன்னாட்டுச் சக்திகள் இன்று இலங்கைக்குள் மிக இலகுவாக நுழைந்து தமது தேவையை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு இடங்கொடுத்துள்ளது. நாம் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளோம். இந்த ஆபத்தில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றார். (து-3)

### மரண அறிவித்தல்



**சபாபதி பரமேஸ்வரன்**

(இளைப்பாறிய கோட்டகல்விப் பணிப்பாளர்)

இல.50, பகுதி 1, விசுவமடு கிழக்கு, விசுவமடுவை வசிப்பிடமாகக் கொண்ட சபாபதி பரமேஸ்வரன் 26.04.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் பாரதியின் (ஆசிரியை - மு/ விசுவமடு மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும்,சோதிகா, ரூட்சிகா, சேதுராகவன் (மு/ விசுவமடு மகா வித்தியாலய மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு சபாபதி (ஆசிரியர்) - சோதிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற கதிர்காமு நடராசா (அதிபர்) மற்றும் பவளம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் பொன்னம்மா (கனடா), குகதாசன் (இளைப்பாறிய ஆசிரியர்), கோபாலசிங்கம் (அமெரிக்கா), குகனேஸ்வரன் (கனடா), கலாவதி (கனடா) ஆகியோரின் சகோதரனும், செவ்வேள் (யாழ்.மாநகர சபை), வரதன் (பிரான்ஸ்), வாசுகி சேந்தன் ( கனடா), வசுமதி (கனடா), ஐங்கரன் (உள்ளூராட்சித் திணைக்களம் - அம்பாறை), பதுமினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2017) வெள்ளிக்கிழமை இல.50, பகுதி 1 விசுவமடு கிழக்கு, விசுவமடுவிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் விசுவமடு 12 ஆம் கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (c/29470)

**இல.50, பகுதி 1,**
**விசுவமடு கிழக்கு, முல்லைத்தீவு.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

### மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 06 . 1944



இறப்பு 26 . 04 . 2017

**திருமதி பாக்கியலட்சுமி சிவலிங்கம்**

"பாக்கி" என்று செல்லமாகவும் அன்பாகவும் அழைக்கப்படும் யாழ்ப்பாணம், கைதடி அரசமுதியோர் இல்லத்தில் சிரேஷ்ட தாதியாக சேவையாற்றி ஓய்வு பெற்ற திருமதி பாக்கியலட்சுமி சிவலிங்கம் 26.04.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் என அழைக்கப்படும் சுப்பையா - அன்னபூரணம் தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற பொன்னையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மருந்தாளர் பொன்னையா சிவலிங்கத்தின் பாசமிகு மனைவியும், விஜிதா, சுஜாதா, அஜந்தா (ஆசிரியை - வவுனியா, புளியங்குளம் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேஸ்கண்ணா, கமலநாதன், எழுத்தாளர் புயல் ஸ்ரீகந்தநேசன் ஆகியோரின் அன்புமிகு மாமியாரும், மயூரி, யாழன், யுரதிஹா ஆகியோரின் கருணைமிகு அம்மம்மாவும், காலஞ்சென்ற தம்பிஜயா சிவபாதசுந்தரத்தின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசாம்பாள், செல்லத்துரை, தேவதாசன், கனகலிங்கம், பவானலட்சுமி மற்றும் குணவதி, பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2017) வெள்ளிக்கிழமை இல.18, இலந்தைக்குளம் வீதி, அரியாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(cs/3553) **தகவல்:குடும்பத்தினர்.**


**021 222 0558, 077 968 1333**

எமது அன்பிற்கும் பாசத்திற்குமுரிய
தந்தை

## அமரர் டாக்டர் கந்தப்பு நடராசா

அவர்களின்

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணகம் மகிழ்ந்திட 08.01.1929
விண்ணகம் நெகிழ்ந்திட 28.04.2014

*அன்பின் உருவான எம் அப்பாவே*
*ஆண்டு மூன்று ஆகியும் ஆறவில்லை எம் இதயம்*
*உருவம் மறைந்தாலும் உங்கள் நினைவுகள்*
*எங்களுடன் இரண்டறக் கலந்திருக்கும்*
*உங்கள் காலடிக்கு எங்கள் கண்ணீர்ப் பூக்கள்*

**என்றும் உங்கள் நினைவுடன் வாழும்**

**"துவாரகா", மூளாய்.** **மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(8362)(10)

### மரண அறிவித்தல்

**திருமதி இரஞ்சிதமலர் செல்வரட்ணம்**



வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் இல. 28, கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரஞ்சிதமலர் செல்வரட்ணம் நேற்று (27.04.2017)வியாழக்கிழமை கத்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற S.T ஜீவரட்ணம் - அலிஸ் பூரணம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஜோன் செல்வதுரை - லுசில் தங்கரட்ணம் தம்பதியரியின் அருமை மருமகளும் காலஞ்சென்ற ஜோன் செல்வதுரை செல்வரட்ணத்தின் அன்பு மனைவியும் அனோஜா விமலேந்திரன் (இளைப்பாறிய ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி , வட்டுக்கோட்டை) காலஞ்சென்ற அனுரா செல்வரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr.நோயல் அரசரட்ணம் விமலேந்திரன் (சமாதான நீதிவான்,இளைப்பாறிய அதிபர் - யாழ்ப்பாணக் கல்லூரி , வட்டுக்கோட்டை , அதிபர் - ஏஞ்சல் சர்வதேச பாடசாலை,மானிப்பாய்) பமிலா செல்வரட்ணம் (இல்மா சர்வதேச பாடசாலை, கொழும்பு)ஆகியோரின் அருமை மாமியாரும் ஜோன் நிரோஷன் விமலேந்திரன் - லக்ஷமிலா,விமலேந்திரன் (UK),ஜோயல் செஷகான் விமலேந்திரன் - மொறின் றெஜினா விமலேந்திரன்,பிரஷான் செல்வரட்ணம் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஜபின் றெஷோன் விமலேந்திரனின் அருமை பூட்டியும் காலஞ்சென்ற வர்களான புஷ்பராணி - செல்வரட்ணம் ,ஜீவராஜா ஜீவரட்ணம், பாலராஜா ஜீவரட்ணம் மற்றும் மணி சற்குணராஜா, Dr.கருணை ஜீவரட்ணம் ஆகியோரின் அன்பு சகோதரியும் செல்வராணி - மகாதேவன், செல்வமணி செல்வதுரை (இளைப்பாறிய ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி ,வட்டுக்கோட்டை) செல்வராஜன் செல்வதுரை ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.04.2017) பி.ப 3.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தென்னிந்திய திருச்சபை வட்டுக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல .28,கல்லூரி ஒழுங்கை,**
**வட்டுக்கோட்டை.**

தகவல்
**Dr.N.A. விமலேந்திரன்**
**(JP) (மருமகன்)**

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## காணாமற்போனோரின்...

சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். வடக்கு மாகாண சபையின் 91 ஆவது அமர்வு அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று ஆரம்பமானது. இங்கு உரையாற்றும்போதே முதலமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விரக்தியின் அடையாளமாக ஒரு நிகழ்வு இந்த நாட்டின் வடக்கு -கிழக்கு மாகாணங்களில் நடைபெறுகின்றது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் கடையடைப்பு நடக்கிறது.

திருகோணமலையில் போராடிக்கொண்டிருக்கும் அப்பேர்ப்பட்ட மக்களைக் கூட்டாக அண்மையில் சந்தித்தேன். அதற்கு முன்னர் வடக்கு மாகாணத்திலும் பல குழுக்களைச் சந்தித்தேன். கடந்த பல நாள்களாகக் காணமற்போன தங்கள் உறவுகள் பற்றியும் இராணுவ ஆக்கிரமிப்பால் தமது காணிகளை இழந்தமை பற்றியும் இந்த மக்கள் தமது வருத்தங்களையும் கரிசனைகளையும் தொடர்ச்சியான போராட்டங்கள் மூலம் எடுத்துக் காட்டிவருகின்றார்கள். மக்கள் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் ஏதேனும் நற்செய்தி அரச தரப்பில் இருந்து வராதா என்ற எதிர்பார்ப்பில் இருந்து வருகின்றார்கள்.

பலரின் 50 நாள்களுக்கு மேலான போராட்டங்கள் உத்தியோகபூர்வமாக எந்தவித எதிர்வினையும் கொண்டுவராத நிலையில்த்தான் நீதிக்கான ஒரு காத்திரமான ஜனநாயகச் செயற்பாடு என்ற முறையில் இன்றைய மக்கள் அணி திரள்வு கடையடைப்புப் போராட்டமாக நடைபெறுகின்றது. இந்த நிலையில் முஸ்லிம் சகோதரர்கள், சிங்கள சகோதரர்கள் அடங்கலான வடக்கு - கிழக்கு சகல மக்களும் தமது மனோநிலையைப் பிரதிபலிக் கும் வண்ணம் ஒருங்குசேர்ந்து போராடுவது கட்டாயமாகியுள்ளது.

நாம் யாவரும் இம் மக்கள் போராட்டத்திற்கு எமது ஆதரவினை எடுத்துக் காட்டுவதிலிருந்து எமது தெற்கத்தைய சிங்களச் சகோதரர்களும் கொழும்பு அரசும் பன்னாட்டு அரசுகளும் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். தொடர்ந்து எம் மக்களையும் அவர்களின் ஆதங்கங்களையும் அவர்களின் கோரிக்கைகளையும் புறக்கணித்து வருவது யாருக்குமே நல்லதல்ல. மக்களின் மனோ நிலையைத் தவறாகப் புரிந்துகொண்டு பிழையான நடவடிக்கைகளில் அரசு இறங்க எத்தனித்தால் அது பாரதூரமான விளைவை எம் மக்களுக்குத்தான் ஏற்படுத்தும்.

எமது கோரிக்கைகள் நியாயமானவை. அவை எமது அடிப்படை உரிமைகள் சார்ந்தவை. ஆகவே அவற்றிற்குத் தீர்வு காணுதல் அவசியம். தீர்வு காண்பதற்கு அரசு பின் நிற்பதே அல்லது தாமதிப்பதே நேற்றைய வடக்கு - கிழக்கு ரீதியான போராட்டத்தின் அடிப்படைக் காரணமாகும். எமது பொறுப்புக் கூறலை நாங்கள் தட்டிக் கழித்துவருவதால் மக்களின் மனவருத்தங்கள் மேலும் மேலும் உக்கிரமடையும் என்பதற்கு நேற்றைய கடையடைப்பு ஒரு உதாரணமாகும்.

கடையடைப்புக்கு எம் மக்கள் காட்டும் கட்சிப் பாகுபாடற்ற கரிசனைமிக்க ஒத்துழைப்பை வடக்கு - கிழக்கு மக்களின் ஒற்றுமைக்கான ஒரு அணிதிரள்வாகவே நான் காண்கின்றேன்.

எமது கஷ்டங்கள் , துன்பங்கள், அல்லல்கள், அவலங்கள் ஆகியவற்றை மற்றவர்களும் புரிந்துகொண்டிருக்கின்றார்கள் என்பது இரவு பகலாகப் போராடும் மக்களுக்கு ஒருவித மன நிறைவை ஏற்படுத்தும். அத்துடன் எமது ஏகோபித்த பங்களிப்பு எமது மக்களின் ஒற்றுமையைப் பிரதிபலிக்கும்.

இதன் காரணமாகவே எமது வடக்கு மாகாண சபை தனது நிகழ்ச்சிகளைச் சுருக்கி தமது ஏகோபித்த ஆதரவினை போராடும் எமது மக்களுக்கு வழங்க உத்தேசித்துள்ளது. அவைத் தலைவரும் அதற்குத் தமது பூரண ஒத்துழைப்பைவழங்கமுன்வந்திருப்பது எமது மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் கூட்டாக தமது கரிசனைகளைஉலகிற்குஎடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. நாம் ஒன்றுபட்டால்த்தான் எமக்கு உண்டுவாழ்வுஇதனை எம்மக்கள் உணர்ந்து கொள்ளும்காலம்உதயமாகியுள்ளது - என்றார். (த-8)

---

### கண்ணீர் அஞ்சலி



**அமரர் கதிர்வேலு**
**சபாபதி பரமேஸ்வரன்**
(GSP)

நல்லாசானாய். நல்லினிய அதிபராய்
நல்லதோர் அதிகாரியாய்
நண்பருக்கு நண்பராய்


நாணயமாய்ப் பணியாற்றி நானிலம் போற்ற வாழ்ந்து விண்ணகம் ஏகிய நண்பனின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அவரின் பிரிவால் துயறுரும் உறவுகளுடன் துயர் பகிர்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**செ.செல்வராஜா (ஓய்வுநிலை உ.க.ப)**
**குடும்பத்தினர்.**

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் செல்லத்துரை**
**பாலகிருஷ்ணன்**

ஓராண்டு காலம் உருண்டு
- போனாலும்
எங்கள் குடும்ப ஒளிவிளக்காய்த்
திகழ்ந்த எங்கள் அன்புத்
- தெய்வமே
உங்கள் நினைவுகள்
- என்றும்
எங்களை விட்டு அகலா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்

நீங்கா நினைவுடன்
**குடும்பத்தினர்.**

(சி.எஸ்)(3364)

---

### கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் முகாமைத்துவ
உதவியாளர்
**திரு.தி.ஜனவிந்தன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர்**
**நாகன்-**
**தில்லைநாதன்**
(இளைப்பாறிய ஆசிரியர்)



**மண்ணில்**
**10.09.1942**
**விண்ணில்**
**25.04.2017**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

**எல்.ஐ.சி (LIC) யாழ்கிளை.**

---

### மரண அறிவித்தல்



**நல்லான் குணசிங்கம்**
**(ஓய்வூதியர் - நீர்ப்பாசனத் திணைக்களம் - யாழ்.மாநகரசபை)**

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லான் குணசிங்கம் (ஓய்வூதியர் - நீர்ப்பாசனத் திணைக்களம் - யாழ்.மாநகரசபை) 25.04.2017 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லான் - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயன் - சின்னன் ஆகியோரின் பாசமிகு மருமகனும், நவமணிதேவியின் அன்புக் கணவரும், பரராஜசிங்கம் (சுவிஸ்), சத்தியவிமலா, லதா மற்றும் காலஞ்சென்றவர்களான அழகேஸ்வரி, இரத்தினசிங்கம், குணபாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வைத்திலிங்கம், குணநாதன், சந்திரதேவி, கனகாம்பிகை, சசிதேவி (சுவிஸ்) மற்றும் காலஞ்சென்றவர்களான பழனி, வைரமுத்து, நல்லையா, இராசையா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சந்திரதாசனின் (சுவிஸ்) அன்புத் தந்தையும், சந்திரிகா, விமலாதாசன், சைக்கா, தனூறன், மிதுஷா (சுவிஸ்), கானிலா (சுவிஸ்), பிரவீன் (சுவிஸ்) மற்றும் காலஞ்சென்றவர்களான ஜெயதாசன், கமலதாசன் ஆகியோரின் பெரியதந்தையாரும், சந்திரிகா (சுவிஸ்), கமலா, குலா, லோகா, பிறேமதாஸ், சுரேக்கா, றேணுகா, சுரேஸ், கஜீவன், சதீபன், கஜன், கஜீதா, சஜீதா, புஸ்பமலர், ஜீவநாயகி (கனடா), விஜயகுமார் (கனடா), சறோஜினி, சதீஸ்குமார் (கனடா), நதீஸ்குமார் (கனடா), புசாலினி, ஜெயாலினி, ராகினி மற்றும் காலஞ்சென்றவர்களான இந்திராதேவி, சறோ, லோகநாயகி, தர்மசீலன், ஜெயசீலன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சபித் (சுவிஸ்), ஹரித் (சுவிஸ்), கோகுல்நாத், ரோசிகா, பவின்ஜா, சுலக்சன், வைஸ்ணவி, காவியா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில், கோட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.** **தகவல்: குடும்பத்தினர்.**

**077 4115687**

---

### 31ஆம் நாள் நீங்கா நினைவலைகள்

**தோற்றம்**
**22 . 07 . 1952**



**மறைவு**
**29 . 03 . 2017**

**திதி: துதியை**

**திருமதி விமலாவதி (விமலா) தேவபெனடிற்**

எங்கள் அன்பு உடன்பிறப்பே, ஒரு மாதம் ஓடியதா நீ எமைப் பிரிந்து? உன் உடல் தான் எமைப் பிரிந்தது. ஆனால் நீ எப்பவும் எங்களுடன் தான் இருப்பாய் என்பது எங்களுக்குத் தெரியும். எங்கள் குடும்பத்துக்கு நீ ஒரு தலைவியல்லவா? நீ இல்லாமல் நாங்கள் நிலை தடுமாறுகின்றோம். பாசத்திலும் சரி, அன்பிலேயும் சரி, புத்திமதி சொல்வதிலேயும் சரி உனக்கு நிகர் யாருமே இல்லை. உன் புகழுடம்பைக் கூட நேரே பார்க்க முடியாத துர்ப்பாக்கியசாலிகள் நாங்கள். உன் அம்மாவுடனும், சின்னக்காவுடனும் சேர்ந்திருப்பாயென நினைக்கின்றோம்.

நாங்கள் தேற வழியின்றித் தவிக்கின்றோம்
உன்ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**70/6, கொழும்புத்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | | 4 | | 6 | | | 5 |
| | 8 | | | | | 9 | 7 | 6 |
| 5 | | 6 | 1 | | | | 4 | |
| | | 3 | 2 | | | | | 7 |
| | 5 | | | | | | 9 | |
| | | | | | 1 | 5 | | |
| | 4 | | | | 3 | 7 | | |
| | | 8 | | | | | 5 | |
| 2 | | | 9 | | 4 | | 8 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 3 | 2 | 5 | 8 | 1 | 6 | 9 |
| 5 | 2 | 1 | 4 | 6 | 9 | 8 | 7 | 3 |
| 9 | 6 | 8 | 3 | 7 | 1 | 4 | 2 | 5 |
| 6 | 8 | 4 | 1 | 3 | 5 | 2 | 9 | 7 |
| 7 | 5 | 2 | 9 | 4 | 6 | 3 | 1 | 8 |
| 3 | 1 | 9 | 8 | 2 | 7 | 6 | 5 | 4 |
| 2 | 9 | 7 | 6 | 8 | 3 | 5 | 4 | 1 |
| 8 | 4 | 5 | 7 | 1 | 2 | 9 | 3 | 6 |
| 1 | 3 | 6 | 5 | 9 | 4 | 7 | 8 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.















# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** உற்சாக மனதுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்களுக்கு நீண்ட நாள் விருப்பம் நிறைவேறும்.

**இடபம்:** பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**மிதுனம்:** மனதில் நேர்மை மேலோங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவர். குடும்பத்தில் சுபவிடயப் பேச்சு நடக்கும்.

**கடகம்:** குடும்பப் பிரச்சினையைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு சலுகை பெறுவதில் தாமதம் உண்டாகும்.

**சிங்கம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி மறையும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள் பாராட்டு வெகுமதி பெறுவர்.

**கன்னி:** அன்றாட பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும். கூடுதல் சொத்து வாங்க யோகம் உண்டு.

**துலாம்:** அடுத்தவர் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்பட சமாளிப்பர்.

**விருச்சிகம்:** எவருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி கொடுக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகும் குறுக்கீடுகளைச் சரிசெய்வது நல்லது. பணியாளர்கள், சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.

**தனுசு:** சமயோசிதமாக செயல்பட்டு வருவீர்கள். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்தி அளிக்கும். வருமானம் அதிகரிக்கும்.

**மகரம்:** நேர்மையுடன் செயல்பட்டு வருவீர்கள். நண்பரின் தேவையறிந்து உதவி செய்வீர்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும். பெண்கள் தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

**கும்பம்:** சிலர் உங்களின் நற்செயலைப் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்குவர். உணவு உண்பதில் கட்டுப்பாடு தேவை.

**மீனம்:** நண்பரால் சங்கடத்துக்கு ஆளாக நேரிடும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமையைச் சந்திப்பர். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

# திரைப்படமாகிறது மகாபாரதம்




ஞான பீடவிருது வென்ற எழுத்தாளர் எம்.டி.வாசுதேவனின் பிரபல நாவல் ரண்டாமூழம். மகாபாரதக் கதை பீமனின் கண்ணோட்டத்தில் சொல்லப்பட்டது இந்த நாவல். இந்த நாவலைத் திரைப்படமாக எடுக்க ஆசைப் பட்டார் படத் தயாரிப்பாளரும் இயக்குநருமான ஸ்ரீகுமார் மேனன். பிரபலமான விளம்பரப் படங்களை எடுத்தவர் இவர். வாசுதேவன் நாயரிடம் தனது ஆசையை அவர் வெளிப்படுத்த, வாசுதேவன் நாயர் தான் எழுதிய நாவலைத் திரைக்கதையாக்கித் தந்தார். நான்கு மாதங்கள் அவகாசத்தில் தனது 600 பக்க நாவலை 190 பக்கத் திரைகதையாக மாற்றித் தந்திருக்கிறார் வாசுதேவன் மேனன். சிறந்த தொழில்நுட்பத்தைக் கொண்டும் சிறந்த நடிகர்களை கொண்டும் இந்தப் படம் உலகளாவிய படமாக எடுக்கப்படும் என்றும், இரண்டு பாகங்களாக வெளிவரும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு 2018 செப்ரெம்பரில் தொடங்கப்படும் என்றும் தெரிவித்தார் ஸ்ரீகுமார் மேனன் தெரிவித்தார். இந்தி, தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் ஆங்கிலத்தில் உருவாகும் இந்தப் படம் 2020 ஆண்டு வெளி யாகும் என்றும் அவர் கூறியிருக்கிறார். இந்தப் படத்தில் உலகத்தின் சிறந்த நடிகர்கள் பல கதாப்பாத்தி ரங்களில் நடிப்பார்கள், எனவும் ஸ்ரீகுமார் தெரிவித்தார்.



# வெற்றியுடன் ஆரம்பித்தார் செரபோவா

இரண்டு வருடத் தடைக்காலத் துக்குப் பின்னர் தனது ரென்னிஸ் வாழ்க்கையை வெற்றியுடன் ஆரம்பித்தார் மரிய செரபோவா.

ஜேர்மனி ரென்னிஸ் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு (இலங்கை நேரப்படி) நடைபெற்ற ஆட்டத்தில் இத்தாலியின் வின்சியை எதிர்த்து மரிய செரபோவா மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற் இருவருக்கும் மிகவும் போராட்டமாகவே அமைந்தது. படாதபாடுபட்டு 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்றைக் கைப்பற்றினார் செரபோவா. இரண்டாவது செற்றில் வின்சி பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தவில்லை. 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்றைக் கைப்பற்றிய செரபோவா, முடிவில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார்.

செரபோவா - வின்சி இருவரும் இதுவரை மூன்று ஆட்டங்களில் விளையாடியுள்ளனர். மூன்றிலும் செரபோவாவே வெற்றிபெற்றார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடரில் செரபோவாவிடம் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரியில் மெல்டோனியம் என்ற தடை செய்யப்பட்ட மருந்து இருப்பது கண்டறியப்பட்டு அவருக்கு இரு வருடங்கள் தடை விதிக்கப்பட்டது. தடைக் காலம் முடிந்து நேற்றுமுன்தினமே அவர் தனது முதலாவது ஆட்டத்தில் களமிறங்கினார். மொத்தத்தில் அவர் தனது இரண்டாம் வருகையை வெற்றியுடன் ஆரம்பித்தார்.

``இதுபோன்ற வெற்றிகளை நான் இதற்கு முன்னர் ஏராளமாகச் சாதித்துள்ளேன். ஆனால், இது நீண்டகாலக் காத்திருப்புக்குப் பின்னர் கிடைத்த ஓர் வெற்றி. இது தனிச் சிறப்பு வாய்ந்தது. அடுத்தடுத்த தொடர்களை ஆவலுடன் எதிர்கொண்டுள்ளேன்" என செரபோவா தெரிவித்தார். (ம)





# போதிய பக்குவம் தற்போது இல்லை

## முழுநேரப் பயிற்சியாளர் விடயத்தில் ஜெயவர்த்தன வெளிப்படைப் பேச்சு

தேசிய அணிகள் மற்றும் கழகங்களுக்கு பகுதிநேர மற்றும் குறுங்காலப் பயிற்சியாளராக செயற்பட்டுவரும் மகேல ஜெயவர்த்தன, முழுநேரப் பயிற்சியாளராவதற்கு தனக்கு போதிய அனுபவம் இல்லை என்று தெரிவித்தார். இந்திய ஊடகம் ஒன்றுக்கு அண்மையில் வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

``ஓர் அணிக்கு முழுநேரப் பயிற்சியாளராவதற்கு உரிய பக்குவம் எனக்கு உள்ளது என்று கருதவில்லை. சில அணிகளுடன் குறுங்கால ஒப்பந்தங்களையே மேற்கொண்டுள்ளேன். 18 வருடங்கள் தொடர்சியாக விளையாடிய பின்னர் சில மாத அவகாசத்தில் முழுநேரப் பயிற்சியாளராவதென்பது மிகவும் கடினமானது. தற்போது என்னுடைய முக்கிய பொறுப்பு குடும்பத்துடன் நேரம் செலவிடுவதே" என மகேல மேலும் தெரிவித்தார்.

முன்னர் குறுங்கால அடிப்படையில் இங்கிலாந்து அணிக்காக துடுப்பாட்டப் பயிற்சியாளராகச் செயற்பட்ட மகேல, தற்போது நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு தலைமைப் பயிற்சியாளராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## அத்லெட்ரிகோ படுதோல்வி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையே நடைபெற்று வரும் லாலிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வில்லாரியல் அணியிடம் படுதோல்வி யடைந்தது அத்லெட்ரிகோ மட்ரிட்.


இரு அணிகளினதும் சிறந்த போராட்டத்துக்கு ஏற்ப கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 82 ஆவது நிமிடத்தில் வில்லாரியல் அணியின் ரொபேர்டோ முதல் கோலைப் பதிவு செய்தார். அதுவே ஆட்டத்தின் ஒரே கோலுமாக அமைந்தது. (ம)







# இந்திய அணியில் குழப்பம்



மினி உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணி இன்னமும் அறிவிக்கப்படவில்லை. இதனால் அணித் தெரிவு தொடர்பில் அங்கு குழப்பநிலை நிலவுகிறது என்று இந்திய ஊடகங்கள்செய்திவெளியிட்டன. இங்கிலாந்தில் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி மினி உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான அணிகளை நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமைக்கு முன்னர் அறிவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது பன்னாட்டு கிரிக்கெட் சபை. தொடரில் கலந்து கொள்ளவுள்ள 8 அணிகளில் 7 அணிகள் அறிவிக்கப்பட்டாயிற்று. இந்திய அணிமட்டும் இன்னும் அறிவிக்கப்படவில்லை. தற்போது ஐ.பி.எல். தொடர் நடைபெற்று வருவதால் இந்திய அணியின் தலைவர் கோலி, தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் ஓர் இடத்தில் ஒன்று கூடுவதில் சிரமம் உள்ளது என்று அவகாசம் கேட்டுள்ளது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை. (ம)

# ஐ.சி.சி. வருவாய் பங்கீட்டு விடயத்தில் மும்மூர்த்திகளின் ஆதிக்கம் முடிவு

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் வருவாயில் இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய கிரிக்கெட் சபைகளே பெரும் தொகைப் பணத்தை எடுத்துக் கொண்டன. இந்த முறையை உத்தியோகபூர்வமாக மாற்றி சமனான வருவாய்ப் பகிர்வு முறையை கொண்டுவந்தது பன்னாட்டு கிரிக்கெட் சபை.

கடந்த 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தத்தின் படி பன்னாட்டு கிரிக்கெட் சபைக்கு அதிக வருவாயை வழங்கும் கிரிக்கெட் சபைகளான இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இதன்படி வருவாய்ப் பகிர்வு, நிர்வாகம் ஆகியவற்றில் இந்த மூன்று சபைகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.



ஆனால் இந்த முறையை மாற்றி, சமனான வருவாய்ப் பகிர்வு முறையைக் கொண்டுவர ஐ.சி.சி. பரிசீலனை செய்தது. இந்தியா அதை எதிர்த்தது. இது தொடர்பான இறுதி வாக்கெடுப்பு துபாயில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பன்னாட்டு கிரிக்கெட் சபையின் முக்கிய கூட்டத்திலெடுக்கப்பட்டது. இந்தியாவுக்கு இலங்கை ஆதரவு வழங்கியது. ஏனைய சபைகள் சம வருவாய்ப் பகிர்வுக்கு ஆதரவு தெரிவித்தன. 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தத்தின்படி இந்திய கிரிக்கெட் சபைக்கு வந்து கொண்டிருந்த 570 மில்லியன் டொலர் வருவாய், தற்போது மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தத்தின்படி 290 மில்லியனாகக் குறைவடைந்துள்ளது. எனினும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை சமாதானம் செய்ய பன்னாட்டு கிரிக்கெட் சபை கூடுதல் நிதியை வழங்க முன்வந்துள்ளது என்றும் சில தகவல்கள் உலவுகின்றன. (ம)

## கில்லறி சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 28
முருங்கன் பொதுசன சேவைகள் விளையாட்டுக் கழகம் நடத்திய 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில், சாவற்கட்டு கில்லறி அணி சம்பியனானது.
முருங்கன் பொதுசன சேவைகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் முருங்கன் பொதுசன சேவைகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கில்லறி அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோலெதனையும் பதிவுசெய்யாததை அடுத்து சம நிலைத் தவிர்ப்பு உதைகளில் கிண்ணத்தை தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.
முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் கில்லறி அணி வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக கில்லறி அணியின் டிலக்கசன், சிறந்த கோல் காப்பாளராக முருங்கன் பொதுசன சேவைகள் விளையாட்டுக் கழக அணியின் சுரேந்திரன் ஆகியோர் தெரிவாகினர். (ம-23)


சுப்பர் சண் அணி

# வெளியேறியது சென். மேரிஸ்

யாழ்ப்பாணம், ஏப். 28
எவ்.ஏ. கிண்ணத் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டது நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி.
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. களுத்துறை பெர்னான்டோ விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து களுத்துறை சுப்பர் சண் விளையாட்டுக் கழக அணி மோதியது.
இரு அணிகளும் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. இதற்கேற்ப முதல் பாதியில் எந்த அணியாலும் கோலெதனையும் பதிவுசெய்ய இயலவில்லை. இரண்டாம் பாதியில் கோலொன்றைப் பதிவுசெய்து வெற்றிபெற்றது சுப்பர் சண் அணி. இதனால் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டது சென். மேரிஸ். (ம - 23)

## ஸ்பேஸ் அணி மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஏப். 28
கைதடி ரக்கஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.
ரக்கஸ் வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகமும் கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய வளர்மதி அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சாரு 28 ஓட்டங்களையும் ரகு 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் உமைசுதன், சதீஸ் இருவரும் தலா 3 இலக்குகளையும் ரகு 2 இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய ஸ்பேஸ் அணி 9.1 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 3 இலக்குகளால் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றயது. அதிகபட்சமாக டெஸ்மன் 30 ஓட்டங்களையும் மதுசன் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சிலா ரகு, செந்தூர் இருவரும் அதிகபட்சமாக தலா 2 இலக்குகளை கைப்பற்றினர். (ம-108)

## மறுமலர்ச்சி அணி வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஏப். 28
நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவு நடத்திய நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழக்களுக்கு இடையிலான தாச்சித் தொடரில் கோண்டாவில் மறுமலர்ச்சி அணி கிண்ணம் வென்றது.
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் கடந்த செவ்வாய்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில், கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. 14:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மறுமலர்ச்சி அணி வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 28
நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக இரு பிரிவாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் பி பிரிவு அணிகளுக்கான ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை குறித்த கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக பி அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23-108)



## மென்பந்து துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 28
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் 5, 10 மற்றும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரை விரைவில் நடத்தவுள்ளது. இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)



## வென்றது குஜராத்

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்றது குஜராத். இதனால் அந்த அணி தரப்படுத்தலில் கடைசி இடத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள டெல்லி அணி கடைசி இடத்துக்குப் பின்தள்ளப்பட்டது.
நாணயச் சுழற்சியில் வென்ற குஜராத் அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் 134 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக நெகி 32 ஓட்டங்களையும், கேதர் யாதவ் 31 ஓட்டங்களையும் சேர்த்தனர்.
பந்துவீச்சில் டை 3 இலக்குகளையும், ஜடேயா 2 இலக்குகளையும், தாம்பி, அன்கிட், பல்க்நெர் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய குஜராத் அணி 3 இலக்குகளை இழந்து 37 பந்துகள் மீதமிருக்க இலக்கை அடைந்தது. பின்ஞ் 72 ஓட்டங்களைக் குவித்தார். ரெய்னா ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களைச் சேர்த்தார். (ம)

# மேற்கிந்தியத் தீவுகளுக்குத் தண்டம்

பாகிஸ்தானுக்கு எதிராக கடந்த செவ்வாய்க்கிழமை நிறைவடைந்த டெஸ்ட் ஆட்டத்தில் பந்துவீச தாமதப் படுத்தியமைக்காக மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு தண்டம் விதிக்கப்பட்டது.

இந்த ஆட்டத்தில் 7 இலக்குகளால் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. முதலாவது இன்னிங்ஸில் பந்து வீசுவதற்காக கூடுதல் நேரம் எடுத்துக்கொண்டனர் என்று மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக மைதான நடுவர்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் விசாரணை நடத்திய பன்னாட்டு கிரிக்கெட் சபை ஒட்டுமொத்த அணிக்கும் தண்டம் விதித்தது. குறித்த ஆட்டத்துக்கான கட்டணத்தில் இருந்து



மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவர் கோல்டருக்கு 20 சதவீதமும், ஏனைய வீரர்களுக்கு தலா 10 சதவீதமும் தண்டமாக விதிக்கப்பட்டது.

தொடரில் மூன்று ஆட்டங்கள் முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றிபெற்றதால் அடுத்த இரு ஆட்டங்களில் கட்டாயம் வெற்றிபெ வேண்டும் என்ற சிக்கல் தீவுகளுக்கு உள்ளது. இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

(ம)

June மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ள
SLAS
போட்டிப் பரீட்சைக்கான இறுதிக் கருத்தரங்குகள்
பிரதி சனி, ஞாயிறு 9.00-2.00PM
விரிவுரையாளர்
> P.உமாசங்கர்
> P.கமல்தாசன்
மற்றும் நிபுணத்துவம் வாய்ந்த துறைசார் விரிவுரையாளர்
முற்றிலும் எதிர்பார்க்கை வினா, விடைகளை கலந்துரையாடப்படும்.
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ். நகர்
T.P.- 077 469 6695

புதிய பிரிவுகள் ஆரம்பம்
CERTIFICATE COURSE IN ENGLISH
14 Batches have successfully completed the courses
15th batch commences on 29th April 2017
Further Details:
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
0212223382/0212229149
(29464)(10)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1359
சீட்டிழுப்பு திகதி 2017.04.27
வெற்றி இலக்கங்கள்
08 50 52 60 F
ரூ. 10,835,580/-

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 643
சீட்டிழுப்பு திகதி 27.04.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
31 36 72 73 V
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.43, 303, 444/=
நீல நிற டிக்கட்டுக்கள் 29.04.2017 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

Development Fortune
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 35
சீட்டிழுப்பு திகதி 27.04.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
08 23 34 44 06 செப்.
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 10, 503, 734/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் 2, 876, 129/=
அடுத்த ஜக்பொட் 1, 086, 902/=
29.04.2017 திகதி சனிக்கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## நன்றி நவிலல்


பாசையூரைப் பிறப்பிடமாகவும் இல. 06, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது தாயார்

**சுவக்கீன்பிள்ளை அன்னம்மா**
**(பாலையா மலர்)**

அவர்களின் மரணநிகழ்வில் கலந்து கொண்டவர்கள் பதாதைகள் (பனர்) செய்தவர்கள், மலர்வளையங்கள் வைத்தவர்கள், ஆறுதல் கூறியவர்கள், பத்திரிகையில் அனுதாபம் தெரிவித்தவர்கள், இறுதித் திருப்பலி ஒப்புக்கொடுத்த அருட் தந்தை யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (29.04.2017) சனிக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆன்ம சாந்தி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 15.05.1933 — இறப்பு 21.04.2004

மண்கும்பான் 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்த

அமரர்
**ஐயம்பிள்ளை கந்தையா**

திதி: 28.04.2017

ஐயா நீங்கள் எங்களை விட்டுச் சென்று
பதின்மூன்று ஆண்டுகாலம்
ஒரு நொடிப் பொழுது போல்
ஓடி மறைந்து விட்டது ஐயா
பதின்மூன்று ஆண்டுகள் ஐயா
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம் துயரம் ஐயா!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இல.09, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


என்றும் நினைவில்
மனைவி, பிள்ளைகள்.

(J/8356)(10)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
SLAS
புதிய பிரிவு
பிரதி ஞாயிறு 9.00-4.00 மணி வரை
ஏனைய மூன்று பிரிவுகளும் வழமையான நேரத்துக்கு நடைபெறும்.
முகாமைத்துவ உதவியாளர்
மே இறுதி, யூன் ஆரம்பவாரங்களில் நடைபெறவுள்ளன.
மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு
ஞாயிறு 9.00-3.00
திறந்த பரீட்சைக்கு
பிரிவு I ஞாயிறு 11.30-3.00
பிரிவு II ஞாயிறு 01.00-4.30
பிரிவு III செவ்.புதன் 4.30-6.00
அபிவிருத்தி உத்தியோகத்தர்
சனி 10.00-2.00
தொடர்புகளுக்கு
076 688 3394/
021 222 3382
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்.

திரு.ஷாம்சன் அவர்களின்
SPOKEN ENGLISH
இம்முறை O/L,A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஒரெழுத்துந்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்-29.04.2017
1. காலை 08.00-10.00 — 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 — 4. மாலை 03.00-05.00
1. திங்கள், புதன் பிரிவுகள் - காலை 08.00-10.00
2. செவ்வாய்,வியாழன் பிரிவுகள் - காலை 08.00-10.00
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## கண்ணீர் மல்க நிற்கின்றோம்



எமது அன்புக்குரிய திருமதி சரோஜாதேவி ஸ்கந்தராசா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி வரதலட்சுமி கதிர்காமத்தம்பி**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தொலைவு மிக்க வழி நடந்தாய் அம்மா
துயரம் மிக்க நினைவு தந்தாய்
கூறும் ஆயிரம் கதை முடிந்ததோ?
குலவி அணைக்கும் பணி நிறைந்ததோ?
பாரெங்கும் உனை வாழ்த்திப் பாடும் அம்மா
பசி தீர்க்கும் கையென்று உலகு போற்றும்.

கி.மகேந்திரராஜா
கோகிலா மகேந்திரன் குடும்பம்

Special Promotion
NALIN Information Technologies Pvt Ltd
மாணவர்கள் மற்றும் அரச பணியாளர்களுக்காக hp யுடன் இணைந்து நளின் வழங்கும்
விசேட சலுகை
இச்சலுகை 29.04.2017 வரை மட்டுமே
Free Scratch Card for HP 15-AY103TX

HP 15-AY103TX
Processor 7th Gen Intel® Core™ i5-7200U 2.5Ghz
Hari disk 1TB
Ram 4GB DDR4
VGA AMD Radeon 2GB Graphic
Drive DVD+/-RW Optical Drive
OS Windows 10
Dimensions 15.6"
DTS Studio Sound
Wlan & Bluetooth
Rs.82,900/=

HP 250 G5
Processor 6th Generation Intel® Core™ i3 -6006U (2.0 GHz, 3 MB cache, 2 cores)
Hari disk 500 GB SATA
Ram 4 GB DDR3L-1600 SDRAM
Drive DVD+/-RW SuperMulti DL
OS Free DOS
Dimensions 15.6" LED HD Display
Wifi + Bluetooth
Intel® HD Graphics
Rs.52,900/=

HP 15-BA010AU
Processor AMD Quad-Core E2-7110 1.8 GHz Processor
Hari disk 500 GB
Ram 4 GB DDR3L-1600 SDRAM
VGA AMD Graphic
Drive DVD+/-RW Optical Drive
Dimensions 15.6"
OS Free DOS
DTS Studio Sound
Wlan & Bluetooth
Rs.41,900/=

Nalin Free
Hp Laptop Bag,
Mouse
Screen Protective Sticker

நிபந்தனை அடிப்படையில் 3 வருட உத்தரவாதம் வழங்கப்படும்
HP Authorized Business Partner in Northern Province
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
No. 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121
077 766 7975

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.